

புது எழுத்து











11

ஆசிரியர் மனோன்மணி ஏப்ரல் 2005

czslow milosz

தொன்னூறாம் ஆண்டு

சிஸ் மிலோஸ்

சிறிதும் நேரமில்லை, காலந்தாழ்த்தி வரும்
என் தொன்னூறாம் ஆண்டு

நான் உணர்ந்தேன் என்னுள் ஒரு கதவு திறக்க
நான் உள் நுழைந்தேன்

தெளிவு விடியலாக

ஒன்றன் பின் ஒன்றாய் என் பழைய
வாழ்க்கைகள் விட்டுச் சென்றன
கப்பல்கள் போல், சேர்த்தெடுத்துக்கொண்டு
அவற்றின் சோகங்களையும்

நாடுகள், நகரங்கள், பூங்காவனங்கள்
கடல்களின் வளைகுடாக்கள்

என் தூரிகைக்களுக்கானவை நெருங்கி வரவும்
இன்னும் சிறப்பாய் இப்போதே உடனடியாய் சித்தரிக்க
முன்பிருந்ததை விடவும்.

ஆங்கிலம் வழி தமிழில் **என்.எம்.பதி**

(நோபல் பரிசுக்கவி. 'காலந்தாழ்த்திக் கனியும்...'
கவிதைத் தொகுப்பு 2001லிருந்து. கவிதைத் தலைப்பு
மொழிபெயர்ப்பாளர் தந்தது. மூலத்தில் தலைப்பில்லை)

புது எழுத்து 11

இணைப்பிதழ்

ஆசிரியர்:
மனோன்மணி
ஆசிரியர் குழு:
சிபிச்செல்வன், ஜி.குப்புசாமி
ஆர்ட் எடிட்டர்:
ஜீ.முருகன்
பதிப்பாசிரியர்:
ஆர்.சுகவனம்
ஒளி அச்சு:
தே.சங்கர்
வடிவமைப்பு:
ஜீவா கம்ப்யூட்டர்ஸ், செங்கம்.
அச்சு:
செந்தில் அச்சகம், தருமபுரி
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
மனோன்மணி
39 ஜே.கே.சி தெரு,
காவேரிப்பட்டணம் 635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்.

ரூ.50



புது எழுத்து11

Published with financial Assistance from the Central Institute of Indian Languages (Ministry of Human Resources Development, Department of Secondary and Higher Education, Govt. of India) Manasagangotri, Mysore 570006. Vide Sanction lr No. 53-10(3) / 2004-2005/ LM/TAM/ Grant. dt.23rd Sep 2004 under the scheme of Grant-in -Aid to Little Magazine.



சூசன் சாண்டாக்

ஒரு வாசகனின் அஞ்சலி

சுகுமாரன்

சூசன் சாண்டாக், 28 டிசம்பர் 2004 செவ்வாய்க் கிழமை நியூயார்க் மருத்துவமனையில் காலமானார். முப்பது ஆண்டுகளாகப் புற்று நோயுடன் போராடியவரை எழுபத்தியொன்றாம் வயதில் மரணம் முழுமையாகத் தின்று தீர்த்துவிட்டது.

அயல்மொழி சிந்தனையாளர்களிலும் எழுத்தாளர்களிலும் என்னைக் கவர்ந்த சிலரில் சூசனும் ஒருவர். அறிவுத்தளத்தில் ஆவேசமாக இயங்குகிற பெரும் மூளைகள் பொதுவாக எனக்குள் ஒருவிதமான ஒவ்வாமையைப் பரவ விடுவதை உணர்ந்திருக்கிறேன். தர்க்கத்தின் அறுவை மேசை மீது வாழ்க்கையைக் கூறுபோட்டு ஆராய்வதில் எனது நுண்ணுணர்வு ஆயாசத்தையே அனுபவித்திருக்கிறது. சார்த்தர் முதல் தெரிதா வரையான சிக்கலான ஆளுமைகளை அறிமுகம் கொண்டதும் மானசீகமாகப் பல காதங்கள் விலகி ஓடியதுமுண்டு. மனசிலிருந்து கரங்களை விரித்து வரவேற்றுத் தழுவிக்கொண்ட சில ஆளுமைகளில் ஒன்றாக சூசன் சாண்டாக்கை அவரது எழுத்துக்கள் மூலம் ஏற்றுக் கொள்ளவும் முடிந்திருக்கிறது. கலைப் படைப்பை அலகு பிரித்து விளக்குகிற சிந்தனையாளராக அவர் இருக்கவில்லை என்பது இந்த மன இசைவுக்குக் காரணமாக இருக்கலாம். “ஒரு கலைப்படைப்பு என்பது இந்த உலகத்திலுள்ள ஒரு பொருள். அது வெறும் பிரதியோ உலகைப் பற்றிய விளக்கவுரையோ அல்ல” என்ற அவரது நிலைப்பாடு எனது சிந்தனைப் போக்குக்கு சவுகரியமானதாகவே தொடர்ந்து வந்திருக்கிறது.

நுட்பமும் நம்பகமானதும் கலையின் நெகிழ்வு தென்படுவதுமான ஒரு பார்வை சூசன் சாண்டாகுடையது. பெண் என்பதாலும் படைப்பெழுத்தாளர் என்பதாலும் இந்த இயல்பு அரவது பார்வையை நிர்ணயித்திருப்பதாகக் கருத்துக் கொண்டிருந்தேன் உண்மையான காரணம் அவரது சுதந்திரமான மனம் என்பது தொடர்ந்து அவரை வாசித்துப் புரிந்து கொண்ட சங்கதி.

சூசன் சாண்டாக் கிட்டத்தட்ட பதினேழு நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் பத்துப் புத்தகங்களையாவது நான் புரட்டிப் பார்த்திருந்திருக்கிறேன். ஐந்து புத்தகங்களை முறையாகவும் மற்ற ஐந்து புத்தகங்களை ஒற்றை வாசிப்பாகவும் படித்திருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது எழுத்துக்களின் திரட்டான 'சூசன் சாண்டாக் ரீடர்' கணிசமான காலம் எனது வேதப் புத்தகமாகவும் இருந்தது. நண்பர்கள் யாரிடமாவது தவறிப்போய் இரவலாகக் கொடுத்தாலும் வற்புறுத்தித் திரும்ப வாங்கிவிடுகிற புத்தகங்களில் அதுவும் ஒன்று. சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், ஆய்வு, நாடகம், திரைக்கதை, உரை பதிப்பு என்று எழுத்தின் சகல வடிவங்களையும் கையாண்டிருப்பவர் சூசன். அவ்வளவையும் கற்றுத் தேருவது அசாத்தியம் என்று சோம்பேறித்தனத்துக்குச் சாக்குச் சொல்லிக் கொள்வது பல சமயங்களிலும் இதமாக இருந்திருக்கிறது. அதை மீறி சூசனின் சில நூல்கள் எனக்குள்ளே ஊடுருவி அறிதலின் வரம்புகளை விசாலமாக்கியவை. கற்பனையின் எல்லைகளை விரிவாக்கியவை.

புகைப்படக் கலையை குறித்த சாண்டாகின் புத்தகம் (ஆன் போட்டோ - கிராஃபி) அந்தக் கலையைப் புதிய கோணத்தில் அறிமுகப்படுத்தும் நூல். அதன் ஒரு வரி யோசிப்பின் தீவிரத்தில் பல பொருள்களையும் தொடர் சிந்தனைகளையும் முன் வைக்கும். "புகைப்படங்களைச் சேகரிப்பதென்பது உலகத்தையே சேகரிப்பதுதான்" என்ற சூசனின் வரியை, சில மாதங்களுக்கு முன்னர் கண்ணூரில் நடைபெற்ற கேரள மாநில புகைப்படக் கலைஞர்களின் மாநாட்டில் மேற்கோள் காட்டிப் பேசப் போக எனக்குக் கிடைத்த கரகோஷம் பலமானதாக இருந்தது. அந்தக் கையொலிகள் எல்லாவற்றையும் அப்போதே காற்றில் சாண்டாகுக்கு அனுப்பி வைத்தேன். புகைப்படம் ஒரு நினைவு, காலத்திலிருந்து விண்டெடுத்த நொடிப் பிம்பம், ஓர் ஆவணம், என்று ஒரு முழுமையான படிமத்தை நிறுவியவர் சூசன். "நாம் பார்க்க விரும்புவது எதை, நாம் கவனிக்க வேண்டியது எதை என்று காட்சியின் இலக்கணம் உருவாக்கிய கலை புகைப்படம். அந்த இலக்கணமே காட்சியின் அறத்தை (Ethics of Seeing) நிர்ணயிக்கிறது" என்ற கருத்தாக்கம் தொலைத் தொடர்புகள் காட்சிப் படிமங்களாகச் சிதறிக்கிடக்கும் இன்றைய காட்சிப் படிமங்களாகச் சிதறிக்கிடக்கும் இன்றைய சூழலில் பரவலான அக்கறையைக் கோருவது.

சூசனின் இரண்டு நாவல்களை சிரத்தையாக வாசித்திருக்கிறேன் 'மரணப்பொறி' (Death kit) 'அமெரிக்காவில்...' (In America) இரண்டு நாவல்களைப் பற்றியும் இப்போது யோசிக்கும் போது தோன்றுவது இரண்டிலும் பொதுவான ஒரு கனவுத்தன்மை விரவியிருந்தது என்பதுதான். 'மரணப்பொறி' வாழ்க்கைப் பற்றிய கனவுகளையும் சாவையும் அவற்றுக்கிடையிலுள்ள உறவையும் பேசுகிறது. அமெரிக்காவில் ... நாவலின் கதை மையம் ஓர் உண்மை நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டது என்று

புத்தகத்தில் பார்த்ததாக நினைவு. போலந்திலிருந்து குடும்பத்துடன் அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியாவுக்கு வரும் ஒரு பெண்ணின் பயணம் அந்த நாவல். அமெரிக்காவில் ஒரு கனவுச் சமூகத்தை உருவாக்குவது அவள் நோக்கம். நோக்கம் சிதைந்து கலைந்து போன பிறகு மேடை நடிகையாக மாறுகிறாள் என்ற அடிப்படையில் கதைச் சரடு இழைந்து முறுக்கேற்றப்பட்ட நாவல். மேரினா சலேவ்ஸ்கா என்ற மையப் பாத்திரத்தின் வளர்ச்சியும் இயல்பும்தான் நாவலில் என்னை ஈர்த்த அம்சங்கள். ஹாலிவுட்டில் எந்த நடிகைக்காவது மேரினா சலேவ்ஸ்கா என்ற இயற்பெயருண்டா என்று ஆராய்ச்சி செய்ததும் வேடிக்கையான அனுபவம்.

மருத்துவ பரிசோதனையில் புற்று நோய் தன்னைப் பீடித்திருப்பதைத் தெரிந்து கொண்ட பின்னர் சூசன் எழுதிய நூல் “நோய் - உருவகமாக” (Illness As Metaphor) இந்த நூலில் அவர் முன்வைக்கும் வாதங்கள் தொந்தரவு செய்பவை. நோயை ஒரு தண்டனையாகவே எல்லாரும் கருதுகிறார்கள். அரசியல், ராணுவம் இன்னபிற அதிகார அமைப்புகள் நோயை செய்த தவறுக்குக் கிடைக்கும் தண்டனை என்றே சித்தரிக்கின்றன. இது ஓர் உருவகத்தை மனிதர்கள் மீது திணிப்பது. இந்த உருவகத்தை எதிர்ப்பதே உண்மையான தேவை. நோயினை முன்னிருத்தியும் பிரிவினைகள் உருவாவதையும் சூசன் சுட்டிக்காட்டுகிறார். நுரையீரல் புற்று நோய் மதிப்பிற்குரியதும், மலத்துவாரத்தில் வரும் புற்று நோய் அருவருக்கத் தகுந்ததுமாகக் கூறப்படுவதிலுள்ள அதிகார அரசியலை வகைப்படுத்தினார். இந்தியச் சூழலில் இந்தக் கருத்தாக்கத்துக்கு பொருத்தம் அதிகம் கூட.

புற்று நோயை மையப்புள்ளியாக வைத்து எழுதிய இந்நூலை பத்தாண்டுகளுக்குப் பின்பு எயிட்ஸைச் சார்ந்து விரிவுபடுத்தினார். புற்று நோயை விட, ஒழுக்கவியல் பார்வையில் அதிகம் சர்ச்சை செய்யப்படும் நோய் எயிட்ஸ்தானே.

சாண்டாகின் மிகப் பிரசித்தமான நூல் “விளக்கங்களுக்கு எதிராக மற்றும் கட்டுரைகள்” (Against Interpreation and Other Essays) ஒரு கலைப் படைப்பையோ கலாச்சார நிகழ்வையோ விளக்கவுரைகள் சுருங்கச் செய்துவிடுவதாக குறிப்பிட்டார். அதற்கு மாற்றாக ‘தெளிவு நிலை’யை (Transparency) நிறுவினார். ‘ஒரு பொருளை அதன் உயிரோடும் ஒளியோடும் அனுபவிப்பதே இந்த நிலை. ஒரு கலைப் படைப்பை உருவமும் உள்ளடக்கமுமாக அனுபவித்து உணர்வதில்தான் கலையின் பொருள் அடங்கியிருக்கிறது’ என்ற ஆதாரப் புள்ளியிலிருந்துதான் சூசன் தனது கருத்தாக்கத்தை விரிவாக்கினார். கலையின் மீது அறிவு நடத்தும் பழிவாங்கல் நடவடிக்கையே வியாக்கியானங்கள் என்ற அவரது கருத்து இப்போதும் வலுக் குன்றாமல் சிந்தனையில் தங்கியிருக்கிறது. பொதுவான மேற்கத்திய சிந்தனைப் போக்கின் எதிர் முனை இது. இதன் மாற்றுக் கோணங்களாகவே சூசன் சாண்டாகின் பிற துறை ஆய்வுகளையும் கொள்ள வேண்டும்.


எனது அபிமான எழுத்தாளர்களில் ஒருவரான ஆல்பெர் காம்யுவைக் குறித்த கட்டுரையான ‘இலட்சியக் கணவன்’ (The Ideal Husband) என்ற சூசனின் கட்டுரை கட்டுரையாளரை அணுக்கமாக்கியது. கட்டுரையில் பேசப்பட்ட

எழுத்தாளரை புதிய வெளிச்சத்தில் புரிந்து கொள்ள உதவியது. காம்யுவின் குறிப்பேடுகளைப் பற்றிய நூல் மதிப்புரையில் சூசன் பெரும் எழுத்தாளர்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறார். கணவர்கள், காதலர்கள். கணவர்கள் நம்பகமானவர்கள், புத்திசாலிகள், பரந்த மனம் கொண்டவர்கள், கண்ணியமானவர்கள். காதலர்கள் சுயநலமிகள், நம்பத் தகாதவர்கள், கொடூரர்கள். வாழ்க்கையில் போலவே கலையிலும் இந்த இரண்டு வகையினரும் தேவை. இதில் ஆல்பெர் காம்யு 'இலட்சியக் கணவன்'. கொடூரக் காதலனிலிருந்து நம்பகமான கணவனாகப் பரிணாம வளர்ச்சி பெற்றவர். 'மறுப்புவாதி' (Nihilist) யாகத் தொடங்கிய காம்யு பொது அறவுணர்வு சார்ந்த நுட்ப மனத்தினரானதாக மாறியதாக சாண்டாக் மதிப்பிடுவது கவனத்தை ஈர்த்தது. காம்யுவின் எழுத்துக்களில் நன்மை சுயேச்சையாகவே தனது செயல்பாட்டையும் தன் நியாயமான காரணத்தையும் தேட நிர்ப்பந்திக்கப்படுகிறது என்ற புரிந்து கொள்ளல் துல்லியமானதாக காம்யுவை மறுவாசிப்புச் செய்யும் சந்தர்ப்பங்களில் உணர வாய்த்திருக்கிறது.

முப்பது ஆண்டுக் காலமாக இரத்தப் புற்று நோயுடன் போராடிக் கொண்டே வாழ்ந்தவர் சூசன். நோயின் பசிக்கு தனது மார்பகத்திலொன்றை அறுத்துக் கொடுத்தவர். எனினும் வாழ்நாள் முழுவதும் அதைப் பொருட்படுத்தாமல் சமூக நீதிக்கான நிரந்தரப் போரில் ஈடுபட்டிருந்தார். வன்முறைக்கும் யுத்தத்துக்கும் எதிராக இயங்கியவர். போஸ்னியப் போரின்போது மூன்று ஆண்டுகளுக்கு மேல் யுத்தக்களமான சரெயெவோவில் வாழ்ந்தார். பெண்ணியவாதி, மனித உரிமைப் போராளி என்ற நிலையிலும் அயராது செயல்பட்டவர். சொல்லப்பட வேண்டியதை எந்த அதிகார பீடத்தின் முன்னாலும் சொல்லத் தயங்காதவர். செப்டம்பர் 11, 2001 சம்பவத்தை 'அமெரிக்காவின் கூட்டணியும் நடவடிக்கைகளும் விளைத்த வினை' என்ற சூசனின் கருத்து நாட்டையே உலுக்கியது.

அயல்மொழி எழுத்தாளர்களில் எனது நம்பகமான பரிந்துரையாளர்களில் சூசன் சாண்டாக் முக்கியமானவர். அவர் சிபாரிசு செய்து மதிப்புரைத்த புத்தகங்களில் பலவற்றைக் கருத்தூன்றிப் படிக்க முயன்றதுண்டு. சமீபத்திய அவரது பரிந்துரையின் பேரில் வாசிக்கத் தொடங்கிய நாவல் சிலி எழுத்தாளர் ராபர்ட்டோ போலானோ (Roberto Bolano) எழுதிய 'தொலைதூர நட்சத்திரம்' (Distant Star). நவீன சிலி இலக்கியத்தில் காத்திரமான செல்வாக்குச் செலுத்தியவர் போலானோ என்று சாண்டாக் கோடிக்காட்டியதில் சிக்கியவர் இந்த நாவலாசிரியர். சென்ற ஆண்டு மரணமடைந்துவிட்டார். சங்கோஜியும் நுண்ணுணர்வு மிகுந்தவனுமான ஒரு கவிஞன் சிலியின் சர்வாதிகாரி பினோஷேவின் விமானப் படையில் சேர்வதும் தேர்ந்த பாசிஸ்ட் கொலைஞனாக மாறுவதும் தான் நாவலின் கதைமையும். சூசன் பரிந்துரைத்திராவிட்டால் கவனத்தில் பதியாமற் போயிருக்கக்கூடும். நன்றி, சூசன் சாண்டாக், நன்றி.

(திண்ணை இணைய இதழிலிருந்து)



கௌரிராம்நாராயண்

தமிழ்த் தியாகய்யர்

சிவன் - நமது காலத்தின் அற்புத இசை மேதை

பொங்கும் நாத வெள்ளம்

மெலிந்த, குள்ளமான உருவம், மழிக்கப்பட்ட தலை, திருநீற்றணி துலங்க சமய ஈடுபாட்டைத் தெற்றெனக் காட்டும் முகம். உடையில் எளிமையிலும் எளிமை. தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாத கூச்ச சுபாவம் உடைய அவரை எந்த பஜனைக் கூட்டத்திலும் மிக எளிமையாக அடையாளம் கண்டு கொண்டிருக்க முடியும். அவர் பாடத் தொடங்கிவிட்டாலோ சிரித்த முகமானது செந்தழலாய் பிரகாசிக்க, அவரது அக ஆற்றலை வெளிப்படுத்தும். குறிப்பாக மார்கழியின் அதிகாலைகளில் மயிலைக் கோயிலின் மாட வீதிகளில் பஜனை செய்யும் பொழுது அதனைக் கண்டிருக்கலாம்.

தியாகய்யரின் நவரசக் கன்னடக் கிருதியான 'நினுவினாவை' இவ்வாறான ஒரு நிகழ்ச்சியில் சிவன் பாடியதைக் கேட்ட இளைஞர் ஒருவர் அதன் மரபு வழாத ராக பாவத்தில் மயங்கி இன்னொரு முறை பாடும்படி வேண்டிக்

கொண்டார். 'இதனைக் கேளுங்கள்' என்று புன்னகைத்தவாறு கூறிய அந்த வயதான மனிதர் கிழக்கு மாடவீதியும், மேல மாட வீதியும் கூடுமிடத்தே வெடிப்புறப் பாட ஆரம்பித்தார். 'நானொரு விளையாட்டு பொம்மையா? என

பாபநாசம் சிவனுக்குக் கிடைத்த அருளானது அவரை இந்நூற்றாண்டின் மாபெரும் சாகித்யக்கர்த்தாக்களுள் ஒருவராக ஆக்கியது. அப்பழுக்கில்லாத பக்தியாலும் லெகீகத்தின் வசீகரத்தில் அகப்படாமலும் எளிய வாழ்க்கை வாழ்ந்த அவரை சங்கீத மும்மூர்த்திகளான தியாகய்யர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோரின் பாரம்பரியமான பக்தி, சரணாகதி ஆகியவற்றில் ஆழ்த்தி மனிதரையும் கடவுளையும் அணுகுபவராக ஆக்கியது. எனவே தான் தற்கால வித்வானான சிமிழி சுத்தரமய்யர் அவருடைய முதல் சாஹித்யத்தைக் கேட்ட பொழுது 'தமிழ்த் தியாகைய்யர்' எனக் கொண்டாடினார். சிவனின் முதலாவது ஸாஹித்யம் 'உன்னைத் துதிக்க வரம் தா' குந்தளவராளி ராகத்தில் அமைந்ததாகும்.

'பிறருடன் ஏன் ஒப்பிட வேண்டும்?' என் செம்மங்குடி சீனிவாசய்யர் கேட்கிறார். 'நமது காலத்தில் தனித்தன்மை வாய்ந்த ஒப்பிட முடியாத அற்புதமேதை' அவர் பாடினால் வெளிப்படும் பாவத்தில் உங்கள் இதயம் உருகிப் போய்விடும் என்கிறார் அவர்.

இசை மேதை டைகர் வரதாச்சாரியார் சிவனுடைய பக்தியையும் மேதமையையும் அங்கீகரித்து இருக்கிறார். அவர் எழுதுகிறார் : பல சமயங்களில் பேரானந்தத்துடன் ஆன்மாவைத் துளைக்கிற தமிழ் மற்றும் சமஸ்கிருத ஸாஹித்யங்களைக் கேட்டு பரவசமடைந்திருக்கிறேன். அவரின் தங்கு தடையற்ற வெளிப்பாடும் பாணியும் என்னை மிகவும் கவர்ந்தவையாகும். சாஹித்யக்கர்த்தாவின் உள்ளத்தை உயிர் துடிப்புடன் காட்டும் அதே புத்துணர்ச்சி குலையா மெருகுடையவை அவரது உருப்படிகள் ஆகும்." இத்தகைய திறன்களெல்லாம் அவரின் நீண்ட வாழ்நாளிலேயே பாரோரால் முழுமையாய் அங்கீகரிக்கப்பட்டு போற்றப்பட்டன. இன்றுள்ள மூத்த இசைக் கலைஞர்கள் அனைவரும் அவருடைய பாடல்களை சாஹித்யக்கர்த்தாவான அவரிடமே பயிலும் வாய்ப்பு பெற்றனர். இதற்கு முன்னோ வேறெந்த தமிழிசைப் புலவரிடமிருந்து இவ்வாறு பாடல்கள் வெளிப்படவில்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

சங்கீத சாம்ராட்டுகளான அரியக்குடி ராமானுஜய்யங்கார், முசிறி சுப்பிரமணி ஐயர், மதுரை மணி ஐயர், ஜி.என். பாலசுப்பிரமணியம், துறையூர் இராஜகோபால சர்மா, டி.கே. பட்டம்மாள் மற்றும் பலர் அவரது பாடல்களை மேடைகளில் அடிக்கடி பாடி மகிழ்ந்து மக்களையும் மகிழ்வித்தனர். அவர்களுடைய நட்பையும் அவர்களால் மதித்து போற்றும்படியான பேறும் பெற்றவர் சிவனாவார். மத்தியமாவதி ராகத்தில் அமைந்த 'கற்பகமே' என்ற சாஹித்யத்தை லால்குடி ஜெயராமனின் அற்புத வில்லினின்று நாதமாய் பிரவகிக்கும் பொழுது ஊனை உருக்கும் அதன் தன்மையை நம்மால் உணர முடியும்.

உயர்ந்த ரசானுபவம்

ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் வெறும் குறியீடுகள் மூலமாக மட்டும், சிவனின் பாடல்களை அறிந்து பாடக் கூடாது என எச்சரித்திருக்கிறார். சிவனுடைய ராகானுபவத்தையும் கிருதியை செய்திருக்கிற ரசானுபவத்தையும் உணர்ந்து பாடுவது என்பது தக்க ஒத்திகைகளும் முன் பயிற்சியுமின்றி இருப்பின் எளிதல்ல என்கிறார். சிவனுடைய படைப்புகளால் தமிழிசை இயக்கம் வளமடைந்தது. தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழிகளில் இலக்கிய வடிவங்களின் ஆழத்தையும் திட்பத்தையும் தமிழ்க் கருவூலம் பெற்றது. நல்ல தமிழ் உருப்படிகள் இல்லை என்ற பாடகர்களின் புகார்கள் இல்லாது போயின. அவர்களுக்கு அவரிடமிருந்து வர்ணம், கிருதி, கீர்த்தனம், பதம், தரு, இராகமாலிகை, விருத்தம், தில்லானா, நொண்டிச்சிந்து மற்றும் மங்களம் ஆகிய இசைப்பா வகைகளில் பாடல்கள் பாடக் கிடைத்தன.

தஞ்சை மாவட்டத்திலுள்ள போலகம் என்ற கிராமத்தில் பழைமயான பிராம்மண குடும்பத்தில் 1890-ஆம் ஆண்டு பிறந்தார். சிவனின் இயற்பெயர் இராமையா. சிறு வயதிலேயே தந்தை இராமகிருஷ்ண ஐயரின் இழப்பானது குடும்பத்தை திருவனந்தபுரத்திற்கு பெயரச் செய்துவிட்டது. சிவனின் இசைத்திறனானது அவரின் மாதா மகரிடமிருந்து கிட்டி தாயார் யோகாம்பாள் மூலமாக செறிவூட்டப்பட்டது. பல்வேறு வகைகளில் எண்ணிறைந்த பாடல்களைத் தம் அன்னையிடம் இருந்தே அவர் கற்றுக் கொண்டார். பிறகு நூரணி மகாதேவர் மற்றும் சம்பு பாகவதர் ஆகியோரிடம் சாஸ்திரிய சங்கீதத்தில் பயிற்சி பெற்றார். எனினும் தீட்சை பெறுவோர்க்கான கட்டம் கட்டமான பயிற்று ஒழுங்கான வகைகளில் சூழ்நிலையால் அது அவருக்கு கிட்டாமல் போயிற்று.

ஊனில் கலந்த இசை

என் இரத்தத்திலேயே பஜனையுடன் நான் பிறந்தேன் என்று கூறிய அவர் சுத்த கர்நாடக பாரம்பரிய இசையை சம்பிரதாய முறையில் எண்ணற்ற பாடல்களைக் 'கவனம்' செய்து பஜனைகளில் பாடியது போற்றுதற்குரியது ஆகும். நீலகண்ட சிவன் பஜனைக் கோஷ்டிகளை வழி நடத்துபவராகவும் பாடகராகவும் பல்வேறு கலைஞர்களுக்கு ஆதர்ஸ புருஷராகவும் விளங்கினார். முகாரி ராகத்திலமைந்த 'என்றைக்கு சிவகிருபை' என்ற பாடலும் 'நவசித்தி பெற்றாலும்' என்ற பாடலும் அவர் வாழ்வைப் பிரதிபலித்தன. திருவனந்தபுரத்திலுள்ள மஹாராஜா சமஸ்கிருதக் கல்லூரியில் உபாத்தியாயர் பட்டத்தைப் பெற்றாலும் கல்வியை தொடர இயலாமல் போயிற்று.

1910-ல் தமது அன்னை இறந்த பின் இராமையா நாடோடியாக கோயில் கோயிலாகத் திரிய ஆரம்பித்தார். தம்மை மறந்து கடவுள் முன் பாடி உருகினார். நாகப்பட்டினம், கோவிந்தபுரம் போதேந்திர ஆராதனையில் ஆடிப்பூரத்தன்றும், திருவையாறு சப்தஸ்தான விழாவிலும் திருவிசை நல்லூர் கொண்டாட்டத்திலோ அல்லது திருவாரூர் உற்சவத்திலோ இராமையா ஊனுருக உள்ளுருகப் பாடியதை அச்சமயங்களில் காண முடிந்திருக்கலாம்.

மருதநல்லூர் சத்குரு சுவாமி மடத்திலிருந்த நாம சித்தாந்தவாதிகள் மூலம் சம்பிரதாய பஜனை முறைகளை நன்கு அறிந்து கொண்டனர். ஜயதேவரின் அஷ்டபதிகளை கர்நாடக இசை வடிவில் சாஸ்திரிய சங்கீத அடிப்படையில் அறிந்ததும் அங்குதான். அவரது சஞ்சீவினி அஷ்டபதியை முகாரி ராகத்தில் 'சாருஷீலே' வில் பாடக் கேட்டவர்கள் அச்சுகானுபவத்தை மறக்கவியலாப் பிரகாசத்துடன் என்றும் சிந்தையில் நின்றொளிர்வதை உணர்வார்கள். (கலாஷேத்ராவின் நாட்டிய நாடகமான 'கீத கோவிந்தம்' கூட சிவனால் கற்பிக்கப்பட்ட சம்பிரதாய அடிப்படையில் அமைந்ததாகும்).

அவர் எவ்வாறு சாதகம் செய்தாரோ அவ்வாறே பஜனை பத்ததிகளை முழுமையாக சாஸ்திரிய கர்நாடக சங்கீத வழிமுறையில் - தொடர்ந்து வரும் பெரும் புகழ் மிகு கிருதிகள் விருத்தங்களுக்கு இடையே எளிய கீர்த்தனைகளும், நாமாவளிகளும் அமையுமாறு மாலையாக்கினார். எனவே தான் எந்த நிகழ்ச்சி அமைப்பு முறைகளுமின்றியே அவரால் மேன்மையான இசைக் கலைஞராக பரிமளிக்க முடிந்தது. கணபதி அக்ராஹரத்து சிவன் கோயிலில் கடவுளை நோக்கி இராமையா கதறிய குரலில் உருக்கம் சிவன் என்ற பெயரை அவருக்கு சம்பாதித்துத் தந்தது. அப்பாடலில் கடவுளுடன் ஐக்கியமான நிலையில் நின்றிலங்கியமையால் சிவனானார். இராமையா சிலகாலம் பாபநாசம் ஊரில் வசித்ததால் பாபநாசம் சிவன் என்று பெயராகி நிலைத்தது. ஆனால் இராமையா தன் பாடல்களில் முத்திரையாகப் பாடிப்பதித்த 'இராமதாசர்' என்ற பெயரில் சிரஞ்சீவியாக விளங்குகிறார்.

சங்கீத சிம்மமான கோனேரிராஜபுரம் வைத்திய நாதய்யரையே தன் மானசீக குருவாக சிவன் கருதினார். அவருடைய கச்சேரிகளில் கலந்து கொள்ள சிவன் தவறியதே கிடையாது. அச்சமயங்களில் பாகவதர் சிவனிடம் சில உருப்படிகளை மேடையில் பாடும்படி கேட்டுக் கொள்வார். சில நேரங்களில் சிவன் தமது சாஹித்யிங்களைத் தாமே பாடுவார். (விசேச வேண்டுதல்கள் வந்தாலொழிய சிவன் தமது உருப்படிகளை கச்சேரிகளில் பாடியதில்லை) நாட்டை உலுக்கிய அப்போதைய அரசியல் சூழ்நிலையால் சிவன் பாதிக்கபட்டாரா தேசியத் தலைவர்களான காந்தி, சுப்பிரமணிய பாரதி போன்றவர்கள் மீதான ஒரு சில பாடல்களுடன் காங்கிரஸ் கூட்டங்களில் தேசப்பக்திப் பாடல்களைப் பாடியிருக்கிறார். பிற்காலத்தில் தம் ஆளுமை எதிரொலிக்கும்படியாக காந்தீய குணாம்சங்களான அஹிம்சை, மனிதாபிமானத்தை எடுத்துக்காட்டும்படி 'தியாக பூமி' என்னும் சமூக, அரசியல், சீர்திருத்தப் படத்தில் சம்புசாஸ்திரி வேடந்தாங்கி நடித்தார்.

சென்னை கபாலீஸ்வரர் ஆலயமே சிவனின் மனவெழுச்சிக்கு ஆதார மையமாக விளங்கியது. அவருடைய மார்கழி மாதத்து அதிகாலை பஜனைகள் மற்றும் உத்ஸவ காலங்களில் அவர் பொழிந்த இசை பெருங்கூட்டத்தைக் கவர்ந்திழுத்தது. ஒரு சமயம் தியாகய்யரின் கிருதி ஒன்றை சிவன் பாடிக்கொண்டிருந்த பொழுது அப்பாடலைத் தொடர்ந்து வாசித்து வந்த பெரும் புகழ்படைத்த திருவாடுதுறை இராஜரத்தினம்பிள்ளை தனது நாதஸ்வரத்தை தன் உதவியாளரிடம் கொடுத்துவிட்டு சிவனை நோக்கி ஓடோடிச் சென்று தெருவின் மத்தியிலே அவரின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணக்கம் செய்தாராம்.

அடையாறில் அரங்கக்கலைக் கல்வியில் சிவனுடைய உதவியை ருக்மணி தேவி 1936ல் கோரினார். இந்தியப் பண்பாட்டின் கூறுகளான வினயம், வித்யா மற்றும் பக்தியில் வாழும் உதாரணமாக சிவன் விளங்குவதையும் ருக்மணி தேவி உணர்ந்திருந்தார். சிவன் பெசண்ட் நினைவுப் பள்ளியில் சமஸ்கிருதத்தையும் சங்கீதத்தையும் போதிக்கத் துவங்கினார். 'இனியொரு கணம்' (ஸ்ரீ ரஞ்சனி), 'சகல புவன நாயக' (கேதாரம்), 'கடைக்கண் நோக்கி' (தோடி), 'தேவி மீனாட்சி' (கல்யாணி) ஆகியன ஒலிக்கத் துவங்கின. இச்சங்கீதப் பயிற்சி நிகழ்ச்சிகளில் ஒவ்வொருவரும் தவறாது பங்கு பெற்றனர். சிவனின் முதல் குழந்தையும் தத்தித் தத்தி தளிர்நடை நடக்கும் மழலைச் செல்வமுமான கற்பகம் தன் தந்தையுடன் சேர்ந்து அப்பொழுது பாடுவாள். அவளின் எதிர்பாராத திடீர் மரணம் 'கற்பகமே' என்ற மத்யமாவதி ராக கீர்த்தனையாக கலாஷேத்ராவில் பிறந்தது. சிவனின் மற்ற குழந்தைகளான நீலா, கிருதிவாசன் மற்றும் ராமதாஸ் ஆகியோருடைய பெயர்கள் ருக்மணி தேவி இட்டதே. பின்னர் இளைய பெண்ணிற்கு ருக்மணி தேவியின் நினைவாக அவரது பெயரையே வைத்தார் சிவன்.

'தென்னிந்தியாவில் அவரைப் போல தம் பாடல்கள் மூலம் இசையின் உயிராகவே வாழ்பவர் எவருமில்லை' என்றார் ருக்மணி தேவி. 'நாட்பட நாட்பட சங்கீதத்தின் உச்ச சிகரங்களுக்கு உயரவும் மாணவியான எனக்கு எனது சங்கீதப் பாடல்கள் யோகமாகவே மாறின. அவரது சொந்த சாஹித்யங்களாகட்டும் பெரும் வாக்கேயக்காரர்களான தியாகய்யர் போன்றவர்களின் கிருதிகளை இசைப்பதிலாகட்டும் எனதுயிர்த் துடிப்பை அசைத்த பக்திப் பரவசத்தை நான் உணர்ந்தேன்' எனவும் ருக்மணி தேவி கூறினார்.

ருக்மணி தேவியின் நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பாடவும் சிவன் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டார். வைதீக பிராம்மணர் ஒருவர் அவ்வாறு செய்தது அதுதான் முதன் முறை. 'ஏல நீ தயராது' (அடாணா)வும் அருணாசலக் கவியின் 'ஏன் பள்ளி கொண்டீரைய்யா' (மோஹனம்) விற்கும் ஸ்வர, ஜதிகளை வகுத்துக் கொடுத்தார்.

ஆதர்ஸ கலைஞர்

புதிய சங்கதிகளுக்கு இணைய புதிய சஞ்சாரங்களுடன் ஒவ்வொரு மாலையும் சிவன் பாட ருக்மணி தேவி நடனமாடி இருக்கிறார். நிறுவனத்தை விட்டு 1939ல் சிவன் வெளியேறிவிட்ட பின்னும் கூட அவரது ஒத்துழைப்பு தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. கிருஷ்ண மாரி, கண்ணப்பர் குறவஞ்சி, சாகுந்தலம் மற்றும் கூர்மாவதாரம் என இசை நாடகங்களாகவும் மலர்ந்தன. அவற்றுள் 'ஆண்டாள்' இசையும், பாடல்களின் நயமும், நாட்டிய வெளிப்பாட்டிற்கும் அற்புத உதாரணமாகத் திகழ்கிறது இன்றும்.

'சீதா கல்யாணம்' சினிமாப் படத்தில் பாடல்களை இசையுடன் தந்ததின் மூலம் சிவன் சினிமா உலகில் பிரவேசித்தார். தொடர்ந்து ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களை எழுதினார். அவற்றுள் என்றும் நினைவில் நிற்கும் சினிமாக்கள் 'அவ்வையார்' 'நந்தனார்' ஆகியனவாம். அப்பாடல்களுள் ஒரு சில இன்றும் சாஸ்திரிய சங்கீதக் கச்சேரிகளில் தொடர்ந்து வரும்

தலைமுறைகளால் மேடையில் பாடப்பட்டு வருகின்றன.

('மா ரமணன்' - இந்தோளம், 'இஹ பரம் எனும்' - சிம்மேந்திரமத்யமம்).

எளிமையும் சாந்தமும்

இந்த ஆரவார உலகில் சிவனுடைய ஆர்ப்பாட்டமின்மையும் எளிமையையும் சாந்தத்தையும் அவரது பாடல்களை 'சேவாசதனம், சாவித்ரி, சாகுந்தலம், மீரா' ஆகிய படங்களில் பாடிய எம்.எஸ். சுப்புலக்ஷ்மி நினைவு கூர்கிறார். தேவையான சமயத்தில் உடனடியாக எழுதவும் பொறுமையுடன் சொல்லித்தரவும் அவரால் முடிந்தது. 'கார்த்திகேயா காங்கேயா' (தோடி), 'சிக்கல் மேவிய' மற்றும் 'கதிர்காமா' (காம்போஜி), 'சரவண பவா' (மத்யமாவதி) ஆகிய சங்கீத உருப்படிகளை எம்.எஸ். கற்றுக் கொண்டார். அவற்றின் இசை அருமையையும் எம்.எஸ். நன்குணர்ந்திருந்தார். சிவனுக்கு உதவிகரமாக அவரது குரல் இல்லையெனினும் இசையினை அசாதாரணமாகக் கொணர்ந்ததும் மின்னலடிக்கும் புதிய சங்கதிகள் தொடர்ந்து வந்ததையும் சொல்லலாம். மிகுந்த கூர்மையும் உணர்ச்சிப்பாடும் உடையவரே அவ்விசை நுட்ப வேறுபாடுகளை அறிய முடியும் என்றார் எம்.எஸ்.

குபேரகுலேசா, குலேசா, பக்தசேதா மற்றும் தியாகபூமி ஆகிய திரைப்படங்களில் சிவன் பிரதான வேடங்களில் நடித்தார். பாபநாசத்தில் இதற்கு முன் நாடகக் கம்பெனியில் நடித்த முன் அனுபவமும் அவருக்கு இருந்தது. எனினும் இப்பொழுது அது முழுத் தொழிலாகவும் கௌரவம் மிக்கதாகவும் குசேலாவில் மாறியது.

சிவன், தாமே பின்னணிப் பாடகராக இருந்தும் கூட நாடறிந்த நட்சத்திரங்களுக்கு பயிற்சி அளித்தும் இருக்கிறார். எம்.கே. தியாகராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா, என்.சி. வசந்த கோகிலம், அஸ்வத்தாமா ஆகியோரே அவர்கள்.

சிவனைத் தம்முடைய திருவனந்தபுரம் வீட்டில் தங்க வைத்து கல்கி வார இதழுக்காக அவரது சாஹித்யங்களை செம்மங்குடி சீனிவாசய்யர் ஸ்வரப்படுத்தினார். 'எந்த வரியையும் ஒரே மாதிரி இருமுறை சிவன் பாடியதில்லை' என்கிறார் செம்மங்குடி. ஏனெனில் முதாவதாக சிவன் மாபெரும் கற்பனா வளம் உடையவர். அடுத்ததாக தமது குரலின் தடைகளை மீறி அவரின் இசை பெருகல். அது பின்னர் வெளிப்பாட்டின் ரத்தினங்களாக ரவை உதிரும். எனது சக வித்வானான கே.எஸ். நாராயணசாமியுடன் நானும் சேர்ந்து கொண்டு ஒரே சமயத்தில் ஸ்வரங்களைக் குறித்துக் கொள்வோம் எந்த பாவமும் தவற விடாதவாறு எனக் கூறியுள்ளார் செம்மங்குடி சீனிவாசய்யர். மேலும் குறிப்பிடுகிறார்: தற்கால சாஹித்யக்கர்த்தாக்கள் அரிய ராக வடிவங்களில் ஈடுபடுவதைப் போலல்லாமல் எல்லோருக்கும் பரிச்சயமான 'ரக்தி ராகங்'களிலேயே சிவன் பெரும்பாலானவற்றைப் படைத்தார்.

புதுமுறைகள்

பழைய விஷயங்களை வைத்துக் கொண்டு தமது திறத்தால் புதிய முறைகளைக் கண்டமைத்தார் சிவன் என்பது எல்லோராலும் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. தோடி, காம்போஜி, பிலஹரி, வராளி மற்றும்

மோஹனம் ஆகிய ராகங்களில் அமைந்த பெரும் வாக்கேயக்காரர்களின் உயர்ந்த சாஹித்யங்களை துஷ்பிரயோகம் செய்வது போல பலர் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பரவலான அபிப்பிராயம் இருந்த காலத்தில் அவற்றின் மெருகேறும்படி புகழ் பெருகும்படி புத்தப் புதியதாய் பரிமளக்கச் செய்தார் சிவன். 'காணக் கண் கோடி' (காம்போஜி) 'ஆண்டவனே' (சண்முகப்ரியா), 'கா வா வா' (வராளி) 'சிதம்பரம்' (கல்யாணி) அல்லது 'குன்றம் குடிகொண்ட' (தோடி) ஆகியவற்றில் சிவன் சாதித்த அருமையும் அழகும் உள்ளுருக்கும் நயமும் மேம்பட்ட அலங்காரத்துடன் திகழுபவற்றை யாரே பயங்கலந்த மரியாதையுடன் உணரத் தவறுவர்? அல்லது சிவனது தனித்தன்மையும் சிறப்பும் திறமும் விளங்கும்படி வகை வகையாய் ஒரே ராகத்திலமைந்த பல்வேறு வழிகளில் பாடக்கூடிய பல சாஹித்யங்களைத் தருவதுதான் என்ன எளிதா? இல்லை மாண்ட், செஞ்சுருட்டி, ஹம்சநாதம் மற்றும் பெஹாக் ஆகியவற்றின் எளிய சுருதிகளை எச்சரிக்கையுடன் சிவன் தவிர்த்து விட்டாரா?

சிவனுடைய கடைசி சீடர்களுள் ஒருவரான எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் விளக்குகிறார்: எனது குரு நாலுகட்டை சுருதியில்தான் பாடுவார். தொண்டை கட்டியிருந்தாலோ அல்லது கடும் ஜலதோஷம் பிடித்திருந்தாலோ கூட அப்படித்தான். கீழ் ஸ்தாயிகளைப் பற்றி நான் கூறினால் அவர் பதிலளிப்பார் 'வேதங்கள் (ஸ்ருதி) நான்கு' என்று. சொற்களை சரியாக உச்சரித்து பாடுவதும் சப்தமானது அடி வயிற்றினின்று எழும்பி இதயத்தை பரவசமாக்கி மனதை நிரப்பும். சில தருணங்களில் ஆழ்ந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் 'அம்பா' அல்லது 'ஈசா' எனக் கரையும் பொழுது அவர் குரல் நடுக்கத்துடன் சேதமுறாத சக்தியுடன் ஒலிக்கும். அதுதான் அவரது ஆற்றலின் ஒரு மின்னல் வீச்சு.

சிவனருட் செல்வர்

சிவனது புதல்வி ருக்மணி கூறுகிறார் எதிர்வரும் மாதங்களில் பஜனைகள், இசை நிகழ்ச்சிகள் நடத்துதல் பற்றி தனது தந்தையின் உழைப்பை. அடிக்கடி எதிர்பாராத விருந்தாளிகளின் விஜயங்களை உள்ளிட்டதாக இருந்தது அவரது வாழ்க்கை. அப்பா என்னை நடுஇரவில் எழுப்பி புதிய சாஹித்யத்தை எழுதிக் கொள்ளச் செய்வார். இப்படி பல சமயங்கள் நிகழும். பிறகு பல்வேறு கட்டங்களில் படிப்படியாக அவையும் மெருகேறி ஜொலிக்கும்படி திருத்தம் பெறும்.

சிவன் தமது தாய்மொழியில் எவ்வித மொழியியல் கல்வியறிவினையும் பெற்றிருக்கவில்லை. எனினும் திருப்புகழ், திருவருட்பா, திருவாசகம் மற்றும் திருத்தாண்டகம் ஆகியவற்றை திரும்பத் திரும்பப் பாடி பரவியதால் அவரது மனம் 'பண்'பட்டு நின்றது. எவ்வித முன்னேற்பாடுமின்றி இயற்கையாக படைப்புலகில் ஆழவும் உடனடியாக ஒன்றி இயங்கவும் முடிந்தது. அவரது மொழி எளிமையானது மட்டுமல்ல அவரது சாஹித்யங்கள் பல்வேறு தெய்வங்களைப் பாடிக் கனிந்தவை தத்துவ தரிசனம் கொண்டவை. கல்வியியலாளர்கள் அவற்றைக் கவிதையென தரப்படுத்த ஒப்பாவிட்டாலும் அவை அவற்றின் இசையினாலேயே கவிதையாயின. சந்தச் சொற்றடுக்கைத் தள்ளி சமஸ்கிருதத்திலும் சாஹித்யங்களை இயற்றியிருக்கிறார் சிவன்.

(பாபநாசம் சிவன் நூற்றாண்டை ஒட்டி எழுதப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி.)

தமிழில் **பினாகினி**

பியேர் ரெவெர்தி

(1889–1960)



'இல்லாததில், இல்லாது இருப்பதில், நம்மிடம் இல்லாததில், நாம் இழந்திருப்பதில் இருக்கிறது கவிதை. நமக்கும் இல்லாதிருக்கும் யதார்த்தத்திற்கும் இடையில் இருக்கும் இணைப்பு கவிதை' என்று கூறிய பியேர் ரெவெர்தி, பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர். கிராமப்புற நிலப்பரப்பின் மீதும், கடலின் மீதும் தீராத காதல் கொண்டவராக, 1910 லிருந்து 1926 வரை பாரீஸ் நகரத்தில், இயல்பான நிலை இழந்து வாழ்ந்தவர். 1926-இல் சொலெஸ்ம்ம் **(solesmes)** என்ற இடத்தில் உள்ள மடத்தில் சேர்ந்து, இறக்கும்வரை அங்கேயே இருந்தவர். சர்ரியலிஸத்திற்கு வழி வகுத்த கவிஞர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர்.

தாங்க முடியாத இடைவெளியுடன், தொடர்ந்து ஆங்காங்கு தெறித்துக் கொண்டிருக்கும் நீர்த்துளிகளாக , இழப்பையும் வெறுமையையும் தனிமையையும் முன் வைக்கின்றன பியேர் ரெவெர்தியின் கவிதைகள்.

ONE HUNDRED POEMS FROM THE FRENCH, KENNETH REXROTH, PYM-RANDALL, CAMBRIDGE, MASSAC HUSETTS, 1972.

THE PENGUIN BOOK OF FRENCH POETRY, 1820 - 1950. WITH PROSE TRANSLATIONS, SELECTED, TRANSLATED AND INTRODUCED BY WILLIAM REES, PENGUIN BOOKS, LONDON. 1992. FIRST EDITION 1990.

PIERRE REVERDY. SELECTED POEMS TRANSLATED BY JOHNASH BERY, MARY ANN CANS, PATRICIA TERAY. BLOOD AXE BOOKS, NEW CASTLE UPON TYNE, 1991.

இங்குள்ள சில கவிதைகள் சில வருடங்களுக்கு முன் 'நிறப்பிரிகை' இலக்கிய இணைப்பு' ஒன்றிலும் 'தலித்' இதழிலும் வெளியாகியுள்ளன.

ஆங்கிலம் வழி தமிழில் : கண்ணன். **M**



திறந்தும் திறக்காமலிருக்கும் கண்கள்
மறுகரையில் அந்தக்கரம்
வானம்
அனைத்தும் நிகழ்கிறது அங்கு
சாயும் கதவு
ஒரு சிரம் வெளி நீள்கிறது
சட்டத்திலிருந்து
நழுவும் சட்டங்களினூடாக
உன்னால் வெளியே பார்க்கமுடியும்
அனைத்தையும் நிரப்புகிறது சூரியன்
ஆனால் மரங்கள் இன்னும் பசுமையாக வீழும்பொழுது
மேலும் வெம்மையாக
வீடுகள் சிறியதாக
கடந்து செல்பவர்கள் வேகம் தளர்ந்து
எப்பொழுதும் மேல் நோக்கிப் பார்த்தவாறு
இப்போது நம்மீது ஒளிர்கிறது விளக்கு
தூரமாகப் பார்த்தவாறு
நாம் பார்க்க முடிகிறது ஒளியின் வருகையை
நாம் மகிழ்ச்சியுடன் இருந்தோம்
அந்த மாலை
நமக்காக யாரோ ஒருவர் காத்திருக்கும் அந்த மற்றொரு வீட்டில்.

என் முன் இருக்கும் உலகம்

சற்று முன்பு
தெளிவான இரவு
புதிய சூர்யோதயம்
அடுத்த நாள்
மண்டியிட்டு தன் கைகளை ஏந்துகிறான் ஒரு கிழவன்
சாலை நெடுக ஓடின விலங்குகள்.

நான் என்னை உட்கார வைக்கிறேன்
கனவு கண்டேன் நான்
என் தலையில் திறக்கிறது ஒரு ஜன்னல்
யாருமில்லை வீட்டில்
வேலிக்குப் பின்னால் கடந்து செல்கிறான் ஒரு மனிதன்.

அந்தக் கிராமப்புறம் அங்கே ஓர் ஒற்றைப் பறவை பாடிக் கொண்டிருக்கிறது
யாரோ பயப்படுகிறார்கள்
யாரோ கிளர்ச்சியுறுகிறார்கள்
அங்கே கீழே இரு சிறு குழந்தைகளுக்கிடையே
பரவசம்
எனக்கு எதிராக நீ
கண்ணீரை அடித்துச் செல்கிறது மழை

அந்தக் குறுகலான பாதையில் நடக்க முடியாது உன்னால்
அதே வழியில் திரும்பச் செல்கிறாய்
அங்கே ஒரு கதவு
பின்னால் அங்கே
ஏதோவொன்று இப்பொழுதுதான் கீழே விழுந்தது.

அவனைவிடப் பெரியதாக அவனுடைய நிழல்
பூமியைச் சுற்றி வருகிறது
நான் அங்கு உட்கார்ந்திருக்கிறேன் பார்ப்பதற்குக் கூட துணிவில்லை எனக்கு.

அற்புதம்

தொங்கும் தலை
சுருண்ட இமைமுடிகள்
உதடுகள் மௌனமாக
விளக்குகள் எரிந்து கொண்டேயிருக்கின்றன
எதுவுமில்லை அங்கு ஒரு பெயரைத் தவிர
அதுவும் மறக்கப்பட்டுவிட்டது
அந்தக் கதவு திறந்தால்
நுழைய துணிவில்லை எனக்கு
பின்னால் அங்கு அனைத்தும் நிகழ்கின்றன
அவர்கள் பேசுகிறார்கள்
நான் கேட்கிறேன்
அடுத்த அறையில் பணயத்திற்குள்ளாகிறது என் விதி.

தாமதமாக இரவில்

இரவு கலைக்கும் அந்த நிறம்
அவர்கள் அமரும் அந்த மேஜை
தன் கண்ணாடிக்கூட்டில்
அந்த விளக்கு தன்னைத்தானே காலி செய்து கொள்ளும் ஒரு இருதயம்
இது வேறொரு வருடம்
புதிதாக விழுந்த ஒரு சுருக்கம்
இதை நினைத்துப் பார்த்திருப்பாயா நீ
ஒரு நீல சதுரத்தை வீசுகிறது அந்த ஜன்னல்
மேலும் பரிச்சயமானதாக அந்தக் கதவு
ஓர் பிரிவு
வலியுடன் உறுத்தும் நினைவும் குற்றமும்
போய் வருகிறேன் நான் வீழ்கிறேன்
மெதுவாக மென்மையாக வளையும் கரங்கள் என்னைத் தாங்கிக்
கொள்கின்றன
கடைக்கண் பார்வையில் என்னால் பார்க்க முடிகிறது அவர்களனைவரும்
குடித்துக் கொண்டிருப்பதை
நகரக்கூட துணிவில்லை எனக்கு
அவர்கள் அங்கே அமர்ந்திருக்கிறார்கள்
வட்ட வடிவத்தில் அந்த மேஜை
என் நினைவும் அதே வடிவத்தில்
அனைவரும் என் நினைவில்
கடந்து போய்விட்டவர்கள் கூட.



இரகசியம்

வெறுமையில் அந்த மணி
இறந்த பறவைகள்
அனைவரும் உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கும் வீட்டில்
ஒன்பது மணி
நிச்சலனத்தில் தன்னை நிறுத்திக் கொள்கிறது நிலம்
யாரோ பெருமூச்சு விட்டதாக நீ சொல்லக்கூடும்
புன்னகைப்பதுபோல் தோன்றும் மரங்கள்
ஒவ்வொரு இலையின் நுனியிலும் நடுங்குகிறது நீர்
இரவைக் கடக்கிறது ஒரு மேகம்
கதவின் முன் ஒரு மனிதன் பாடிக்கொண்டிருக்கிறான்
சத்தமில்லாமல் திறக்கிறது ஜன்னல்.

வறண்ட நாக்கு

அங்கு ஒரு ஆணி
சரிவைத் தடுத்துப் பிடித்தவாறு
திருகிக் கிழிந்த கந்தலென ஒளிர்ந்து வீசும் காற்று புரிந்து கொள்ளும்
யாரோ ஒருவன்
சாலை முழுமையும் நிர்வாணமாக
கற்கள் பாவிய தளம் நடைபாதை தொலைவு தடுப்புக்கள் அனைத்தும்
வெண்மையாக
ஒரு துளி மழை இல்லாமல்
ஒரு மர இலை இல்லாமல்
உடையின் நிழல் இல்லாமல்
நான் காத்திருக்கிறேன்
வெகு தொலைவில் இருக்கிறது நிலையம்
உயர்த்தப்பட்ட கரைகள் மீதாக நீ செல்லும்போது நதி இன்னும் பாய்ந்து
கொண்டிருக்கிறது
காய்ந்து கிடக்கிறது நிலம்
அனைத்தும் நிர்வாணமாக, வெண்மையாக
ஒழுங்கில் இல்லாத ஒரு கடிகாரத்தின் இயக்கத்துடன்
ரயிலின் இறைச்சல் கடந்து சென்றது
நான் காத்திருக்கிறேன்.

நினைவு

ஒரே ஒரு நிமிஷம்
திரும்பிவிட்டேன் நான்
அனைத்தும் போய்விட்டன எதையும் நான் வைத்திருக்கவில்லை
ஒரு புள்ளி
பரந்த வானம்
அந்த இறுதி கணப்பொழுதில்
விளக்கு கடந்து செல்கிறது
உன் செவி உணரும் காலடி சப்தம்
யாரோ நிற்கிறார்கள் மற்றவை அனைத்தும் போய்க்
கொண்டிருக்கின்றன
நீ போக விடுகிறாய் உலகத்தை
உள்ளிருப்பதை, உள்ளிருப்பது
நடனமிடும் ஒளிகள்
வெளி நீண்டு கிடக்கும் நிழல்கள்
இன்னும் இருக்கிறது வெளி
முன்நோக்கிப் பார்த்தவாறு
உயிருடன் தாவும் ஓர் விலங்கைக் கொண்ட ஒரு கூண்டு
மார்பும் கரங்களும் ஒரே விதமான அசைவில்
தலையைப் பின் தள்ளி
சிரிக்கும் ஒரு பெண்
வந்து அவளைத் தவறாக அடையாளங் கண்ட ஓர் ஆண்
நாம் மூவர் ஒருவரை ஒருவர் தெரியாது நமக்கு
இருந்தும் நாம் உருவாக்கினோம்
நம்பிக்கை நிறைந்த ஒரு உலகத்தை

பொழுது வீழ்ந்து ஒரு கதவை மூடுகிறது
நாம் ஒரு சாலையின் ஓரத்தில்
அனைத்தும் நிச்சலனத்தில் நிலைக்கும் ஓர் ஓடையின்
நிழலில்
அது இன்னும் ஒரு சுடராக இருக்குமானால்
அது நித்தியத்தை நோக்கி நகர்கிறது
புழுதியைப்போல் எழுகிறது நீர்
இரவை மூடுகிறது மௌனம்.

நாடோடி

திறக்க மறுக்கும் அந்தக் கதவு
கடக்கும் அந்தக் கை
தூரத்தில் உடையும் ஒரு கண்ணாடி
புகைக்கும் விளக்கு
பற்றவைக்கும் தீப்பொறிகள்
இருண்ட வானம்
கூரைகளின் மீது
சில விலங்குகள்
நிழல்களற்று
ஒரு பார்வை
ஓர் இருண்ட வடிவம்
நுழையப்படாமலிருக்கும் அந்த வீடு

தாழ்வாரம்

நாம் இருவர்
அனைத்தும் தொடர்ந்து கொண்டிருக்கும் அதே கோட்டில்
இரவின் சுழற்சிகளில்
நடுவில் ஒரு வார்த்தை
ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளாமல் இரு வாய்கள்
காலடி சத்தம்
காற்றாக இழைந்து மற்றொரு உடலை நோக்கி நழுவும் ஓர் உடல்
கதவு நடுங்குகிறது
ஒரு கை குறுக்காக கடந்து செல்கிறது
நாம் திறக்க விரும்பலாம்
செங்குத்தாக நின்று ஒளிரும் கதிர்
அங்கே எனக்கு முன்னால்
நெருப்புதான் நம்மை பிரிக்கிறது
உன் வெளிக்கோட்டுருவம் மிதந்து செல்லும் அந்த நிழலில்
ஒரு கணம் மூச்சில்லாமல்
கடந்து செல்லும் உன்மூச்சு என்னை எரித்துவிட்டது.



நிக்கோலஸ் கிய்யன்

(1902-1987)

கியூப நாட்டைச் சேர்ந்த கறுப்பினக் கவிஞர்; ஸ்பானிய மொழியில் எழுதியவர். ஆங்கிலம் வழி தமிழில் : பாலச்சந்திரன், கண்ணன். M

விடுகதைகள்

பற்களில் பகல்
தோளில் இரவு
அது யார், அது யாரல்ல
-கறுப்பன்

பெண்ணாக இருந்தாலும் அழகில்லை
அவள் சொல்வதை நீங்கள் செய்வீர்கள்
அது யார், அது யாரல்ல
-பசி

அடிமைகளின் அடிமை
எஜமானர்களின் சர்வாதிகாரி
அது யார், அது யாரல்ல
-கறுப்பு

ஒரு கை செய்யும் கொடுமையை
மற்றொரு கை என்றும் மறப்பதில்லை
அது யார், அது யாரல்ல
-பிச்சை

தான் எப்போதோ பழகிய ஒரு புன்னகையுடன்
அழுது கொண்டிருக்கும் ஒரு மனிதன்
அது யார், அது யாரல்ல
-நான்.

கரும்பு

கரும்புக்கு அருகில்
கறுப்பன்

கரும்புவயலின் மீதாக
அமேரிக்கன்

கரும்பு வயலின் கீழாக
இந்த நிலம்

நாம் இழக்கும்
இரத்தம்.



கடிகாரம்

குறிப்பிட்ட நேரங்களை நான் விரும்புகிறேன்
உதாரணத்திற்கு 2:45
அப்போது காலம் நம்மை அணைக்க வரும்
ஒரு சகோதரனைப் போல்.

அப்படித் தோன்றினாலும்
அப்போது காலம்
இரத்தம் வழிய
எதிர்காலத்திற்கும் இறந்த காலத்திற்கும் இடையில்
வேதனையில் அறையப்பட்டிருக்கும்
இயேசு கிறிஸ்துவைப் போல.

Nicolas Guillen (iPatria O Muerte ! The Great Zoo and Other Poems, Monthly Review Press, Newyork, London, 1972) தொகுப்பிலிருந்து.

எம்.பி. மனோஜ்

மூன்று மலையாள தலித் கவிதைகள்
தமிழில் : என்.டி. ராஜ்குமார்

பாறைகள்

இறுகிய பாறைகள் ஒவ்வொன்றும்
மனிதர்கள், கறுப்பு நிறமுடையவர்கள்
அவர்களுக்கு மெதுவாகத்தான் வளரத் தெரியும்
பாறைகள் வளருவதுபோல
உடைந்த ஒவ்வொரு கல்லும் இன்னொரு ஜென்மம்
காக்கைக் கூட்டத்தில் எறிந்த கல்லைப்போல
சிதறிப்போன கூட்டங்கள்
தொலைந்த கல்லில்
அவனது கண்களைக் காணலாம் பளிங்குபோல
பல்லைப் பார்க்கலாம் சிப்பி பிடித்து
குறிகள் வழுக்கத் துவங்கின
மக்களோ உருளைக் கற்களானார்கள்
மழையை நெஞ்சோடு வாங்கி
வெயிலை முதுகினால் தாங்கி
உடைக்கப்பட்ட ஒவ்வொரு கல்லிலும்
உடைந்துபோன எலும்புகளும் ரத்த வரிகளும் நிறங்களும்
ஊற்றுகள் இங்கு கண்ணீரானது
இறுகிய பாறைகள் ஒவ்வொன்றும்
வளருகின்ற கறுப்பு மனிதர்கள்.

அனோனிமஸ்

சிறுவயதில் தந்தை கல்லெடுத்துத் தேய்த்துக்
குளிப்பாட்டி என்னை வெள்ளையாக்க முயன்றதை
நினைத்துப் பார்க்கிறேன்.

பெருமழை விழுந்தெனது தந்தை சாம்பலாகின்றான்



கடும் வெயிலில் எனது தாய் புழுத்துப்போகிறாள்

காற்று கடித்துக் குதறிய பட்டத்தைப் பார்த்து
தம்பி துள்ளி குதிக்கிறான்

இப்போதும்
ஒரு பெருவெள்ளத்தில் நாடு மூழ்கியபோது
சிறிய காகிதக் கப்பல் செய்தான்
நான் ஆசைப்பட்டேன்
அதில் ஏறித் தப்பிவிடலாமென்று
இன்னொரு முறை வீட்டைத் தீ தின்றபோது
கலைமான் குட்டியின் விளையாட்டுச் சாதனம்
எரிந்து போகக்கூடாதென்று மட்டும்தான்
வேண்டியது
அதைத்தாயின் அருகில் கொண்டு சேர்க்க
வேண்டுமென்றும்
எனது நீளமில்லாத கழுத்தைப் பற்றியும்
பளபளப்பில்லாத கைகளைப் பற்றியும்
கேட்பதற்கு அவள் வராததனால்
தேன்கூட்டையும் முள்ளம்பன்றியின் முள்ளையும்
காகத்தின் சுள்ளியையும் திரும்பக் கொண்டுவந்து
போடவேண்டுமென்று மட்டும்.

பன்றிப்பாடல்

ஒரு பன்றிக்கும் எனக்குமுள்ள வித்தியாசம்
சட்டை அணிந்து கொள்கிறேன் என்பது மட்டும்தான்
முதுகினால் முன்னோக்கி வளைந்து கீழே பார்த்து
வேலிக்கு உள்ளே மட்டும் கிடந்து
கிடைத்ததெல்லாம் வெட்டி விழுங்குகிறது.

மலம் மூத்திரம் கொழுப்பு கழிவு எல்லாம்
எனது பாத்திரத்தில் சேர்ந்து குவிகிறது
கழுத்தில் கறுத்த சுருக்கிட்டு
இங்கெங்கும் இறுக்கிக் கட்டிப்போடாமல்
நான் எங்கும் ஓடிப்போகவும் மாட்டேன்.

நகம் வெட்டிக்கு பயப்படுகின்ற விரல்கள்
தடிகளிலும் கற்களிலும் உரசுகின்ற உடம்பு.

ஒரு பன்றிக்கும் எனக்குமுள்ள வித்தியாசம்
செருப்பணிகிறேன் என்பது மட்டும்தான்.

சிலர் எனையறியாமல் படம் எடுக்கின்றனர்
அனுதாபத்திற்குரியதென்று அர்த்தம் வரக்கூடிய
சில பெயர்களும்
வேலி உடைக்காமல் வயிறு நிறைக்க
பல வேலைகளும் தீர்மானங்களில் உண்டாம்.

ஒரு பன்றிக்கும் எனக்குமுள்ள வித்தியாசம்
மீசையை வெட்டுகிறேன் என்பதில் மட்டும்தான்.

அப்படியிருக்கையில்
திடீரென்று கொஞ்சம் மீன் தண்ணீர் மாட்டுத்தீவனம்
மிச்சப்பண்டங்கள்
யாருமறியாமல் எனது தெருவுக்கு வருகிறது.

மிகச் சாந்தமாய் எங்கள் பெயர்களை அழைத்தபடி
தேர்தலில் போட்டியிடுகின்ற ஒருவன்
கை கோடாலிக்கோ சுத்தியலுக்கோ
உச்சந்தலையில் வைத்தொன்று தரும்போது
நான் மேல்நோக்கிப் பார்ப்பேன்
என்னைக் கைப்பிடித்து உயர்த்துவேன்
பிறகு சிரைத்து இறக்குவேன்.

எனது மாமிசம் அவனது சட்டியில்
எனது தோல்பண்டம் அவனது பல்லில்
எனது நெய் அவன் வயிற்றில்
அதிகாலையில் பன்றித் தொழுவில்
அவனடையதும் அவனுடைய மக்களினுடையதுமான
தலைமுறையாய் உள்ள தானம்.



அடுத்த இதழில்...

லுவிஸ் எல்ரிச்

பல்கேரிய மற்றும் இதர மொழிக் கவிதைகள்

ஆங்கிலம்வழி தமிழில் : சீனு. தமிழ்மணி

எல்லன் பானிஸ்டர்
அஞ்சுகிற குடும்பம்

*நாங்கள் ஓர் அஞ்சுகிற குடும்பம்
எங்கள் நாய்கள் வெட்கமடைகின்றன
மற்ற நாய்களின் முன்னால்.
நாங்கள் முட்டையை உடைத்து எச்சரிக்கையாகத் திறக்கிறோம்
ஓடு குறித்த அச்சத்தால்.
நாங்கள் ஓடுகிறோம் எங்களின் விரல்களால்
மஞ்சள் கருவை நோக்கி, தேடுகிறோம்
பறவையின் சுவடினை*

*நாங்கள் ஓர் அஞ்சுகிற குடும்பம்
நாங்கள் எங்கள் கண்ணீரைச் சிறிய
நீலப்புட்டிகளில் சேமித்துப் புதைக்கிறோம் வீடருகேயுள்ள இடத்தில்
நாங்கள் உலர்த்துகிறோம்
பரணில் எங்கள் காலுறைகளை.*

*ஒருபோதும் நாங்கள் பேரம் பேசுவதில்லை
நாங்கள் கட்டுப்பாடுடன் பணத்தைச் செலுத்திவிட்டு
யாருடனும் பேசாமல் உடனடியாகப் போய் விடுவோம்.
நான்கு தேவாலயங்கள் எங்களைக் கட்டுப்படுத்துகின்றன
நான்கு தேவாலயங்கள், ஐந்து சிறைகள்
பாடுவதிலிருந்து நாங்கள்
தப்பிச் செல்ல முடியாது.*

*எங்களை நீங்கள் காணவந்தால்
வியப்படையாதீர்கள்
என் தந்தை அறையைவிட்டு
வெளியே சென்றிடுவார், என் தாய்
புத்தகத்தினுள் மறைந்திருப்பாள்
(காபி மேசையினடியில்)*

அலெக்ஸாண்டர் கெரோவ்
சுண்டெலிகள்

நன்கு பழக்கமான என் பழைய சுண்டெலிகள்
பரணில் தன் உதடுகளை நக்கிக் கொண்டிருந்தன.
அவை என் சிந்தனை நூலிழைகளை நிலைகுலைய வைக்கின்றன
அவை சிந்தனையை என் நெஞ்சினின்று முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகின்றன.
அவற்றுடன் நான் கலந்துரையாட விரும்புகிறேன்
படைப்பவன் இவ்வுலகைப் பற்றி என்ன நினைத்தான்
ஒவ்வொருவரின் வாழ்விலும் முரண்கள், இயல்பூக்கங்கள்
மேலும் சிந்தனைகள்?

ஆனால், சுண்டெலிகள் அமைதி காக்கின்றன. அவை பேசுவதில்லை
அவை கிறீச்சிடுகின்றன. வாழ்வில் மகிழ்வுடன் இருக்கின்றன.
சினத்துடன் உள்ள கருவிழிப்பூனைகள் மட்டுமே
அவற்றைப் பிடித்துத் தன் பளபளப்பான வளைந்த நகங்களால்
கிழிக்கின்றன.

பல்கேரிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் : லிசா சாபின்கோப், ஜார்ஜி பெலெவ்
ஆங்கிலம்வழி தமிழில் புதுவை சீனு. தமிழ்மணி



எலிசபெத் ரீஸ்
ஒலியெழுப்பிக்கொண்டிருக்கும் வயல்கள்

சட்டங்கள் எங்கே பாதுகாப்பாக உள்ளன?
சாம்பலற்ற தாழிகளில்
எங்கே அந்தத் தாழிகள்?
கல்லறைகளற்ற வயல்வெளிகளில்
வயல்வெளிகளில் எங்கே அந்தப் புற்கள்?
தட்டையான எல்லாத் தாழிகளிலும்
எங்கே அந்த வயல்வெளிகள்?
கண்களற்ற நகரங்களின் அருகில்
அந்தக் கண்களுக்கு என்ன நிகழ்ந்தது?
அந்தக் கண்கள் மூட முடியவில்லை
என்ன காரணத்தை அவை தந்தன?
அவை அறியவில்லை
என்ன காரணத்தை அவைத் தந்தன?
எந்தக் காரணத்தையும் அவைத் தரவில்லை
பிறகு எது அவற்றை நடுங்கச் செய்தது?
சாம்பல்கள் மேலெழுந்து கொண்டிருக்கின்றன
அதன் பொருளென்ன?
காற்றில் ஏதோ சில இருக்கின்றன
அது என்ன மங்கல வழக்கா?
அவை பற்றுமிக்க ஆர்வத்துடன்
எனவே, அது வெற்றி பெற்ற தொழிற்சாலையா?
அவை மிகுந்த தொழில்வயப்பட்டவை
யார் ஊதியம் (இலாபம்) உருவாக்கியவர்?
யாரும் அறிந்திருக்கவில்லை
எவ்வளவு செலுத்தியிருப்பார்கள் அவர்கள்?
பரவும் நோய்களுக்கு அவர்கள் வரிகளைச் செலுத்தியுள்ளனர்
சவப்புதைப்பு எப்படி?
அவற்றிற்காக வரிகள்
கிழக்குப் பக்கம் சுற்றுலா செல்லவா?
ஓர் அயிரமாத்திரிக்கு 4 பென்னிங் அடக்கவிலை
(4 Pfenning a kilometre)
யாருக்கு?
நம்முடன் உள்ள ஒவ்வொரு பெரியவர்களுக்கும்
எப்படி அவர்கள் செல்வார்கள்?
கால்நடை வண்டிகளில் அவர்கள் சென்றார்கள்

எங்கே அந்த விலங்குகள்?
அவற்றின் வாழ்வு தகுதியற்ற வாழ்வு
சட்டங்கள் எங்கெங்கே காக்கப்படுகின்றன?
நினைவற்ற எலும்புகளில்
எங்கெங்கே அந்த எலும்புகள்?
ஏதுமில்லை
பிறகு சாம்பல் பற்றி என்ன?
வயல்களை மூடியுள்ளன
அனைத்தும் வெறுமையான தாழிகளால்
எங்கே அந்தச் சாம்பல்கள்?
எந்தக் கல்லறைகளிலுமில்லை
என்ன காரணம் தரப்பட்டது?
அவர்கள் அறியார்?
ஏன் அவர்கள் அறியார்?
அவர்கள் சட்டங்களை எழுதவில்லை.



நன்றி : **AGNI - 37, Boston University, *1993.***

லாங்ஸ்டன் யூஸ்

தீவு

துயர அலைகளே
என்னை இப்போது இழுக்காதே
நான் தீவைப் பார்க்கிறேன்
இன்னும் முன்னால் ஏதோ ஒரு வகையில்
நான் தீவைப் பார்க்கிறேன்
அதன் மண் அழகாக இருக்கிறது
துயர அலைகளே
இப்போது என்னை எடுத்துச் செல்லுங்கள்.

தோட்டம்

வியப்பு
உருக்குலைந்த புல்லினிதழ்கள்
வியப்பு
உருக்குலைந்த மரங்கள்
வியப்பு
உருக்குலைந்த டியூலிப் மலர்கள்
முழங்காலிட்டு

மருத்துவர் வீ. புகழேந்தி

எய்ட்ஸ்

ஓர் உயிரியல் ஆயுதப் போர்?

எய்ட்ஸ் : ஓர் உயிரியல் போர் முனைப்பு

"அமெரிக்க அதிகார மையங்களை விரிவுபடுத்த ஆற்றல் கொண்ட கிருமியை **(supergerm)** உருவாக்குவதன் தேவை அரசுக்கு உள்ளது."

-A.H. Passerella, Director, Department of Defence - USA.

Dr. Alan Cantwell, Jr. எழுதிய **Queer Blood : The secret AIDS Genocide plot** புத்தகத்தில் சொல்லப்பட்ட விசயங்கள் வெளியுலகிற்கு தெரியாவண்ணம் செய்வதில் அரசும்/பத்திரிகைகளும்/தொலைக்காட்சிகளும் மிகவும் கவனமாக இருந்து வருகின்றன. **Dr. Cantwell AIDS** - ஆல் இறந்த பலரையும் பிரேதப் பரிசோதனை செய்தபின் சொல்லும் முடிவுகள் நம்மை அதிர்ச்சிக்க உள்ளாக்குகின்றன.

"**AIDS** என்பது இயற்கையான வியாதியல்ல, ஓரினச் சேர்க்கையாளர்களை **(Homo-Sexuals)** ஒழிக்க மட்டும் வந்த வியாதியல்ல. கறுப்பின மக்களை மட்டும் அழிக்கவல்ல வியாதியுமல்ல, **AIDS (Acquired immuno Deficiency Syndrome)** என்பது, மனிதர்கள் சோதனைச் சாலையில், மனிதர்களுக்கெதிராக கிருமியை உருவாக்க முடியும் என்பதற்கான ஆதாரம்.

இத்தகைய சோதனைகள் மூலம் வருங்கால சந்ததியினருக்கு பேராபத்தை ஏற்படுத்த முடியும். அணு ஆயுதங்களுக்கு ஒப்பான பேரழிவை சோதனைச் சாலை உயிரியியல் கிருமிகளால் உண்டாக்க முடியும் என்பதற்கான ஆதாரம். 1990-ஆம் ஆண்டு **"The Time"** பத்திரிகையாளர் லாரன்ஸ் ஆல்ட்மான் எழுதுகையில் எய்ட்ஸ் எங்கிருந்து வந்தது எனத் தெளிவான விடை இல்லை. இதற்கான சரியான விடை தெரிந்தால்தான் இது போன்ற பெரும்

வியாதிகளை-பேராபத்துகளை இனம் கண்டு அவை இனிவரும் காலங்களில் மனித குலத்தை தாக்காமல் இருக்க முறையான நடவடிக்கை எடுக்க முடியும்" என்கிறார்.

Dr. Leonard G. Horowitz தனது அருமையான ஆய்விற்குப் பின் எழுதிய **"Emerging viruses : AIDS Ebola; Nature, Accidet or intentional** (1996) என்கிற புத்தகத்தில் எய்ட்ஸ் கிருமியின் உருவாக்கத்திற்கு பின்புலத்தில் இருந்தவர் ஹென்றி கிஸ்சிங்கர் (முன்னாள் **Secretary of State**) என்பதையும், மூன்றாம் உலக மக்கள் தொகையை கட்டுப்படுத்தவும், அமெரிக்கா தனது மேலாண்மையை நிறுவவும், இது உருவாக்கப்பட்டு. 10 மில்லியன் டாலர்கள் காங்கிரஸின் பணத்திலிருந்து இந்த எய்ட்ஸ் போன்ற கிருமியை உருவாக்க அமெரிக்க இராணுவத்திற்கு வழங்கப்பட்டது என்பதையும், இந்த இரகசிய உயிரியல் கிருமியை உருவாக்கும் திட்டத்திற்கு **MK-NAOMI** என பெயரிடப்பட்டது **(Negroes Are only Momentary Individuals - NAOMI)** என்பதும், சி.ஐ.ஏ. துணையுடன் இத்திட்டத்தின் முழுக்கட்டுப்பாடும் கிஸ்ஸிங்கர்+உடன் இருந்த மிகச்சில **MKNAOMI** விஞ்ஞானிகள் கையில் இருந்ததையும் தெளிவாக எழுதியுள்ளார். எய்ட்ஸ் கிருமி எங்கிருந்து வந்தது எனும் கேள்விக்கு எய்ட்ஸ் கிருமியை "கண்டுபிடித்த" ஒரு விஞ்ஞானியான திரு. ராபர்ட் கேலோ **(Robert-Gallo)** வின் கருத்தை ஆதாரங்களுடன் மறுத்து, மக்களை திசை திருப்ப திரு. ராபர்ட் கேலோ மேற்கொண்ட முயற்சிகளையும் தோலுரித்துக் காட்டுகிறது இப்புத்தகம். ஆனாலும் உண்மைகள் மறைக்கப்பட்டு பழியை மக்கள் மீதும், ஓரினச் சேர்க்கையாளர்கள் மீதும் ஆப்பிரிக்க மக்கள் மீதும் போடுகின்றனர். உண்மையில் அவர்கள் எய்ட்ஸ் கிருமிகளின் கொடுமையான பாதிப்பிற்கு உள்ளானவர்கள்.

யார் எய்ட்ஸ் கிருமியை உருவாக்கினார்களோ, அவர்களே அதற்கு சிகிச்சை அளிக்க மருந்துகளும் கண்டுபிடித்து அதன் மூலமாக கணிசமான இலாபத்தையும் பெற்றுள்ளனர். மருந்துக் குழும வியாபாரிகள் பிரச்சினையை "உருவாக்கியும்" பின் அதற்கான "தற்காலிக தீர்வையும்" கொடுத்து கொழுத்த இலாபமடைந்து வருகிறார்கள்.

Hooper ஹூப்பர் என்பவர் தனது **The River (1999)** எனும் புத்தகத்தில் முதலில் எய்ட்ஸ் இங்கிலாந்தின் மான்செஸ்டர் பகுதியில் 1950ல் இருந்தது. பிறகு 1969ல் **St. Louis** எனுமிடத்திலுள்ள கறுப்பின சிறுவனிடத்து தென்பட்டது என்பதையும் தவறு என நிரூபித்துள்ளார். அவர் தனது எழுத்தில் **AIDS** கிருமி மனிதனால் உருவாக்கப்பட்டு, பிற மனிதர்களிடத்து தடுப்பூசித் திட்டங்களின் மூலம் பரப்பப்பட்டுள்ளது எனத் தெளிவாக நிறுவுகிறார். 1970 காலகட்டத்தில் அமெரிக்க ஓரினச் சேர்க்கையாளர்களிடையே மஞ்சள் காமாலை தடுப்பூசி திட்டங்களின் மூலமும் **AIDS** இரகசியமாக பரப்பப்பட்டிருக்கிறது. 1970க்கு முன்னர் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் எய்ட்ஸ் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் மிகவும்

பலவீனமானவை. இருப்பினும் தற்போதைய எய்ட்ஸ் வல்லுநர்கள் இந்த மிகவும் பலவீனமான ஆதாரத்தை மட்டும் பெரிதுப்படுத்தி, அது சோதனைச் சாலையில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்களை மறைப்பது ஏன்? என மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இராபர்ட் லீ **M.S.M.S.W; L.C.S.W. "AIDS : An Explosion of the Biological time Bomb?"** *(2000)* எனும் புத்தகத்தில் எய்ட்ஸ் கிருமி வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளது என தெளிவுபடுத்தியுள்ளார். **Cleveland** செய்தி பத்திரிக்கையானது "அரசு பதிவேடுகளில் இது மறுக்கவே முடியாத ஆதாரங்களுடன் அனைவரின் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது" என செய்தி வெளியிட்டுள்ளது.

பில் கிளிண்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, 1994ல் மக்கள் ஒப்புதல் இல்லாமலே பல கதிர்வீச்சு தொடர்பான சோதனைகள் அமெரிக்க மக்கள் மீது அரசு நடத்தியுள்ளது என்பதை விசாரிக்க "அறிவுரைக்குழு" ஒன்றை ஏற்படுத்தினார். அக்குழு தனது அறிக்கையில் (அக்டோபர் 3, 1995) 1960 வரை மருத்துவர்கள் நோயாளிகளின் ஒப்புதல் பெறாமலே அவர்கள் மீது சோதனை செய்ததை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் 20 வருடங்களுக்கு மேலாக **(The U.S. Code annotated title 50, chapter 32, Section 1520, dated july 30, 1977)** என்கிற இச்சட்டத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சகம் தனது சொந்த மக்களையே சோதனை விலங்குகளாக நடத்த ஒப்புதல் அளித்து வந்தது. பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக பின்பு அச்சட்டம் நீக்கப்பட்டது. அதற்குப் பின் வந்த புது சட்டத்தில் பாதுகாப்புகள் இருந்தாலும் "விதி விலக்குகள்" இருந்தன. இந்த "விதி விலக்குகளின்" ஓட்டைகளை பயன்படுத்தி, அத்தகைய சோதனைகள் தொடரத்தான் செய்கின்றன என்பது வேதனையே.

ஜாஃப்ரே சீ என்பவர் **Columbia Journalism Review** - பத்திரிக்கையில் எழுதுகையில் "முறையற்ற **(unethical)** வகையில் செய்த ஆய்வுகளின் விளைவாக மக்கள் நிரந்தர பாதிப்பு/ஊனம் அடைந்தது பல நூற்றுக்கணக்கில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை ஒரு மருத்துவரோ, செவிலியரோ, விஞ்ஞானியோ, தொழில்நுட்பவாதியோ, நிர்வாகியோ, திட்டம் தீட்டுபவரோ தவறு செய்ததை தானாக முன்வந்து ஒப்புக்கொண்டதாக சரித்திரமே இல்லை" எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

உலக சுகாதார நிறுவனத்தின் திட்டமான பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் மூலம், பல மில்லியன் மக்களுக்கு எய்ட்ஸ் கிருமி கலந்த பெரியம்மை தடுப்பூசி கொடுத்ததன் காரணமாக ஆப்பிரிக்காவில் எய்ட்ஸ் பரவியது. இத்தடுப்பூசிக்கு பின்னரே அங்கு எய்ட்ஸ் நோய் கொள்ளை நோயாக மாறி மக்களை பாதித்ததை மே 11, 1987 **London Times** பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இந்த முக்கியமான செய்தி அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியாகவில்லை; தடுப்பூசிக்கும் எய்ட்ஸ்க்குமான தொடர்பை சுகாதார

அதிகாரிகள் பேசக்கூட முன்வரவில்லை.

Dr. Cantwell "Gay Today" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 1978-1981 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் காமாலை தடுப்பூசி திட்டமே அமெரிக்காவின் எய்ட்ஸ் பரவ முக்கிய காரணியாக (ஓரினச் சேர்க்கையாளர்கள் மத்தியில்) இருந்தது என தெளிவாகக் கூறுகிறார்.

இத்தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்ட நியூயார்க், லாஸ் ஏஞ்சல்ஸ், சான்பிரான்சிஸ்கோ பகுதிகளில்தான் சிலகாலம் கழித்து பல ஓரினச் சேர்க்கையாளர்கள் இறந்து போயுள்ளனர். ஆனால் அரசோ AIDS ஆல் இறந்தவர்களின் பகுதிவாரியான புள்ளி விபரங்களை வெளியிட மறுத்துவிட்டது. இந்த சோதனைகளில் முதலில் இறந்தவர்கள் Manhatten-ஐச் சேர்ந்த (Newyork) இளம் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரின் பெயரும் நோய்த் தடுப்பு மையத்தில் (CDC) (1978) பதிவு செய்யப்பட்டுள்ளது.

Dr. Cantwell தனது "The Secret AIDS Genocide plot" புத்தகத்தில் அமெரிக்காவில் 1969ல் தொடங்கப்பட்ட "இராணுவ உயிரியல் கொல்லும் ஆராய்ச்சி திட்டத்தின்" விளைவாக மனிதனின் நோய் எதிர்க்கும் திறனை சிதைக்க உருவாக்கப்பட்ட "ஆற்றல்மிக்க கிருமியைக் குறித்தும்" அதன் முடிவுகள் (கிருமியால் ஏற்படும் இறப்பு) 1978ம் ஆண்டுகளில் தெரியவரும் எனச் சொல்லப்பட்டதையும் பேசப்பட்டதையும் தெளிவாக சுட்டிக்காட்டுகிறார்.

சிறப்பு வைரஸ் புற்றுநோய்த் திட்டம் (SVCP) (1962-1977)

1964ல் அரசின் நிதி உதவியோடு SVCP திட்டம் National Cancer Institute (NCI) மேரி லேண்ட்டிலுள்ள பெத்தெஸ்டாவில் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் இரத்தப்புற்று நோய் (Leukemia) நிணநீர் சம்பந்தமான புற்றுநோய் (Lymphomas) பற்றிய ஆய்வாக மட்டும் இருந்த அத்திட்டம் பின்னர் அனைத்து புற்றுநோய்களையும் உள்ளடக்கிய ஆய்வுத்திட்டமாக விரிவு படுத்தப்பட்டது.

பல வருடங்களாக அறுவை சிகிச்சை நிபுணர்கள் Chimpanzee குரங்கின் உறுப்புகளை மனித உடம்பில் பொருத்தி சோதனை செய்து வந்துள்ளனர். விஞ்ஞானிகளும், மருத்துவப் பத்திரிகையாளர்களும், தங்கள் வசதிக்காக இதை மறந்துவிடுகின்றனர். இரு வெவ்வேறு விதமான உயிரினங்களிடத்தில் இத்தகைய உறுப்பு மாற்றம் செய்வதில் Keith Reemtsma என்பவர் புகழ் பெற்றிருந்தார். 1964ல் அவர் சிம்பன்சி சிறுநீரகங்களை ஆறு மனிதர்களுக்கு பொருத்தியதில், அந்த 6 பேரும் இறந்து போயுள்ளனர். இருப்பினும் அவர் பின்னர் மனிதர்களுக்கிடையே உறுப்பு மாற்றம் செய்வதில் பல வெற்றிகளையும் கண்டுள்ளார்.



SVCP திட்டத்தின் மூலமே விலங்குகளை பாதிக்கும் பல வைரஸ் கிருமிகளை மனிதர்களிடையே பரப்பும் சோதனைகள் நடந்தேறியுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக புற்றுநோயை உண்டாக்கவும், மனித நோய் எதிர்ப்புத் திறனை சீர்குலைக்கவும் கூடிய பல விலங்கு வைரஸ் கிருமிகள் மனித செல்(Cell)களுக்கும் திசுக்களுக்கும் மாற்றம் செய்யும் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் வெற்றியும் அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தில் நாட்டின் புகழ் பெற்ற வைரஸ் கிருமி வல்லுநர்கள்,

உடம்பின் வேதி வினைகள் தெரிந்த வல்லுநர்கள் **(Bio-chemists)** காரணவியல் வல்லுநர்கள் **(epidemiologists)** வைரஸ் கிருமிகளால் உண்டாகும் புற்று நோய் ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டனர். எய்ட்ஸ் வியாதியின் முன்னணி வல்லுநர்களான, **Dr. Robert Gallo** (எய்ட்ஸ் கிருமியின் கண்டுபிடிப்பாளர்களில் ஒருவர்), **Myron (Max) Essex** (பூனைகளுக்கு வரும் **AIDS** ஐ கண்டுபிடித்தவர்) **Peter Duesberg** ஆகியோர் இத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தனர்.

மேலும் ஜப்பான், ஸ்வீடன், இத்தாலி, நெதர்லாந்து, இஸ்ரேல், உகாண்டா, ஆப்பிரிக்கா போன்ற பிற நாடுகளைச் சார்ந்த வல்லநர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

உலக நாடுகளிலிருந்து பலதரப்பட்ட புற்றுநோய் பாதிக்கப்பட்ட உறுப்புகளை சேகரிப்பதிலும், புற்றுநோய் உருவாக்கக்கூடிய வைரஸ் கிருமிகளை பெருமளவில் சோதனைச்சாலைகளில் வளர்ப்பதும் தான் **SVCP-** யின் முக்கிய பணியாக இருந்தது.

இத்தகைய வைரஸ் கிருமிகளை மனித செல்களில் வளர்த்தெடுக்கும் முறையை உருவாக்கி, அத்தகைய வைரஸ் கிருமிகளை உலக நாடுகளிலுள்ள பல ஆய்வகங்களுக்கும் அனுப்பும் பணியை குறிக்கோளாகவும் இத்திட்டம் கொண்டிருந்தது.

இத்திட்டத்தில் அமெரிக்க இராணுவ உயிரியல் போர்முறை **(Biological Warfare)** ஆய்வாளர்களும் இணைக்கப்பட்டனர். அக்டோபர் 18, 1971ல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன், பெத்திஸ்டா, மேரிலேண்ட், **Fort Detrick, Maryland**-க்கு அருகாமையில் இருப்பதால் அங்குள்ள இராணுவ உயிரியல் போர்முறை சோதனைச் சாலைகளை **(Army's Biowarfare Laboratories) SVCP**-க்கு கீழ் கொண்டுவரும் ஆணையை பிறப்பித்து, அதில் புற்று நோய்க்காண காரணங்கள், தடுப்பு, சிகிச்சைக்கான ஆய்வுக் கூடமாக மாற்றி அமைத்தார். புற்று நோய்க்கு எதிரான யுத்தத்தில் இந்த ஆய்வகம் **New Frederick Cancer Research Centre** எனும் பெயரில் இயங்கும் என்றும், அதற்கான ஒப்பந்தப் பணியை **Litton Bionetics** எனும் நிறுவனம் கையில் கொடுக்கும் பணியையும் அரசு மேற்கொண்டது.

இந்த நிறுவனத்தில்தான் மனித, கோழி, குரங்குகளை பாதிக்கும் வைரஸ் கிருமிகளையும், புற்று நோயால் பாதிக்கப்பட்ட மனித திசுக்களை இளம் குரங்குகளில் **(macaques)** செலுத்தி, விளைவுகளை ஆராயும் பணியில் இராபர்ட் கேலோ ஈடுபடுத்தப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

National Cancer Institute - Frederick Cancer Research Centre இணைந்து 1971ல் வெளியிட்ட ஆண்டறிக்கையில் ஆய்வகத் தேவைகளுக்கான , புற்றுநோயை உருவாக்கும் வைரஸ் கிருமிகளை தொடர்ந்து கிடைக்கும் வகையில் செய்தலே அதன் முக்கியப் பணி என்றும், மனிதர்களுக்கு

நெருக்கமான விலங்குகளை பாதிக்கும் வைரஸ் கிருமிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பது, (எய்ட்ஸை உண்டாக்கும் **Human Immuno Deficiency Virus (HIV)** அத்தகைய இனத்தைச் சேர்ந்தது), மனிதர்களைப் பாதிக்கும் வைரஸ் கிருமிகளை பெருமளவு வெற்றிகரமாக, தொடர்ந்து வளர்த்தெடுப்பது-போன்றவை பிற பணிகளாகவும் இருக்கும் எனச் செய்தி வெளியிட்டது.

1971ல் சிறப்பு வைரஸ் புற்றுநோய்த் திட்டத்தின் அறிக்கையில் "சுண்டெலிகளில் இரத்தப்புற்று நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமிகளை **(Mouse Leukemia Virus)** மனித செல்களில் வளர்த்தெடுக்கும் முறை" வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது என்ற செய்தி வெளிவந்தது.

சுண்டெலிகளுக்கு ஒருவித புற்றுநோயை எற்படுத்தும் கிருமியையும் **(Mouse Sarcoma Virus)** பூனைகளுக்கு இரத்தப் புற்று நோயை ஏற்படுத்தும் கிருமியையும் கலந்து **(Cat Leukemia Virus)** ஒரு புது வீரிய வைரஸை உருவாக்கி, அதை பூனையின் செல்களில் வளர்க்கும் முயற்சியிலும் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர்.

கோழி, பூனைகளைத் தாக்கும் **Retro Viruses**-களை குரங்குகளுக்கு செலுத்தி குரங்குகளுக்கும் புற்று நோயை ஏற்படுத்தும் சோதனையிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

சுண்டெலி, பூனை கலந்த வைரஸ் கிருமிகளையும், பூனைகளுக்கு இரத்தப்புற்று நோயை ஏற்படுத்தும் **(Feline Leukemia Virus)** கிருமிகளையும் சோதனைச் சாலைகளில் மனித செல்களில் வளர்க்கும் முறையிலும் வெற்றி கண்டுள்ளனர்.

ஆக இத்தகைய சோதனைகளில், இனம் விட்டு இனம் தாவும் **(Species Jumping)** கிருமிகள் உருவாக்கப்படுவது பொதுவான விசயமாக இருந்து வந்தது.

1970ல் எய்ட்ஸ் ஏற்படுத்தும் **Human Immuno Deficiency Virus** கூடவே எப்படி ஒரு புதுவகை **Herpes Virus** ஓரினச் சேர்க்கையாளரிடத்து மட்டும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பதற்கான தெளிவான விளக்கத்தை மருத்துவர்களும்/விஞ்ஞானிகளும் சொல்ல முன்வரவில்லை. அந்த **Herpes** வைரஸ் தற்போது எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஏற்படும் **Kaposis Sacoma**-க்கு **(Gay Cancer of AIDS)** காரணம் என நம்பப்படுகிறது. உலகில் **AIDS**-ன் தாக்கம் வருமுன் ஆரோக்கியமான இளைஞர்களுக்கு **Kaposis Saroma**-வின் பாதிப்பு இருந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. எய்ட்ஸ் கண்டுபிடிக்கப்பட்ட பத்து ஆண்டுகள் கழித்து தெரிய வந்த (1994இல்) **Kapsosis Sarcoma virus**-க்கும், மனிதர்களை ஒத்த தன்மையுள்ள விலங்கினங்களுக்கு (குரங்குகளுக்கு) வியாதியை ஏற்படுத்தும் **Herpes Virus**-க்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பதும், அத்தகைய வைரஸ்தான்

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விலங்குகளிடமிருந்து மனித உடலில் வெற்றிகரமாக செலுத்தும் ஆய்வுகள் மும்முரமாக நடைபெற்றது என்பதும் தெளிவாக உள்ளது. அதே போன்று ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு இரகசியமாக செலுத்தப்பட்ட **Mycoplasma Penetrans** எனும் கிருமியைப் பற்றிய தகவல்களும் பொது மக்கள் பார்வைக்கு மறைத்தே வைக்கப்பட்டுள்ளது.

அனைவரும் தவிர்க்க விரும்பும் ஒரே கேள்வி - தடுப்பூசிகளால் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளதா? கலப்படம் செய்யப்பட்ட தடுப்பூசிகளால் எய்ட்ஸ் வரும் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. **HIV Virus** புற்று நோயை உண்டாக்க வல்ல கிருமியே. *1984*-இல் எய்ட்ஸ் கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான **Robert Gallo** கூறுகையில் எய்ட்ஸ் என்பது கொள்ளை நோயாக வரும் ஒருவித புற்று நோயே என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

விலங்கு, பறவைகளைத் தாக்கும் வைரஸ் கிருமிகள் தடுப்பூசிகளில் எளிதில் கலக்க முடியும் என்பதும் அவை புற்று நோயை உண்டாக்கவல்ல திறன் பெற்றிருப்பதற்கான ஆதாரங்களும் ஏராளமாக உள்ளன.

சோதனைச் சாலைகளில் வளரக்கூடிய செல்களின் (இவற்றில் சில புற்று நோய் பாதிப்புக்கு உள்ளான திசுக்களிடமிருந்து பெறப்பட்டது) துணை இன்றி புற்றுநோய், தடுப்பூசி ஆய்வுகள் மேற்கொள்வது மிக கடினம்.

(முதன் முதலில் சோதனைச் சாலையில் மனித செல்களை வளர்த்தது **Hennrieta Lacks** எனும் இளம் கருப்பின பெண்ணின் கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியிலிருந்து **(malignant cervical cancer)** வெட்டி எடுக்கப்பட்ட திசுவேயாகும். அவர் பால்டி மோர் நகரைச் சார்ந்தவர். அது நடந்த ஆண்டு *1951*. அதை **Hela** செல் என அழைக்கின்றனர்.

போலியோ தடுப்பூசியைக் கண்டு பிடித்த ஜோனஸ் சால்க் செய்த பல ஆய்வுகளில் அவருக்குத் தெரியாமலே **Hela** செல்கள் கலந்திருந்தது- அவருக்குப் பின்னர் அது தெரியவந்துள்ளது. அதை அவரே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். **(Mark Neelson Rees)**

புற்று நோய் தடுப்பூசி ஆய்வுகளில் **Hela** செல்கள் அதிகம் கலந்திருப்பது மைக்கேல் கோல்டு என்பவரின் **"A Conspiracy of Cells One woman's Immortal Legacy and the Medical Scandal it caused"** புத்தகத்தில் தெளிவாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது மனித இரத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்ட **a yellow Fever Vaccine** இல் மஞ்சள் காமாலை வைரஸ் **(Hepatitis Virus)** கலந்திருப்பது தெரியாமல் பல அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு கொடுத்ததன் விளைவாக 3 லட்சத்துக்கு மேலான இராணுவ வீரர்கள் மஞ்சள் காமாலையின் தாக்குதலுக்கு ஆளானார்கள். **(Rogue**

State - William Blum)

ஆய்வாளர்கள் **Dr.** கார்த் நிகல்சன் அவரின் துணைவியார் நான்சி இருவரும் வளைகுடா நாடுகளில் போரிட்டுத் திரும்பிய பல அமெரிக்க இராணுவ வீரர்களின் இரத்தத்தில் **"Mycoplasma"** எனும் கிருமி இருப்பதையும், அதில் எய்ட்ஸ் வைரஸ் இன் ஒரு சிறு பகுதி ஒட்டியிருந்ததையும் கண்டுபிடித்து அவர்களின் உடல் பாதிப்பிற்கு இக்கிருமியே காரணம் என நிருபித்துள்ளனர். எய்ட்ஸ் வைரஸின் சிறு பகுதி **Mycoplasma** கிருமியில் ஒட்டியிருப்பது இயற்கையாக நிகழ வாய்ப்பேயில்லை என்பதும் அது உயிரியில் போர்முறை தந்திரத்திற்காக அதனுடன் செயற்கையாக இணைக்கப்பட்டிருந்தது என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

சினைப்பருவ மாடுகளின் சினைகளிலிருந்து பெறப்படும் இரத்தப் பொருள் **(Fetal Calf Serum)** பொதுவாக செல்களில் வைரஸ் கிருமிகளை வளர்க்க உதவும் பொருளாக இருக்கிறது. **Fetal Calf Serum** தடுப்பூசிகளில் கலந்தால் கூட எய்ட்ஸ் பரவ வாய்ப்புள்ளது என்பதை திரு **J.** க்ரோட் என்பவர் அக்டோபர் 1988ல் **Journal of the Royal (London) Society of medicine** ல் செய்தியாக வெளியிட்டுள்ளார். பார்ப்பதற்கு **AIDS** வைரசைப் போன்றே தோற்றத்தில் இருக்கும் மாடுகளைத் தாக்கும் **Bovine Visna** எனும்கிருமி தடுப்பூசி தயாரிக்க உதவும் **Fetal calf Serum** த்தில் கலந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதால் அதிலிருந்து தயாரிக்கப்படும் தடுப்பூசிகளிலும் அக்கிருமி கலந்து செலுத்தப்படுபவர்களுக்கும் அந்நோய் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளதால், அனைத்து தடுப்பூசிகளை போடுமுன் அதில் கலப்பட கிருமிகள் (எய்ட்ஸ் கிருமி உட்பட) உள்ளதா? என பரிசோதனை செய்யாமல் கொடுப்பது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர் எச்சரிக்கிறார். கலந்த தடுப்பூசிகளை கிருமி நீக்கம் **(Sterilize)** செய்வது தடுப்பூசியின் திறனைப் பாதிக்கக்கூடும் என்பதால், கிருமிநீக்கம் செய்ய வாயப்பில்லாமல் அதன் மூலம் கிருமிகள் பரவ காரணமாக அமைகிறது.

1970-80களில் டெக்சாஸ் மாநில ஹன்ட்ஸ்விலி சிறைக் கைதிகளுக்கு **"Flu"** காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசிகளில் மரபணு மாற்ற தொழில் நுட்பத்தில் தயாரான **mycoplasma** வைரஸ் கிருமிகள் கலக்கப்பட்டிருந்தது. **DNA** வடிவத்தைக் கண்டு பிடித்ததற்காக நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான ஜேம்ஸ் வாட்சன் (தற்போதைய **Human Genome Project**ன் முக்கிய அலுவலர்) இத்தைகைய சிறைப் பரிசோதனைகளில் ஈடுபட்டிருந்தது மக்கள் மீது இவர்கள் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துகிறது. வெகு விரைவில் சிறைக்காப்பாளர்களும், அவர்கள் குடும்பத்தினரும் விசித்திர நோய்க்கு உட்பட்டனர். சிறைக் காப்பாளர்களும் அதற்கான காரணம் கைதிகளுக்கு கொடுக்கப்பட்ட தடுப்பூசிகளில் கலக்கப்பட்ட கிருமிகள் என்பதை உணர்ந்து கொண்டனர். இப்பரிசோதனையை இராணுவமும், மருத்துவ மையங்களும் இணைந்து நடத்தியதால், சுகாதார அதிகாரிகள்

"அப்படியொன்றும் வியாதிகள் ஏற்படவில்லை" என்று மறைத்துவிட்டனர்.

1969ல் (எய்ட்ஸ் தோன்ற 10 வருடங்களுக்கு முன்னர்) அமெரிக்காவில் பல விலங்கு (மனிதனோடு நெருங்கிய தொடர்புடையு)களுக்கு பரிசோதனைக் கூடங்களில் எய்ட்ஸ் போன்ற கொள்ளை நோய் ஏற்பட்டதைத தங்கள் வசதிக்காக பலர் பேசாமல் விட்டுவிடுகின்றனர். கலிபோர்னியாவில் டேவிட் எனுமிடத்தில் ஒரு வகைக் குரங்குகளிடம் **(Stump-tailed macaques)** ஏற்பட்ட எய்ட்ஸ் கொள்ளைநோய் **(Simian AIDS)** காரணமாக பெரும்பாலான குரங்குகள் இறந்துள்ளன. இதுவே முதலில் பதிவு செய்யப்பட்டது. இதே போன்று மேலும் நான்கு இடங்களில் இது நிகழ்ந்துள்ளது. இந்த வகை குரங்குகள் இறந்து போக **Immuno Deficiency Virus**களே காரணம் என பின்னர் தெரியவந்தது. இச்சம்பவத்தை மறைக்க பல குரங்குகள் அட்லாண்ட்டாவிலுள்ள எர்கிஸ் பகுதிக்கு கடத்தி வரப்பட்டன. இவ்வாறு கடத்தப்பட்ட குரங்குகள் அனைத்தும் 1980 வாக்கில் **AIDS** நோயால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன.

1974-ல் கால்நடை மருத்துவர்களால் சிம்பன்சி குரங்குக் குட்டிகளிடம், எய்ட்ஸ் போன்ற நோய் உருவாக்கப்பட்டது. எப்படி எனில், இளம் சிம்பன்சிக் குட்டிகளை தாயிடமிருந்து பிரித்து **"Bovine 'c' type Virus"** எனும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளிலிருந்து கிடைக்கும் அந்த வைரஸ் கலந்த பாலை மட்டும் கொடுத்தால், அக்குட்டிகள் 1 வருடத்திற்குள் **Pneumocystis** நிமோனியா சுரம் **(The "Gay peuumonia" of AIDS)** கண்டு இறப்பது நிரூபணம் ஆகியுள்ளது. இந்த வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு முன்பு இத்தகைய நிமோனியா சுரம் சிம்பன்சி குரங்குகளுக்கு வந்ததாகச் சரித்திரம் இல்லை.

1970ல் அதேபோன்று சோதனைச் சாலைகளில் பூனைகளிடம் **HIV** போன்ற **Retro Virus** துணையுடன் உருவாக்கப்பட்ட **Cat AIDS** இவ்வைரஸ்களை வெற்றிகரமாக பூனையின் உடலில் செலுத்தும் முறையால் ஏற்பட்டது. இது ஹார்வார்டு எனுமிடத்தில் **Myron (Max) Essex** எனும் விஞ்ஞானியால் நடத்தப்பட்டது. இவை அனைத்தும் சோதனைச் சாலையில் விலங்குகளிடம் எய்ட்ஸ் போன்ற நோயை மனிதனால் உண்டாக்கப்படுவதை உறுதி செய்கிறது.

HIV-ன் கண்டுபிடிப்பு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு ஒரு வருடம் முன்பு (1983ல்) **Harvard**-ஐ சேர்ந்த கால்நடை மருத்துவர் **Myron Essex** என்பவர் 25% எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்ட ஒரினச்சேர்க்கையாளர்களின் இரத்தத்தில் **Human 'T' Cell Leukemia Virus-1** என்ற கிருமிக்கு எதிரான **Antibodies** எனும் புரதம் இருப்பதைக் கண்டுபிடித்தார். 1984ல் முதலில் **Roert Gallo AIDS** கிருமியை கன்டுபிடிக்கையில் அதற்கு **Human T Cell Leukemia Virus-3** என்றே பெயரிட்டார். பின்னரே அதற்கு **Human Immunol Dificiency virus (HIV)** எனப் பெயரிடப்பட்டது.

இதைத் தொடர்ந்தே 1979ல் பென்டகன் மையத்தின் **Dr. Mac Arthur** என்பவர் கேட்டுக் கொண்டதிற்கிணங்க சோதனைச் சாலைகளில் உருவாக்கப்பட்ட **Human Immuno Deficiency Virus (HIV)** அமெரிக்காவில் முற்றிலுமாக வெறுக்கப்படும் சிறுபான்மையினரான ஓரினச் சேர்க்கையாளர்களிடமிருந்து அவர்களுக்குத் தெரிந்தும்/ தெரியாமலும் பரிசோதனை செய்யப்பட்டது. அதன் விளைவாகவே எய்ட்ஸ் கிருமி அவர்களுக்கு மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தின் மூலம் பரப்பப்பட்டது. அதன் காரணமாக அமெரிக்காவில் முதலில் எய்ட்ஸ்ஆல் பாதிக்கப்பட்டவர்கள் நியூயார்க் நகர மன்ஹாட்டனைச் சேர்ந்த ஓரினச் சேர்க்கையாளர்களே. இந்த மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்திற்கு ஒத்துக் கொண்ட 20% ஓரினச் சேர்க்கையாளர்கள் இரத்தத்தில் 1980-81 வாக்கில் செய்யப்பட்ட ஆய்வில் **HIV Positive** (எய்ட்ஸ்க்கான வாய்ப்பு) இருப்பது தெரியவந்தது. 1983ல் அது 30% உயர்ந்துள்ளது. 1981ல்தான் **Human Immuno Deficiency Virus (HIV)** எய்ட்சுக்கு காரணம் என அதிகாபூர்வமாக வெளியிடப்பட்டது. விரைவில் இடம்தான் உலகிலே அதிக எய்ட்சுக்கு ஆளான ஆண்கள் இருந்தார்கள் என்பதும் தெரியவந்தது. ஆக **Manhatten** தான் எய்ட்சின் பிறப்பிடம். ஆப்பிரிக்காவில் 1982ஆம் ஆண்டுக்குப் பின்னரே உறுதி செய்யப்பட்ட எய்ட்சு நோயாளிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது எய்ட்ஸ் வல்லுநர்களால் சிம்பன்சி குரங்குகளிடமிருந்துதான் மனிதனுக்கு **AIDS** கிருமி தொற்றியுள்ளது எனும் கருத்தை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர்.

1970ல் தயாரிக்கப்பட்ட மஞ்சள் காமாலை தடுப்பூசி சிம்பன்சி **(Chimpanzess)** எனும் குரங்குகளின் இரத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்டது என்பதும், உலகம் முழுவதும் தற்போது இக்குரங்குகளிடமிருந்து **AIDS** நோய் தோன்றி வளர்ந்திருக்கக்கூடும் என்பதும் தற்செயலான நிகழ்வுகளாகக் கொள்ள முடியாது.

Dr. William Cambell Douglass M.D. என்பவர் தனது **Who murdered Africa?** எனும் அறிக்கையில், அரசின் வேண்டுகோளுக்கிணங்க **HIV** கிருமி 1974ல் சோதனைச் சாலையில் உருவாக்கப்பட்டது என்பதையும், ஆப்பிரிக்காவில் கொடுக்கப்பட்ட பெரியம்மை தடுப்பூசிகளில் தெரிந்தே கலக்கப்பட்ட **HIV** கிருமியே எய்ட்ஸ் பரவ காரணம் என்பதையும தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்)

ஆனால் இவர்கள் 1974ல் மேற்கு ஆப்பிரிக்காவில் **New york Blood Centre** சோதனைச் சாலையில் சிம்பன்சி குரங்குகளைப் பயன்படுத்தி உருவாக்கிய ஆய்வுகளை குறித்துப் பேசுவது கிடையாது. **Liberia**-வில் **Roberts Field**-ல் உள்ள **VILAB II at theLIebria Institute for Bio Medical Research** இன் முக்கியப் பணியே சிம்பன்சி குரங்குகளின் இரத்தத்திலிருந்து மஞ்சள் காமாலை தடுப்பூசி தயாரிப்பதே. சில வருடம் கழித்து இந்த மஞ்சள்

காமாலை தடுப்பூசிதான் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலிருந்து சிம்பன்சி குரங்குகள் பிடிக்கப்பட்டு **VILAB** கொண்டுவரப்படுகின்றன. **Alfred Prince** என்பவர் -**(Head of the Virology of the NY Blood Centre)** தான் கடந்த 25 ஆண்டுகளாக **VILAB** இயக்குனராக உள்ளார். பரிசோதனைக்குப் பின் சிம்பன்சி குரங்குகள் இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டு மீண்டும் அவற்றைக் காட்டிலே விட்டுவிடுவதாக அவர் பெருமிதம் கொள்கிறார். (பரிசோதனையில் என்ன நடந்தது என்பது யாருக்குத் தெரியும்!)

நியூயார்க்க நகருக்கு வெளியில் உள்ள **LEMSIP** என்கிற ஆய்வுக்கூடம்தான் **(The laboratory for Experimental medicine and Surgery)** 1997 வரை மனிதனுக்கு நெருங்கிய தொடர்புடைய விலங்குகளிடமிருந்து மனித செல்களில் பரவக்கூடிய வைரஸ் கிருமிகளை ஆய்வு செய்யும் நியூயார்க் விஞ்ஞானிகளுக்கு, அவ்விலங்கின உறுப்புகளைத் தொடர்ந்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது. 1965ல் உருவாக்கப்பட்ட **LEMPSIP** நியூயார்க் பல்கலைக்கழக மருத்துவ மையத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. அங்கேதான் முதலில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தோன்றிய **Kaposis Sarcoma** 1979ல் கண்டுபிடிக்கப்பட்டது. நியூயார்க் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் உள்ள ஆய்வாளர்கள் பிற்காலத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட மஞ்சள் காமாலை தடுப்பூசி திட்டத்திலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

எய்ட்ஸ் வல்லுநர்களுக்கு, இத்தகைய சோதனைகளில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகளைத் திட்டுவதைவிட, தகாத உடலுறவை வைத்துக் கொள்ளும் ஓரினச் சேர்க்கையாளர்களைத் திட்டுவது எளிதாக இருந்தது. மேலும் எங்கிருந்து எய்ட்ஸ் கிருமி உருவானது என்பதற்கான விளக்கத்தை இத்தகைய விலங்குகள் பரிசோதனைக் கூடங்களில் தேடாமல் ஆப்பிரிக்க மலைக்காடுகளில் வாழும் குரங்குகளிடம் தேடுவது உண்மையை மறைப்பதாக உள்ளது.

எய்ட்ஸ் யாரையும் தாக்கலாம் என இருந்தாலும், ஆப்பிரிக்காவில் ஆண் பெண் புணர்ச்சிக்கு பின்பே எய்ட்ஸ் ஏற்பட்டது என்பதும், அமெரிக்காவில் அது ஓரினச் சேர்க்கையாளர்களிடம் (ஆண்களிடம்) அதிகமாக காணப்பட்டது என்பதும் தெளிவான விசயங்கள்.

எய்ட்ஸ் கண்டுபிடிக்கப்பட்டு 20 வருடங்கள் கழித்தும் அமெரிக்காவில் புதிதாக எய்ட்ஸ்-ஆல் பாதிக்கப்படுபவர்களில் 80% ஓரினச்சேர்க்கையாளர்களோ அல்லது அவர்களுடன் உடலுறவு கொள்பவர்களோ அல்லது போதை மருந்து பழக்கத்திற்கு (சிரை மூலம் செலுத்துவது **IV**) ஆளானவர்களோதான். **HIV** கிருமி இனத்தையும், பாலினத்தையும் மதிக்காதது எனக் கொண்டால் ஏன் (அமெரிக்காவில்)

ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு மட்டும் எய்ட்ஸ் அதிகம் வர வேண்டும்?

1990ல் அணுவியல் உயிரியல் வல்லுநர்கள் எய்ட்ஸ் கிருமிகளில் 8 வகை இருப்பதை கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் **B** வகைதான் அமெரிக்க ஓரினச் சேர்க்கையாளர்களை அதிகம் தாக்குவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகைதான் பெருங்குடலைத் **(Rectum)** தாக்கும் திறனைக் கொண்டுள்ளது. இதனால்தான் அமெரிக்காவில் எய்ட்ஸ் ஓரினச் சேர்க்கையாளர்களை அதிகம் தாக்குகிறது என புரிந்து கொள்ளலாம். மாறாக ஆப்பிரிக்க எய்ட்ஸ் கிருமி வகைகள் பிறப்புறுப்பு செல்களை **(Vaginal, Cervical Cells)** தாக்கும் திறன் இருப்பது தெரிய வந்தது. **B** வகைக் கிருமிகளால் அச்செல்களில் பாதிப்பை எளிதில் ஏற்படுத்த முடியவில்லை என்பதும் தெளிவாகத் தெரியவந்தது.

எய்ட்ஸ் வல்லுநர்கள் அமெரிக்காவில் எய்ட்ஸின் பாதிப்பு ஆப்பிரிக்காவிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர்களைப் பாதிக்கும் எய்ட்ஸ் கிருமி வகை ஆப்பிரிக்காவில் இல்லவே இல்லை. பின் இது எப்படி சாத்தியம்?

1997ல் ஸ்டீபன் ஓ பிரியன், மைக்கேல் டீன் **(Laboratory of Genomic Diversity of the National Cancer Institute)** இருவரும் செய்த ஆய்வில் 10ல் ஒரு அமெரிக்கருக்கு (வெள்ளை இன) எய்ட்ஸ் எதிர்க்கும் மரபணுக்கள் இருப்பதாகவும், ஆப்பிரிக்காவில் உள்ள கருப்பின மக்களில் ஒருவர்கூட **AIDS** பாதுகாப்பு மரபணுக்கள் பெற்றிருக்கவில்லை என்பதையும் தெளிவாகக் கூறுகையில் எய்ட்ஸ் கிருமி என்பது சில இனக்குழுக்களையும் (கருப்பர்கள்) ஓரினச் சேர்க்கையாளர்களையும் திட்டமிட்டு ஒழிக்க உருவாக்கப்பட்ட **(Designer Virus)** என்பது தெளிவாகும்.

எய்ட்ஸ் கிருமி கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான திரு **Robert Gallo** 1987ல் **Playboy** செய்தியாளர் **David Black-** இடம் கூறுகையில் "எனக்குத் தெரிந்து அமெரிக்காவில் ஆண்-பெண் புணர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட எய்ட்ஸ் பாதிப்பு இல்லவே இல்லை எனக் கூறலாம்" என்றும், 'அமெரிக்க பொதுமக்களுக்கு எய்ட்ஸ் வியாதி என்றும் பெரும் பிரச்சினையாகவே வராது' என்றும் கூறியதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். **Dr. Robert Strcker, (Los Angeles pathologist)** எழுதுகையில், எய்ட்ஸ் கிருமி சோதனைச் சாவடியில்தான் உருவாக்கப்பட்டது என்பதும், அது உருவாக்கப்பட்ட இடம் **Ft. Detrick MD** என்பதால் அது பல ஆயிரம் மக்களை அழிக்கும் எண்ணத்துடன் **(Weapon of Mass Destruction (WMD)** உருவாக்கப்பட்டிருக்கும் என்பதையும் தெளிவுப்படுத்தியுள்ளார். (பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாகக் கூறி ஈராக்கைத் தாக்கிய அமெரிக்காவின் யோக்கியதை எப்படி இருக்கிறது எனப் பாருங்கள்)

பொதுவாக எய்ட்ஸ் நோய் முதலில் காடுகளில் உள்ள குரங்குகளிடம் இருந்து வந்தது எனவும் பின்னர் அது நகர்ப்புறம் நோக்கி நகர்ந்தது எனவும்

என்கிற ஒரு தவறான கருத்து நிலவுகிறது. ஆனால், இராபர்ட் ஸ்ட்ரெக்கர், எய்ட்ஸ் ஆப்பிரிக்காவில் முதலில் நகர்ப்புறத்தில் தோன்றியது எனவும் பின்னரே அது காடு நோக்கி நகர்ந்தது எனவும் நிருபித்துள்ளார். இதே கருத்தை உறுதிப்படுத்தும் முகமாக சமீபத்தில் 2004-ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கென்ய நாட்டு சுற்றுப்புறச் சூழலியலாளர் வங்காரி மத்தாய் அவர்களின் பேட்டியும் அமைந்துள்ளது.

1986ல் சோவியத்நாடு **HIV** வைரஸ் அமெரிக்க இராணுவ உயிரியல் போர்முறை வளாகத்தில் **(Fort Detrick)** உருவாக்கப்பட்ட கிருமி என செய்தி வெளியிட்டு உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அது உடனே 'பொய்ப்பிரசாரம்' என மறுப்புச் செய்திகள் வந்தன. இரஷ்ய நாட்டு விஞ்ஞானிகளும் அத்தகைய உயிரியல் போர்முறை உத்திகளில் ஈடுபட்டதாலும், அமெரிக்க கிருமி உருவாக்கத்தில் இரஷ்ய விஞ்ஞானிகளும் பங்கு உண்டு என்பதாலும், ரஷ்யாவும் அது போன்ற குற்றச்சாட்டை பின்னர் எழுப்பவில்லை.

ஆகஸ்ட், 11, 1988ல் டாக்டர் இராபர்ட் ஸ்ட்ரெக்கரின் சகோதரர் **Ted Strecker** மிசோரியில் உள்ள ஸ்பிரிங்ஃபில்ட் வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்தார். இவர் கடந்த மூன்று ஆண்டுகளாக எய்ட்ஸ் வைரஸ்சின் உருவாக்க மூலம் **(Orgin)** பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே போல **Hauff** என்பவரும் ஹெராய்ன் மற்றும் கோகேய்ன் உட்கொள்ளப்பட்டு இறந்து கிடந்தார். இவர் டாக்டர் இராபர்ட் ஸ்ட்ரெக்கரின் கண்டுபிடிப்புகளை மக்கள் மத்தியில் தொடர்ந்து வெளியிட்டும், பேசியும் எய்ட்ஸ் வைரஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தவர்.

எய்ட்ஸ் கிருமியின் இன்னொரு கண்டுபிடிப்பாளரான திரு. மான்டேக்னியர் **(Montagnier) Robert Gallo** வைப் பற்றி கூறுகையில் **Gallo** மருத்துவம் முறையாக பயின்ற மருத்துவர் அல்ல. அவருடைய பயிற்சி உடல் வேதி மாற்றத்துறையில் தான் உள்ளது. வைரஸ் கிருமி குறித்து அதிக அனுபவம் இல்லையென்பதால் அவர் தவறான முடிவுகளுக்கும்,அவருடைய சோதனைச் சாலையில் நிகழ்ந்த கலப்படத்திற்கும் அவரே காரணமாக இருந்திருக்கிறார்" எனக்கூறியுள்ளார்.

மேலும் சில சான்றுகள்:

John Seale M.D. என்பவர் தனது வெளியீடான **"Orgins of AIDS viruses HIV-1 & HIV-2, Fact or Fiction?"** என்பதில் எய்ட்ஸ் மனிதனால் உருவாக்கப்பட்டது என கூறியதை **The British Journal of the Royal Society of Medicine** பத்திரிகையில் *1988 (81:617-619)* வெளியிட்டுள்ளது.

"எலும்பு மஜ்ஜை மாற்று மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் **Dr. Georges Mathe** (நோய் எதிர்ப்புத் திறன் குறித்தான துறையிலும் அவர்

பிறந்த வல்லுநர்) **HIV** வைரஸ் என்பது உருவாக்கப்பட்ட ஒன்று என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்."

Lieutenant Colonel Thomas E. Bearden (U.S. Army, Retired) தனது எய்ட்ஸ் **Biological Warfare** எனும் புத்தகத்தில் *(1988ம் ஆண்டு)* எய்ட்ஸ் கிருமி அமெரிக்க இராணுவ உயிரியல் போர்முறை சோதனைச் சாலைகளில் உருவாக்கப்பட்டது என்பதையும், அதன் முழு பின்னணியையும் அமெரிக்க காங்கிரஸ் தீர விசாரிக்க முனைப்புடன் முன்வர வேண்டும் எனவும் எழுதியுள்ளார்.

Bethesda, Maryland-ல் பணிபுரியும், தன் பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் **Newyork Native** எனும் அமெரிக்க நாளிதழில், **AIDS** கிருமியை உருவாக்கும் திட்டத்திற்கு **"Operation Firm Hand"** என **Fort Deterick** உயிரியல் போர்முறை சோதனைச் சாலை - பெயரிட்டதாக கூறியது செய்தியாக வந்துள்ளது. *(4/13/87)*

ஆப்பிரிக்க எய்ட்சுக்கு முறையாக சுத்தம் செய்யப்படாத ஊசிகளின் பங்கு மிகக் குறைவே 2% என **Who/Lancet** இன் சமீபத்திய ஆய்வு தெரிவிக்கின்றது. **(Down to Earth** பத்திரிகை)

இந்தியா AIDS பற்றிய சில செய்திகள்.

ஆசியாவிலேயே அதிக **HIV** பாதித்தவர்கள் உள்ள நாடு இந்தியா என்பதும்,உலகிலேயே எய்ட்ஸ் இல் முதலிடம் வகிக்கும் ஆப்பிரிக்காவிற்கு அடுத்த இடத்தில் இந்தியா இருப்பதையும் நம்மை அதிர்ச்சிக்குள் ஆழ்த்துகிறது. அதாவது கிட்டத்தட்ட 2001ஆம் ஆண்டு கணக்குப்படி 40 லட்சம் பேருக்கு **HIV** உள்ளது. 3 லட்சத்து 10 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். **(Time-Sep. 2002)**

முதல் **AIDS case** தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. எய்ட்ஸ் பாதிப்பில் மகாராஷ்டிரம், தமிழ்நாடு மாநிலங்கள் அதிகம் சிக்கியுள்ளன. பெரியவர்களிடத்து நோய் தாக்கம் காணப்படும் விகிதம் 0.7%. 2000ல் மார்ச் வரை 11.251 பேர் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டது தெரியவந்துள்ளது. 79% ஆண்கள் 21% பெண்கள் எய்ட்சால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எய்ட்ஸ் பீதியை வணிகத்துறைகளே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றன. ஊசி தயாரிக்கும் குழுமங்களும், இரத்தம் செலுத்தும் மையங்களும் எய்ட்சால் அதிக லாபம் கண்டுள்ளன. முன்பெல்லாம் இரத்தம் 1 யூனிட் ரூ. 250 என இருந்தது. இப்போது இரத்தம் எய்ட்ஸ் சோதனை செய்யப்படுவதல் அதன் விலை 1 யூனிட்டுக்கு ரூ. 750-1000 என ஆகியுள்ளது. ஏழைகள் பாடு திண்டாட்டமே. இப்பிரச்சாரத்தின் மூலம் ஆணுறை தயாரிக்கும் நிறுவனங்களும் நல்ல லாபம் பெற்றுள்ளது. ஆனால், ஆணுறை அணிந்தால் எய்ட்ஸ் வராது என்கிற பிரச்சாரத்திற்கு பதில் சொல்வது போல ஸ்ட்ரொக்கரில்

கூற்று உள்ளது. அதாவது **latex**-சினால் தயாரிக்கப்பட்ட ஆணுறையில் மிகச் சிறிய நுண் துளைகள் அதாவது 1.5 **Microns** அளவிலான துளைகள் உள்ளது. இத்துளைகள் எய்ட்ஸ் வைரஸ்சின் அளவை விட 1-10 மடங்கு பெரியதாகும் என டாக்டர் ஸ்ட்ரெக்கர் கூறுகிறார். அப்படியிருக்க ஆணுறைகள் எய்ட்ஸ் வராமல் காக்கும் என்கிற விளம்பரத்தை எப்படி நம்புவது?

ஆக எய்ட்ஸ் என்றாலே புது ஊசி, ஆணுறை, பரிசோதனைக்குப் பின் செலுத்தப்படும் இரத்தம் என்றாகி அந்தந்த வியாபாரிகளுக்கு இலாபம் கொடுத்துக் கொண்டிருக்கிறது எய்ட்ஸ் பற்றிய பிரச்சாரம்.

தனி/புது ஊசி பற்றி பேசும் மக்கள், வயிற்றில் புண் இருக்கிறதா? என அறிய உதவும் **Endoscopy** மூலம் பரவும் எய்ட்ஸ் பற்றியோ, அறுவை சிகிச்சைத் துறை, குழந்தை பிறப்பு/பெண்கள் பிரச்சனை துறை, பல் மருத்துவர்கள், இரத்தக்குழாய் வழியாக பரிசோதனை மேற்கொள்வதில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மூலம் பரவும் எய்ட்ஸ் பற்றியோ வாயைக்கூட திறப்பதில்லை. சொல்லப்போனால் மேற்சொல்லப்பட்ட உபகரணங்கள் மூலம் எய்ட்ஸ் பரவும் வாய்ப்பு ஊசியைக் காட்டிலும் அதிகம்.

பில்கேட்ஸ் இந்தியாவிற்கு வந்து எய்ட்ஸ்க்கு நிதியுதவி என்றார். அனைவரும் சந்தோசப்பட்டனர். அடுத்த நிமிடமே அந்த பணம் **AIDS** செய்திகளை இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பரப்ப, வேண்டிய தேவையை ஒட்டி, **Micro Soft** நிறுவன கம்ப்யூட்டர் வாங்க பயன்படுத்தப்படும் என்றார். சொரணை உள்ளவர்கள் பலரும் வாயடைத்து நின்றனர்.

முக்கிய குறிப்பு

அமெரிக்காவில் தடுப்பூசி தயாரிப்பில் முன்னணி நிறுவனமாகத் திகழ்வது **Merck** என்கிற மருந்துக் கம்பெனி, எய்ட்ஸ் கலந்த மஞ்சள் காமாலை தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனம் **Merck** ஆகும். அதன் இயக்குநரான **George W. Merck** தான் அமெரிக்க உயிரியியல் ஆயுதத் தொழிலின் இயக்குனராகவும் இருந்தார். அந்நிறுவனத்தின் தடுப்பூசி தயாரிப்பில் மிகவும் முக்கியமானவரான திரு **Maurice Hillman** பேட்டி ஒன்றில் ஆய்விற்காக வட அமெரிக்காவிற்கு கொண்டுவரப்பட்டதை ஒப்புக் கொண்டுள்ளார். **(1986 Audio archieves of the National Library of medicine)**

ஜேக்கப் சிகால் எனும் கிழக்கு ஜெர்மனியின் நுண்ணுயிர் கிருமி ஆய்வாளர் அக்டோபர் 26, 1986ல் **London Express**-க்கு அளித்தபேட்டியில் எய்ட்ஸ் கிருமி மனிதனால் உருவாக்கப்பட்டது என்றும், பிற கருத்துக்கள் அதை மறுக்க - மறைக்க அமெரிக்கர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட கதை என்றும் கூறியுள்ளார்.

"... எய்ட்ஸ் வைரஸ் செயற்கையாக உருவாக்கப்பட்டதற்கான

சாத்தியமான ஆதாரங்கள் உள்ளன என்பதை உணர்ந்தேன். மெக்கன்சி அவர்கள் வெளிவராத குறிப்பிடத்தக்க ஆவணங்களை வெளியிட்டிருக்கிறார். எனவே, அரசு தரப்பில் உயர்ந்தபட்ச உடனடி விசாரணையை மேற்கொள்ள வேண்டும்" என ஓய்வு பெற்ற சியாட்டில் நகர நீதிபதி வில்லியம் சி. குட்லோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரியியல் போர்முறை ஆய்விற்காக 100 அரசு, தனியார் சோதனைச்சாலைகளுக்கு பென்டகன் உதவி வந்துள்ளது. **(New Scientist, London, 5.9.88)**

Thomas R. Keske என்பவர் 2000ல் எழுதிய புத்தகத்தில் "புள்ளி விபர ஆய்வுகள் எய்ட்ஸ் கிருமி பரவுவதற்கு, மஞ்சள் காமாலை தடுப்பூசி காரணமாக இருந்தது" என்பதைத் தெளிவான ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

Louis Pascal என்பவர் பெல்ஜிய காங்கோ நாட்டில் எய்ட்ஸ் பரவக் காரணம் போலியோ **(Polio)** தடுப்பு மருந்தில் கலக்கப்பட்ட **Simian Immuno Dificiency Virus** எனும் ஒரு வகை வைரஸ்தான் என தெளிவுபட நிறுவியுள்ளார்.

The United States and Bio-warfare - Stephen Endicott & Edward Hegeman (1999), A Higher form of Killing - The Secret story of chemical & Biowarfare by Robbert Harris & Jeremy Paxman (1982) இரு புத்தகங்களும் எய்ட்ஸ் கிருமி உயிரியல் போர்முறைக்காக தயாரிக்கப்பட்டது என்பதை நிருபித்துள்ளது.

Sean Mackenzie எனும் பரிசு பெற்ற புகழ்பெற்ற எழுத்தாளரும் **AIDS** கிருமி உயிரியியல் போர் முறைக்காக சோதனைச் சாலையில் **(Fort Detrick)** உருவாக்கப்பட்டது என்பதை தெளிவாக நிறுவுகிறார். **(AIDS-Biological Experiment out of control)**

ஆக, பல ஆப்பிரிக்க நாடுகளில் பெரியம்மை **(Small pox)** தடுப்பூசி அதிகம் பயன்படுத்தப்பட்ட நாடுகளில் எய்ட்ஸ் குறைவாகவும் இருப்பதிலிருந்து, எய்ட்ஸ் பரவ அம்மை தடுப்பூசிதான் காரணம் என்பது உறுதியாகிறது.

எய்ட்ஸ் நோய் அமெரிக்காவில் மஞ்சள் காமாலை தடுப்பூசி மூலமும், ஆப்பிரிக்காவில் பெரியம்மை, போலியோ தடுப்பூசி மூலமும் பரப்பப்பட்டிருக்கிறது என இருக்கையில், நமது அரசு போலியோ, மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தை (யார் அதை "அன்பளிப்பாக" கொடுத்தார்கள்?) முனைப்புடன் செயல்படுத்தி வரும் போது மக்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லதல்லவா?

இதைப்பற்றி விரிவாக தெரிந்துகொள்ள : **Google-AIDS-Biowarfare.**

கறுப்புக் கவிதைகள்

தமிழில் சிபிச்செல்வன்



லாறி தாம்சன்

கறுப்புதான் சிறந்தது

கறுப்புதான் சிறந்தது
        இதை அம்மா என்னிடம் சொல்ல மறந்துவிட்டாள்
ஆனால் நான் சொன்னேன்
        கறுப்புதான் சிறந்தது
அவள் கூறுகிறாள் : வாயை மூடு பையனே
        நான் மறுபடியும் கூறுகிறேன் :
கறுப்புதான் சிறந்தது அம்மா
        அவள் என்னை அடிக்கிறாள்
ஆனாலும் நான் தொடர்ந்து கூறிக்கொண்டேயிருக்கிறேன் :
        கறுப்புதான் சிறந்தது.

லாங்ஸ்டன் ஹியூஸ்

இறுதி வளைவு

நீ உனக்குள்ளாக ஓடு
அப்போதுதான் விடுபட்டுப்போன
எல்லா மூலைகளையும்
சேர்த்துத் திரும்பியதை
உணர்வாய்.

என் மக்கள்

இரவு அழகானது
என் மக்களின் முகங்களைப் போல.

நட்சத்திரங்கள் அழகானவை
என் மக்களின் கண்களைப் போல.

சூரியன் எப்போதும் அழகானது
என் மக்களின் ஆன்மா எப்போதும் அழகானவை.

மே ஜாக்சன்

நான் நினைத்துப் பார்க்கிறேன்

நான் நினைத்துப் பார்க்கிறேன்
ஜனவரி
1968
பனிக்காலம்
ஒரு கறுப்புப் பனி மனிதனை உருவாக்கி
அவனை மால்கம் கல்லறையின்மேல்
வைக்க விரும்பினேன்.

டெட் ஜோன்ஸ்

கறுப்பு மக்கள்

நான் கறுப்பு மக்களைப் பார்க்கிறேன்
நான் கறுப்பு மக்களைக் கேட்கிறேன்
நான் கறுப்பு மக்களைச் சுவாசிக்கிறேன்
நான் கறுப்பு மக்களைச் சுவைக்கிறேன்
நான் கறுப்பு மக்களைத் தொடுகிறேன்
கறுப்பு மக்கள் என் அம்மா
கறுப்பு மக்கள் என் அப்பா
கறுப்பு மக்கள் என் சகோதரி, சகோதரன், மாமா, அத்தை மற்றும்
என் பெற்றோருடன் பிறந்தவர்களின் பிள்ளைகள்.
கறுப்பு மக்கள் என்பது நாம் அனைவரும் கறுப்பு மக்கள் என்பதைத்
தெரிந்து கொண்டிருப்பது மட்டுமல்ல. நாம் கறுப்பு மக்கள்
என்பதில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்பதும் தான்.

டான் எல்.லீ

விழிப்புணர்வு

கறுப்பு மக்கள் யோசி
மக்கள் கறுப்பு மக்கள்
யோசி மக்கள் யோசி
கறுப்பு மக்கள் யோசி -
யோசி கறுப்பு.

காளி குரோஸ்வெனர்

எங்கள் கறுப்பு மக்கள்

எங்கள் கறுப்பு
மக்களனைவரும்
உங்கள் மற்றும் என்
மக்கள். நாமறிவோம்
அவர்களால் அன்பு செலுத்த முடியும்
இது உண்மையாக இருக்கட்டும்
எனக்காகவும் உங்கள் அனைவருக்காகவும்.

இது ஒரு புதுவிதமான தினம்

இது ஒரு புதுவிதமான தினம்
இது ஒரு புதுவிதமான தினம்
அன்புதான் ஒரு புதுவிதமான
நாளை உருவாக்கும்

இது ஒரு புதுவிதமான
நாள். இது ஒரு புதுவிதமான
நாள். இது ஒரு
புதுவகை. அன்பு. இந்த அன்பினால் எங்களுக்கு உதவுங்கள்
பிதாவே நாங்கள்
மிகவும் நேசிக்கிறோம்.

என் தலை போய்க்கொண்டிருக்குமானால்

என்தலை போய்க் கொண்டிருக்குமானால்
என்தலை போய்க் கொண்டிருக்குமானால்
மேலும் கீழும் பக்கவாட்டில்
கறுப்பு வெள்ளை திருப்பம்
போய்க்கொண்டிருக்குமானால்
அது கறுப்பாகப் போய்க்கொண்டிருக்கிறது
அம்மாதிரி.

இமாமு அமிரி பராக்கா (லேறி ஜோன்ஸ்)

எஸ் ஓ எஸ் (SOS)*

கறுப்பு மக்களுக்கான அழைப்பு
எல்லா கறுப்பு மக்களையும் அழைக்கிறேன், ஆண் பெண் குழந்தை
நீங்கள் எங்கேயிருந்தாலும் அழைக்கப்படுகிறீர்கள், அவசரம், உடனே
கறுப்பு மக்கள் வரவும், அவசரம், நீங்கள் எங்கேயிருந்தாலும்
உங்களை அழைக்கிறேன், எல்லா கறுப்பு மக்களையும் அழைக்கிறேன்
எல்லா கறுப்பு மக்களையும் அழைக்கிறேன், வாருங்கள் கறுப்பு மக்களே
உள்ளே வாருங்கள்.

*SOS : கப்பல், விமானம் போன்றவற்றில் ஆபத்துக் காலத்தில் காப்பாற்ற அனுப்பும் அவசர ரேடியோ செய்தியைக் குறிக்கும் சுருக்கம்.

நார்மன் ஜோர்டன்

ஆகஸ்ட் 8

நேற்றுக்கும் இன்றுக்குமிடையில்
எந்தப் பிளவுமில்லை.

அம்மாவும் மகனும்

காற்றும் பூமியும்
இவையனைத்தும் ஒன்று மற்றொன்றின் உறுப்பு
இந்த டைப்ரைட்டர் மூலம்
நான் இந்த வார்த்தைகளோடு
இணைக்கப்பட்டுள்ளேன்;
இந்தத் தாளோடும்
இவ்வார்த்தைகளோடும்
உன்னோடு இந்தத் தாளும்
இந்தத் தாள் உன்னோடும்.

டான். எல்.லீ

கறுப்புப்பெண் கவிதைகளிலிருந்து

மென்மை : அவள் கண்கள் தன் குழந்தைகளைப் பார்ப்பதுபோல.
கடுமை : தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் அவள் கைகள்போல
இதம் : அவள் எப்படி இருக்கிறாளோ அப்படியே இருப்பதுதான்!
கட்டாயம் : நேற்றைப்போலவே அவள் நாளைய தினத்தின் நாளை.

சாம் கார்னிஷ் (ராம் கார்னிஷ்)

டாக்டர் கிங்கின் சிறப்பு # 1

நாங்கள் வெளியே அமர்ந்திருக்கிறோம்
பார்கள் மலிவுவிலைக் கடைகள்
எல்லாம் இன்று அடைக்கப்பட்டுள்ளன.

நாங்கள் துக்கமுற்றுள்ளோம்
எங்கள் கை நிறைய செங்கற்கள்
ஒரு சகோதரன் இறந்து விட்டான்.

என் கண்கள் வெளுத்தும் குளிர்ந்தும் இருக்கின்றன
என் கைகளில் நீர் இருக்கிறது.
இதுதான் துயரம்.

கரோல் ப்ரிமேன்

யோசிக்காதே

யோசிக்காதே
நாங்கள்
உன்னைத் துன்புறுத்த வேண்டும்

நாங்கள் உன்னுடைய
குழம்பிய மனதைத் தொட்டால்
உங்களைக் கறுப்புத் தன்மையுள் இழுத்தால்
-எங்களுக்கு வேண்டியதெல்லாம் உங்களை
வீட்டுக்கு அழைத்து வருவதே.



லாய்டு கார்பின்.ஜேஆர்

அலி

அலி
எங்கள் கம்பீரமான
கறுப்பு இளவரசன்
ஒரு கண்ணாடி கீழே விழலாம்
ஆனால் எப்போதும் உடையாது
ஒரு மலர் மழையில்லாதபோதும்
எப்போதும் கருகாது
அலி
எங்கள் இளவரசன்.

ஜேக்கி யேர்லி
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தெட்டு, குளிர்காலத்தில் ...

இன்று காலை எழுந்தேன்
கறுப்பனாக இருப்பதாகவும் நன்றாக இருப்பதாகவும் உணர்கிறேன்
கறுப்பு எண்ணங்களைச் சந்திக்கிறேன்
கறுப்பு விஷயங்களைச் செய்தேன்
கறுப்பு இசைத்தட்டுகளைப் போட்டுக் கேட்டேன்.
எனது பழைய கறுப்புத் தன்மையை நினைத்துப் பார்த்தேன்


சிறந்த கறுப்புத் துணிகளை அணிந்து கொண்டு
கறுப்புக் கதவை விட்டு வெளியே நடக்கிறேன்
மேலும் ...

கடவுளே கருணை காட்டு
வெள்ளைப்
பனி.

லுசிலி க்ளிப்டன்
போலிஸ் முத்திரை

சுதந்திரமாக இரு
என் அப்பா
எப்போதும் கூறுவார்
ஜெயில் உருவாக்கப்படவில்லை
நாய்களுக்காக,
அது உருவாக்கப்பட்டது
மனிதர்களுக்காக.

சால் பெல்லோ



1915 - 2005

உடல் நலமின்மையில் மட்டுமே உங்கள் உடலை கவனித்துக் கொள்கிறீர்களே
உடல் நலத்திலும் உடலை கவனியுங்கள்



உங்கள் வாழ்க்கை முறையே உங்கள் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கிறது. துரித உணவு என்ற அலங்காரத்தில் இயற்கைக்கு எதிரான உணவுகள்; முறையாக பக்குவம் செய்யப்படாததால் ஜீவனில்லா உணவுகள்; நேரம் தவறி உண்பது; அகாலத்தில் கண் விழிப்பது; எதிர்மறையான எண்ணங்கள் அதிகம் கொண்டிருப்பது; அதிகமான பயணம்; பயணத்தினால் வரும் புது தண்ணீர், மாற்று உணவுகள்; அதிக அசைவம் அதிக மது; அதிக உழைப்பு, அதிக உடற் பயிற்சி போன்ற பழக்கங்கள் ஆரோக்கியத்தை குலைத்து, உங்கள் உடல்நலத்தை **உன்னத நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு** தள்ளி விடும்.

உடல்நலத்திற்கும் வியாதிக்கும் வித்தியாசம் இருப்பதுபோல், உடல் நலத்திலேயே வித்தியாசமான நிலைகள் உண்டு.

வயிற்றில் அதிக பித்தம், வாய்வு அழுத்தம், பொதுவான மந்தம், பசி மந்தம், பொதுவான சோர்வு போன்றவை உங்கள் உடல் நிலை தாழ்ந்த நிலையில் உள்ளது என்பதற்கான அறிகுறிகள். மனம் ஒருமுகப்பட்டு வேலையில் பிரகாசிப்பதை இவை தடுக்கக் கூடும்.

இத்தகைய அன்றாட அறிகுறிகள் தென்படும்போது, சமஹன் பருகி ஆரோக்கியத்தை தக்கவைத்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக



அன்றாட ஆரோக்கியத்திற்கு

- அலுவலகத்தில் காலை 11:00 (அ) மாலை 4:00 மணிக்கு
- முக்கியமான கலந்துரையாடல் கூட்டத்துக்கு முன்
- இரவு உறங்கும் முன், பாலில்

குறிப்பாக

சாதாரண ஜலதோஷத்துக்கு மட்டுமே என நினைத்தீர்களாக்கும்! ... இன்னும் அதை பருகி ... 14 மூலிகைகள் ஆயுர்வேதத்தில் பல பயன்களுக்காக நிரூபிக்கப்பட்டுள்ளது." பாரம்பரிய மூலிகை தயாரிப்புகளைப் பற்றி ... சிறப்பாய் இருக்கும்.



ஆயுர்வேதத்தில் ஆரோக்கியம் என்பது ...
இருப்பதை பற்றியது. அதுவே, இயற்கையான, சீரான, ...

உள்ளே புகுந்து, படிப்படியாக ...

சக்தியான இருதயம், மூளை போன்ற அங்கங்களுக்கு,
பின்னர், மறை நிலையில் கண்ணுக்கு புலப்படாத, நுட்பமான
(சூக்குமம்) மூன்று அடிப்படை சக்திகளாக வாதம், பித்தம்,
கபம் உள்ளன. இவை 1:½:¼ என்ற விகிதத்தில் இருப்பது
ஆரோக்கியத்திற்கு உத்தமம். உங்கள் வாழ்க்கை முறையை
பொறுத்து இதை பேணிடவோ, குலைக்கவோ செய்யலாம்.
இந்த விகிதம் மாற்றப்படுமானால் வியாதி (விக்ருதி)

வாதம்

*ஆதாரம்: தன்வந்திரி உள்ளிட்ட 18 சித்தரின் நாடி சாஸ்திரம் படி நாடியில் தென்பட வேண்டிய அளவு, மாத்திரைகளாக.

செயலாற்றி, வாதம், பித்தம், கபம் இவற்றை
சமனப்படுத்துகிறது. ஆரோக்கியத்திற்கு பயன்படும் பல
பொருட்கள் இருப்பினும், உங்கள் வாழ்க்கையில் சமஹன்
அதன் எளிமை, பக்க விளைவுகளற்ற தன்மை,
இயற்கைதன்மை போன்ற காரணங்களினால் சிறப்பாக
பொருந்துகின்றது.

**ஆதாரம்: தேரைய சித்தரின் அற்புத பதார்த்த குணசிந்தாமணி, சரக சம்ஹிதை, பாவப் பிரகாசம், ராஜ நிகண்டு, தன்வந்திரி நிகண்டு போன்றவை



சமஹனுக்காக 5 நொடிகள்

ஒதுக்கவில்லையெனில், ஜலதோஷம் 5 நாட்கள் எடுத்துக்கொள்ளும்.

தும்மல், மூக்கில் நீர் வடிதல், கண்ணில் நீர் வடிதல், உடல் அலுப்பு இவை ஜலதோஷத்தின் முதல் அறிகுறிகள். **முதல் அறிகுறியிலேயே** சமஹன் எடுத்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்திலேயே ஜலதோஷத்தை தடுத்து நிறுத்துங்கள். 5 நாட்கள் அவதிப்பட வேண்டியதில்லை. அறிகுறிகளின் கடுமையை பொறுத்து இரண்டு பாக்கெட்டுகள் கூட ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

சிறுவர், சிறுமியர்தான் ஜலதோஷத்தினால் அதிகம், வருடத்திற்கு 6-10 முறை



கூட, துன்பப்படுகின்றனர், அவர்களுக்கு பாலில் சமஹன் கலந்து கொடுக்கலாம். (பாதிப் பாக்கெட் போதுமானது)



உங்களுக்கு ஏற்கனவே சைனஸைடிஸ், ப்ராங்கைடிஸ், ஆஸ்துமா இருந்தால், தயவு செய்து ஜலதோஷத்தின் முதல் அறிகுறிகளை அதிலும் மழை, **பனிக்காலங்களில் அலட்சியப்படுத்த வேண்டாம்.**



பயணம் காரணமாக, புது சூழ்நிலை, புது தண்ணீர் போன்றவை ஜலதோஷத்தை உருவாக்கலாம். கைவசம் சமஹன் இருக்கட்டும்.

சமஹன் உங்களுக்கு எப்படி பிடிக்கும்?



சமஹனின் சுவை உங்கள் பாரம்பரியத்தில் ஊறியது
மூலிகைகளின் மணமும், சுவையும் உங்களுக்கு பிடித்து போகும் இப்பொழுதே சமஹன் பருகுங்கள்

சமஹன் ISO 9001 மற்றும் ISO14001 தர தொழிற்கூடத்தில் தயாரிக்கப்படுகிறது.






சமஹன்
14 மூலிகைகளின் சாரம்



(In English, overleaf)

அஞ்சலி

ஆர்தர் மில்லர்



1916 - 2005

ழாக் தெரிதா



1930 - 2004

ஒ. வி. விஜயன்



Photograph K M Madhusudhanan

1930 - 2005

சி.பி. ஸ்னோ

ராபர்ட் ஃப்ராஸ்ட்

தமிழில் சா.தேவதாஸ்



ராபர்ட் ஃப்ராஸ்ட் இறந்த சில மாதங்களுக்குப் பின், மாஸ்கோவிலுள்ள **foreign Languages Library** இல் எனக்கொரு நிகழ்ச்சி இருந்தது. அன்றிரவு அவர் நினைவாக நிகழ்த்தப்படும் சொற்பொழிவு குறித்த நோட்டீஸைப் பார்த்தேன். அதற்கு முன்போ, பின்போ எதுவென்று நினைவில்லை, அதனைக் கேட்கச் சென்றேன். தன் ஆயுளின் இறுதியில் ரஷ்யாவுக்கு வருகை புரிந்திருந்தார் என்று அறிந்தேன் - எந்தவொரு அமெரிக்க எழுத்தாளரது வருகையினைவிடவும் வெற்றிகரமாக அமைந்தது அது. அவரைச் சுற்றிப் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற யெவ்டுஷென்கோ, அவரை நேசித்தார். அப்படியே மற்றக் கவிஞர்களும். அப்படியே அவர் பேசிய பார்வையாளர்களும். அவர் பேசியதை அற்புதமாக ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்திருந்ததாக பிற்பாடு அறிந்து கொண்டேன். மேல்மட்டத்தில் எளிமையாக, இது போன்று எழுதுவது, அநேகமாக மொழிபெயர்ப்பாளரின் நீக்கனவாயிருக்கும் (ட்வார்டோவ்ஸ்கியைப் பொருத்தமட்டில், இது நேர்மாறானது என்பது உண்மையே, அவர் ஒருவிதத்தில் ஃப்ராஸ்டுக்கு இணையான ரஷ்யர்:) மொழிபெயர்க்க எளிமையாக இருக்கும் அது

அலங்காரமிக்கது மற்றும் பகட்டாரவாரமிக்கது. எனினும் பிரச்னை தீர்க்கப்பட்டிருந்தது. இப்போது அவரது கவிதை உலகமெங்கிலும் அறியப்பட்டுள்ளது. எழுத்தாளர் மற்றும் மனிதராக, அவரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

நானே அவரைப் பலமுறை சந்தித்திருந்தேன் - ஆறாண்டுகளுக்கு முன் இது போன்ற வெற்றிகரமான சுற்றுலாவின்போது இங்கிலாந்தில் முதன்முறையாக. வயதானவராக, வல்லமை பெற்றவராக, பரிகாசமும் வேடிக்கைப்பேச்சும் மிக்கவராக அவர், நான் நினைவு கூரக்கூடிய எந்தவொரு எழுத்தாளரையும்விட, பட்டதாரி மாணவரிடத்தே உடனடி தாக்கத்தை உண்டு பண்ணியிருந்தார். அவரைக்குறித்து அமெரிக்காவில் சிறிது கேள்விப்பட்டிருந்தேன் மற்றும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தேன். ரஷ்யர்கள் எப்படி அணுகினர் என்று கேட்க விரும்பினேன்.

அவரது நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல சொற்பொழிவுகளுள் ஒன்றான அது நூதனமான வகையில் கவனம் ஏற்படுத்திற்று. அது ஒரு லிதுவேனிய கவிஞரால் நிகழ்த்தப்பட்டது. அறை நிரம்பியிருந்தது: நூற்றுக்கணக்கில் கூடியிருக்கவேண்டும். அவர்கள் பெரிதும் மரியாதை கொண்டு, உன்னிப்பாகக் கவனித்தனர். உயரமான மேஜை மீது பரிச்சயமான முகத்தின் பெரியதொரு நிழற்படம் இருந்தது. அருகில், தெளிவாகத் தெரியும் வகையில் ஆங்கிலத்திலும் ரஷ்யனிலும் ஃப்ராஸ்டின் நூல்கள் காணப்பட்டன. சொற்பொழிவாளர் விஷய ஞானமிக்கவராகவும், கவிதை குறித்த புரிதல் கொண்டவராகவும் வேட்கையுடன் விரிவாகப் பேசினார். ஆழ்ந்த அனுபவத்திலிருந்து, வாழ்க்கை மீதான ஆழ்ந்த உணர்வோட்டத்திலிருந்து பிறந்த கவிதை அது என்றார். கடுமையான தொனியில் அது குறியீட்டுத் தன்மையிலானது அல்ல; இருப்பினும் உலகளாவிய அர்த்தத்தைக் கொண்டிருக்கும் வகையில், அன்றாட விவகாரங்களில் நிஜ அனுபவம் கொண்டிருந்த, பருண்மையான படிமங்களை கவிஞர் பயன்படுத்தினார். ரஷ்யக் கவிதை, ஆங்கிலக் கவிதையின் பெரும் வித்தகர்கள் இதையே எப்போதும் செய்திருந்தனர் - புஷ்கினும். பார்வையாளர்கள் மேற்கோள்களை கவனித்துக் கேட்டனர் - அவற்றில் சில ஆங்கிலத்தில் இருந்தன. 'நாம் வருந்திக் கொண்டிருக்கும் நமது நண்பர் திறமைமிக்க கவிஞர் மட்டுமல்ல, நெகிழ்ச்சியும், தாராளமும் கொண்ட இதயமுள்ள மனிதரும் கூட. அவர் நம் நாட்டின் நண்பனாக இருந்தார். அவர் சமாதானத்தின் நண்பர். அவரிடமும் நகைச்சுவை மற்றும் ஞானம் இரண்டும் இருந்தன. அமைதிமிக்கவராக, அன்பானவராக, சக மனிதர்களை நேசிப்பவராக, அவர்களுக்கு ஆனந்தம் தருபவராக அதிக ஆயுட்காலம் வாழ்ந்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார்' என்று அவர் பேசிக்கொண்டு போனார்.

பார்வையாளர்கள் உணர்ச்சி மேலிட கைதட்டினர். பல விழிகளில் கண்ணீர் ததும்பிற்று. தனது ஆளுமையின் செல்வாக்கின் காரணமாகவே, அமெரிக்க-சோவியத் நல்லுறவுக்கு அவர் உதவ முடிந்தது, அது அற்புதமானது. அவர்கள்

அவரை நேசித்தனர்; 86வது வயதில் சகவாழ்வில் நம்பிக்கை கொண்டிருந்தார்; அதுவே போதுமானது. மிகவும் நுணுக்கமான பார்வையாளர்களான ரஷ்யர்கள் அவரது பண்புநலனின் ஒவ்வோர் அம்சத்தையும் துருவி ஆராய்ந்தனர்.

விவரணங்களைப் பொருத்தளவில் அவர்களது நிலைபாடு தவறு என்றாலும், ஆழ்ந்த தன்மை கொண்டவர்களில் ஒருவராக அவரை அணுகியது சரியென்றே கருதுகிறேன். தன் இறுதிவரையும் தீவிரம்மிக்கதான வாழ்வு வாழ்ந்தவர் அவர். பெரும் வேதனைகளைத் தாண்டி வந்திருந்தார். உணர்வு மட்டத்தில் அனைத்தையும் அறிந்திருந்தார். விசேடமான வகையில் அவர் நல்லவரல்ல; ஈன்ஸ்டின், ஹார்டியின் தரத்தில் வைத்துப் பார்க்கையில், அவரொன்றும் நல்லவரல்ல. அவர் மாட்சிமைமிக்கவரோ பரிசுத்தமானவரோ இல்லை. தன்னளவிலேகூட தனது உணர்வோட்டத்தை அவர் ஒருபோதும் கட்டுப்படுத்தியதில்லை. சிக்கலும் படாடோபமான வகையில் பல போக்குகளும் மிக்கவர். தான் விரும்பாத எதனையும் அவர் செய்ததேயில்லை; வேறு வழியில்லை என்னும் முகமூடியின் பின்னே, அநேகமாக எதனையும் அவர் விட்டுவைத்ததில்லை. வெங்காயத் தோல்கள் ஒவ்வொன்றாக உரிவது போல, நடிக்கும் திறன் கொண்டவர். சில சமயங்களில் சற்று மோசடியாளனாக இருந்தார். இந்நூலிலுள்ள வேறு யாருடையதைவிடவும், அவரது பண்பு நலன் மிகவும் பல்வேறு தன்மையினதாக பல்திறப்பட்டதாக இருந்தது. தன் இயல்பின் அடியாழத்தில் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு தன்னிச்சையானவர்.

நான் கூறியிருப்பதில் பெரும்பகுதியும் நிச்சயமானவை என இப்போது அறிகிறோம். நீண்ட காலத்திற்குப் பொது வாழ்வில் தக்க வைத்துக் கொண்டிருந்த பாத்திரத்திலிருந்து அது வேறானது மற்றும் முரண்பட்டது. அவரை நான் முதலில் சந்தித்தபோது, பெரும்பாலான மற்றவர்களைப் போலவே நானும் இப்பொதுப் பாத்திரம் அவரது உள்ளார்ந்த அகத்தை ஒத்தது என்றெண்ணினேன். அவரது ஆளுமை பெரும் கவர்ச்சிக் கொண்டிருந்தது. பாத்திர அளவில் அது இனியது - மற்றும் எளிமை தீவிரமான புத்திசாலித்தனம் கொண்டு ஆனால் போட்டிக்கு அப்பாற்பட்டவராக ஓர் எழுத்தாளரை எண்ணிப்பார்ப்பது. இன்னும் நன்றாக அவரை அறிந்தபோது, அக்கவர்ச்சி நிலவவே செய்தது. ஆனால் அந்த மாயம் நிலவவில்லை; அடைவதோ புரிந்து கொள்வதோ சிரமமானதான இயல்பு கொண்ட நுட்பமான மனிதர் அவர் என ஒருவர் குறைந்தபட்சம் உணர்ந்து கொண்டார். தனியொருவகையான விபத்தாக இல்லாது போனால், அவருக்கு நெருக்கமானவர்கள் தவிர்த்து வேறு யாரும் இப்போது அவரைச் சரியாக புரிந்து கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. எளிதானது, போட்டிக்கு அப்பாற்பட்டது. இதனைக் குறிப்பிடும் அவரது வார்த்தையே உள்ளது - மார்ஸல் ப்ரூஸ் போல அந்த அளவு எளியவர் மற்றும் செயலூக்கமிகு மனநிலையில் உள்ள லாயிட் ஜார்ஜ் போல அந்த அளவு போட்டிக்கு அப்பாற்பட்டவர்.



அந்தத் தனிவகையான விபத்து அவர் ஒரு விடாப்பிடியான கடித எழுத்தாளராக இருக்க நேர்ந்ததாகும் மற்றும் ஒரு நெருக்கமான மற்றும் போற்றும் நண்பர் இருந்தார். சுமார் 50 வருடங்களாக அவர் லூயி அண்டர்மேயருக்கு கடிதங்கள் எழுதினார்; இலக்கிய வரலாற்றில் அது மிகவும் சுவையான கடிதத் தொடர்பாகும் (அது ஒரு பக்க கடிதத் தொடர்பாகும், ஒன்று ஃப்ராஸ்ட், அண்டர்மேயரின் கடிதங்களை வைத்திருக்கவில்லை (அ) அண்டர் மேயர் அவற்றை வெளியிட விரும்பவில்லை) அண்டர்மேயர் பத்து வயது இளையவர். அவர் நல்லதொரு கவிஞர் மற்றும் விமர்சகர் – அவரது ரசனைகள் நவீனத்துவத்திற்கு எதிரானவை. ஃப்ராஸ்டின் கட்சிக்காரராக மாறிய முதலாவது அமெரிக்கரில் ஒருவர் அவர். தனது நாட்டிலேயே ஃப்ராஸ்ட் அறியப்படாதவராக இருந்தபோது, ஃப்ராஸ்டின் மரணம் வரையிலும் அவரது அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் ஓய்வொழிச்சல் இல்லாத பாதுகாவலராக இருந்தார் மற்றும் அழகான வகையில் சுயநலமற்ற சிநேகிதராக இருந்தார். ஒருகாலத்தில் ஃப்ராஸ்ட் இலக்கியத்தின் ஞானிகளுள் ஒருவராக விளங்கினார்; அந்தப் பார்வை இனியும் ஏற்க இயலாதது. அப்படியே அது உரித்தானது அண்டர் மேயருக்கே. இலக்கிய நட்புகளில் இளைய சகாவே சீரிய பண்புநலன் மிக்கவராக இருக்கின்றார்; கதேயை விடவும் எகர்மான் சிறந்த மனிதர் மற்றும் காஃப்காவை விடவும் மேக்ஸ்ப்ராட் சிறந்த மனிதர்.

சொல்லிக்கொள்வதற்கு அண்டர்மேயரிடம் நிறையவே உள்ளன; தாராள உந்துதல்கள்மிக்கவர்: விசுவாசமும் அர்ப்பணிப்பும் கொண்ட தாராளவாதி; இருண்டதும், அதீதமானதும் சமயங்களில் குரூரமானவிதத்தில் உணர்வு பாவமில்லாத பழமைப்போக்கும் கொண்ட ஃப்ராஸ்டினை அவர் சந்தித்துக் கொள்ள வேண்டியிருந்தது; அண்டர் மேயரின் நல்ல தன்மைகள், ஃப்ராஸ்டின் குணப் போக்குகளால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்பதுதான் மோசமானது. அண்டர் மேயரின் பெரிய சிக்கல்களை விடவும் ஃப்ராஸ்டின் சிறிய சிக்கல்கள்கூட மிகவும் தாக்கம் உண்டுபண்ணுபவையாக இருந்தன. ஃப்ராஸ்ட் தனது கடிதங்களில் அடிக்கடி தன் அகம்பாவத்திற்காக மன்னிப்பு கோருகிறார். ஒவ்வொன்றையும் அவர் அனுபவித்தது

போலவே, வருத்தத்தினை அனுபவித்தார். ஆனால் அவரது எதிர்கால நடத்தையில் அது அவ்வளவாகத் தாக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. எனினும், இவற்றின் கடைசியிலே, அண்டர் மேயருக்கு இரு வெகுமதிகள் இருந்தன, வேறு யாரும் அவ்வளவு உரித்தானவரில்லை. ஃப்ராஸ்ட் யாருக்கும் அளித்திராத நம்பிக்கையினையும், நட்பினையும் அவர் அனுபவித்தார் (குறுகிய காலத்திற்கு இங்கிலாந்தில் எட்வர்ட் தாமஸுக்கு அளித்தது தவிர்த்து); ஒருவர் நெருக்கமாகும் வேளையில் விரும்பக்கூடியவராக ஃப்ராஸ்ட் இல்லாது போனாலும், நெருக்கத்தில் நேசிக்கப்படக்கூடியவராகவே இருந்தார். இரண்டாவது வெகுமதி, கலை ரீதியிலானது - அண்டர் மேயர் கலையின் பிறவிச் சேவகர்களுள் ஒருவர். நீண்ட கால வருத்தம் மற்றும் நல்லியல்பு காரணமாக, சுயவெளிப்பாடு மிக்க பெரும் ஆவணங்களுள் ஒன்றான இலக்கிய பதிவினைப் பெற்றார். இங்கே ஃப்ராஸ்டின் வெங்காயத்தோல் படாடோபங்கள் அறிந்தே உறித்தெறியப்பட்டன. அநேகமாக எல்லா - எல்லாரும் அல்ல, அநேகமாக - முகத்திரைகளும் விலக்கித் தள்ளப்பட்டன. அவரது முரணியல்புகளுள் ஒன்றில், பொய்கூறக் கூடியவரான ஃப்ராஸ்ட், கடுமையான நேர்மை கொண்டவராகவும் விளங்கினார். பெரும்பாலான அகவய நோக்குடைய எழுத்தாளர்கள் தமக்கென்று தற்சார்புக் குறிப்புகள் மேற்கொள்ளுவது போல், இக்கடிதங்கள் அகவயப்பார்வைகள் கொண்டுள்ளன.

ஓர் எச்சரிக்கை தேவைப்படலாம். இந்த அகவயப்பார்வைகளுக்காகவே, இக்கடிதங்கள் பெரும் மதிப்பு கொண்டவை; ஃப்ராஸ்டினிடத்தே அக்கறை கொண்டுள்ளவர்கள் (அ) மனித அனுபவத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு, அசாதாரணமான உடன்படாமை மனத்திலிருந்து வெளிப்படும் வேறுபல பத்திகள், இலக்கியம் மற்றும் இலக்கிய வாழ்வு குறித்து நிறையவே கற்பிப்பவை; இப்பிரச்னைகள் குறித்து இதற்குமுன் வேறுயாரும் எண்ணிப்பார்த்ததில்லை என்னும் மனப்பதிவை அளிப்பவை. ஆனால் அப்பத்திகளைக் கண்டறிய வாசகன் சிறிது வேலை செய்தாக வேண்டும்: ஒரு பாதி பட்டாசு பிப்பாயும் ஒரு பாதி கல்விவளாகச் சார்பினதுமான, பாவனையின் பிளாஸ்மாவில் அவை பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. இதனை அனுபவித்த அண்டர் மேயர், ஃப்ராஸ்டின் 'அசாதாரணமான வேடிக்கை இயல்பு' என்று அழைத்தார். இதனை நான் ரசித்திருக்கலாகாது; இப்போதுகூட இது என் தாடையை வலிக்குமாறு செய்கிறது.

ஃப்ராஸ்ட் பொய்சொல்லக்கூடியவர் என்று கூறினேன். முதுமையில் கூட புனைந்துரைக்கக் கூடியவராக இருந்தார். பாஸ்டனில், டி.எஸ். எலியட்டுடனான அவரது மோதல் குறித்து நன்கறியப்பட்ட கதை இருக்கவே செய்கிறது - எடுத்த எடுப்பிலேயே கவிதை ஒன்றை உருவாக்கியதாக உண்மையற்ற வகையில் ஃப்ராஸ்ட் கூறிக்கொண்டார். தான் பிறந்த நாள் குறித்து தன் ஆயுளெல்லாம் புனைந்துரைத்தார் என்று தோன்றுகிறது.

உண்மையில் 1874இல் சான் பிரான்ஸிஸ்கோவில் அவர் பிறந்தார். பல ஆண்டுகளாக ஒரு வருடம் பின்னதாகக் கூறினார்; அப்புறம் அவரது பிந்தைய எழுபதுகளில் தவறொன்றினைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்தார். தனது எண்பதாவது பிறந்த நாளினை, தனது எழுபத்தைந்தாம் ஆண்டுக்கு நான்காண்டுகள் கழித்துக் கொண்டாடிய கீர்த்திமிக்க மனிதர் அவர் ஒருவராகத்தான் இருக்க வேண்டும். அந்தக் கதையின் நம்பகத் தன்மையில் எங்கோ நிரடுகிறது. தான் எப்போது பிறந்தோம் என்பது ஏன் அவருக்குத் தெரியாது போயிற்று? ஸ்டாலின் போல் ஜார் காலத்து ஜார்ஜியாவின் கடும் வறுமையிலிருந்து வந்திருந்ததால் அது சரியாக இருந்திருக்கும்; அனால் ஸ்டாலினின் பிறந்த நாள் தேவாலய ஆவணங்களில் துல்லியமாகப் பதியப்பட்டுள்ளது. ஃப்ராஸ்டின் தோற்றுவாய்கள் எழுதப்படிக்காத தன்மையோ, வறுமையோ இல்லாதவை. அவரது தந்தை, தன் மகனின் குழந்தைப் பருவத்தில் **'Bulletin'** இதழில் பத்திரிகையாளராகப் பணியாற்றினார். அவரது தாய் ஒஹியோவில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியை. இத்தகையதொரு குடும்பம் தனது ஒரே மகனின் பிறந்த தினத்தை மறந்திருக்க வேண்டுமெனில் சரியான காரணம் இருக்க வேண்டும். தொழிற்முறை கிரிக்கெட் வீரனான எனது பழைய சிநேகிதன் ஒருவன் தன் முப்பதாவது வயதில் திடீரென இரண்டு வயது குறைவாக இருந்திருந்தால் போட்டி விளையாட்டுகளுக்குத்தான் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு அதிகரித்திருக்கும் என்றெண்ணிய கதையை இது நினைவுப்படுத்துகிறது: இதனால் அவனது பிறந்த தினம், 1888லிருந்து 1890க்கு மர்மமான வகையில் மாறிற்று. யாரும் எதுவும் வினவவில்லை. போட்டி விளையாட்டுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டான்.

மாறாட்டங்களை மோப்பம் பிடித்துவிடும் அமெரிக்கர் சிலர், ஃப்ராஸ்டின் புனைவு குறித்து வேடிக்கை பண்ணினர். தன் கவிதை வாழ்வின் ஆரம்பம் தொட்டு அவர் ஒரு தொழிற்துறை நியூஇங்கிலாந்துக்காரராக, முரட்டு மண்ணின் மைந்தனாக, விவசாயிகளின் விவசாயியாக (அ) (வயதான காலத்தில் அவர் விரும்பிய வரையறுப்பான) வெர்மாண்டின் வெர்ட்டாக ஆகிவிட்டார். சந்தேகமிக்க குரல்கள் அவர் கலிஃபோர்னியாவில் பிறந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றன; மகனுக்கு பதினோரு வயதிருக்கையில் அவரது தந்தை இளமையில் இறக்காது போயிருந்தால், தான் வளரும் மாட்டிலுமாவது அங்கேயே தங்கியிருப்பார். அப்படியானால் நியூஇங்கிலாந்து தொன்மம் எப்படி வந்தது? அவரது தந்தையின் குடும்பத்தினர் பூர்வ குடிகளைச் சேர்ந்த நியூஇங்கிலாந்துவாசிகள், பல தலைமுறைகளாக ஆங்கிலப் பெயர்கள் கொண்டிருந்தவர்கள். பதினேழாம் நூற்றாண்டில் குடியேறிய எல்லாரையும் போலவே அவர்கள் ஒருகாலத்தில் விவசாயிகளாக இருந்திருக்க வேண்டும். அதனைக் கைவிட்டு நீண்ட காலமாயிருக்க வேண்டும். விவசாயம் அவரது புனைவியலான கண்டுபிடிப்பு. உண்மையில் நியூஇங்கிலாந்து தொழில்மயமானதுமே அவரது மூதாதையர் வந்து குடியேறியிருக்க வேண்டும். அவரது தாத்தா ஃப்ராஸ்ட், மாசாசூஸெட்ஸின் நகரமான

லாரன்ஸின் ஆலை ஒன்றில் கண்காணிப்பாளர். அவரின் பதின்பருவம் முழுவதுமே கருப்பு தொழில் வளர்ச்சி நகரச் சூழலில் கழிந்தது - ஆனால் ஒரு கவிதைதான் இதனை ஒப்புக் கொள்வதாக உள்ளது.

வகுப்புத்தலைவனாயிருந்தார்; விளையாட்டுகளில் ஆர்வங்காட்டினார் - அது அவரது முதுமை வரை நீடித்தது; நல்ல உடல்வாகு பெற்றிருந்தார்; பெண்கள் மீதான ஈர்ப்புக் கொண்டிருந்ததை மிகச் சீக்கிரமே அவர் உணர்ந்திருக்கலாம். சக பெண் மீது காதல்வயப்பட்டு, 21 வயதிலே மணம் புரிந்து கொண்டார். நாற்பது ஆண்டுகள் கழித்து அவள் இறக்கும்மட்டும், ஆழமும் வேட்கையும் மிக்க திருமணமாக இருந்ததால், அசைக்க முடியாததாக இருந்தது. அவர்கள் நிறையவே வருத்தப்பட்டனர் - அவள் சற்று அதிகப்படியாகவே.

உயர்நிலைப்பள்ளியை விட்டு வெளியேறியதுமே, தான் விரும்பாத எதனையும் செய்யப்போவதில்லை என்பதற்கான சமிக்ஞைகளை ஃப்ராஸ்ட் வெளிப்படுத்தினார். போட்டியைத் தான் விரும்பவில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்; வெல்லாதிருப்பதை சகிக்க முடியாது என்னும் அளவுக்கு கர்வம் கொண்டிருக்கவேண்டும். தன் கவிதை வாழ்வைத் தொடங்கியதுமே, எந்த ஒரு கவிஞரையும்போலவே போட்டிக் குணம்மிக்கவராகிவிட்டார் - இறக்கும் வரையிலும் அப்படியே இருந்தார்.

தான் ஒரு கவிஞனாக விரும்பியபோது மிக இளைஞனாயிருந்தார். கவிதைகள் எழுதினார், அவற்றில் சில பெயர் தெரியாத பத்திரிகைகளில் வெளியாயின. நாற்பது வயது வரையிலும் அவற்றிற்கென சன்மானம் எதுவும் பெறவில்லை. ஏதேனும் திறமை இருக்கிறதா என்று அவர் அறிந்து கொள்ளவில்லை. சுய சந்தேகத்தின் சாயைகள் பல அவர் கடிதங்களில் தென்படுகின்றன. அவர் கவிதைகளில் எவ்வளவு மதிப்புமிக்கவை? ஏதேனும்? இவ்விருண்ட திட்டுகள் பெரும்பாலான எழுத்தாளர்களுக்குப் பொதுவானவை; அவரிடத்தில் மிகவும் பரவியதாக, மிக ஆழத்தில் படிந்ததாக இருந்தன. உறுதிப்படுத்தப்படுவதற்காக அடிக்கடி மன்றாடினார். இந்த அம்சமே அவரைப் போட்டிக்குணமிக்கவராகச் செய்து, டி.எஸ். எலியட்டுடன் பகைமை கொள்ளுமாறு ஆக்கியது - இது ஒரு ஒருதலைப்பட்ச பகைமை, அப்படியொன்று இருந்ததாக எலியட் ஒத்துக்கொண்டதுமில்லை, ஃப்ராஸ்டிடம் ஆர்வங்காட்டியதுமில்லை. இந்த அம்சமே, ஒவ்வோராண்டும் நோபல் பரிசு மீதான வேட்கை கொள்ளச் செய்து, அவஸ்தைப்பட வைத்தது - அவரது எண்பத்தெட்டாவது வயது வரையிலும் - அது வந்து கொண்டிருந்ததாக எண்ணினார், கடைசியில் இல்லாது போயிற்று.

தன் பெறுமதி குறித்த சந்தேகங்கள் எதுவாயினும் சரி, கலைஞன் குறித்த கருத்தமைவு (அ) ஒரு கலைஞன் எவ்விதம் வாழ வேண்டும் என்பது குறித்து அவருக்கு சந்தேகமே கிடையாது. அவரது முரணியல்புகள் மேல்மட்டத்தில் இது காணப்பட்டது, அதனை மறுதலித்திட நிறைய நேரம் செலவிட்டார். விசுவாசமாக மணந்து கொண்டு, நல்லதொரு பிரஜையாக, நியூஇங்கிலாந்தின்

எளிய விவசாயியான அவருக்கும், எந்தவொரு கடப்பாட்டினையும் ஏற்காத புனைவியல் கலைஞர்களுக்குமிடையே - அவர்களை அவர் வெறுத்தார் மற்றும் பழித்தார் - பொதுவாக என்ன இருக்கக்கூடும்? அநேகமாக எல்லாமும், விவசாயியாக இருந்தே புனைவியல் தன்மை கொண்டதாயிருந்தது - அது அவரது கவிதைக்கு உதவாதபோதும். கலை, தனக்கான நியாயமாக தானே இருந்ததென்று, வெர்லைய்ன்போல், நம்பினார். கவிதை எழுதுவதில் செலவான ஆயுளுக்கு வேறெந்த முகாந்திரமும் தேவையில்லை என்று. தன் முதல்கடமை கவிதை எழுதுவது என்று, கவிதை எழுதும் பொருட்டு வேறெதனையும் பலியிடலாம் என்று. தன் நலனே பலிகொடுக்கப்பட வேண்டும்; அது லகுவாயிருந்தது, ஏனெனில் பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு, நிர்ப்பந்தம் வந்தால், கவிதை எழுதுவதே நலனைக் கொண்டுவருவதாய் இருக்கும். மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் என அவரைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரது நலனும் பலியிடப்பட வேண்டும்; அது அவ்வளவு லகுவானதில்லை, ஆனால் அது அவரைத் தடுத்து நிறுத்தவில்லை.

மணமாகியபோது, அவர் இன்னும் தன் தாயின் தனியார்ப் பள்ளியில் கற்பித்துக் கொண்டிருந்தார். பின்னர் ஹார்வர்டில் படிப்பதற்காகத் தாத்தாவை வற்புறுத்திச் சேர்ந்தார். எழுத்து வாழ்வின் கருத்தமைவுக்கு அது பொருந்திப் போகாததால், இரண்டாம் ஆண்டில் வெளியேறிவிட்டார். மீண்டும் தாத்தாவைப் பார்த்தார். ஒரு பண்ணை வாங்கித் தருவாரா? இப்படி தனது 26வது வயதில், தனது நியூஇங்கிலாந்துப் பண்ணைகளில் முதலாவதாக, விவசாயி-கவிஞன் பாத்திரத்தின் தொடக்கமாக, நியூ ஹாம்ப்ஷையரின் சிறியதொரு பண்ணையில் தன்னை நிறுத்திக் கொண்டார்.

அது ஒரு புனைவியலானதும் இலக்கியத் தன்மைமிக்கதுமான பாத்திரமாகும். அவரது உடனிகழ் காலத்து சகாக்களின் மரபார்ந்த தொழில்மய எதிர்ப்பிலிருந்து இது உருவாக்கப்பட்டது; இங்கிலாந்தை விடவும் வலுவானதாக அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. தோரோ போல் இயங்குவது ஒருவகை மாதிரியாயிருந்தது. ஃப்ராஸ்ட் அப்படி இருந்தார். அது வகைமாதிரியாக இருந்தமையால், **yvor winters** சுட்டிக்காட்டியுள்ளபடி, அவரது கவிதைக்கு ஊறுவிளைவிப்பதாயிருந்தது, புனைவியல் தாக்கங்களிலிருந்து விடுபட முற்பட்டார். தன் இயல்பின் ஆழத்திலிருந்து எழுதியபோது அவர் வெற்றிபெற்றார். ஆனால் சில வேளைகளில், போலியான ஜார்ஜியத்தனமும் போலியான ஆதி உணர்வும், அழுகிய விரலாக துருத்திக் கொண்டிருந்தன. இந்த வகையில் அவர் ஏ.இ. ஹவுஸ்மானை ஒத்திருப்பவர். ஃப்ராஸ்டின் சீரிய கவிதைகள் அவர் விரும்பியதைச் செய்தன; ஆனால் அவரது கடிதங்களிலுள்ள அகவயத் தன்மையிலான தேடுதல்களை வாசிக்கையில், அவர் எழுதியிருக்கக்கூடிய கவிதைகளின்பால் ஏக்கம் கொள்வதை தவிர்க்க இயலாது. தன் காலத்தின் இலக்கிய தட்பவெப்பம் குறித்து யாரும் கூரிய சந்தேகங்கொண்டதில்லை; ஆனால் அவரால்

அதனின்றும் முற்றாக விடுபட இயலவில்லை - தன் முதுமையில் யீட்ஸ் செய்தது போல. யீட்ஸினுடையது போன்று அவ்வளவு தனிச் சிறப்பானதான அவரது அறுதி அசலான தன்மையில் அவ்வளவாக நம்பிக்கை கொள்ளவில்லை. நன்றாகச் செயல்படுவதுதான் விஷயம் என்பார். விவசாயியாக இருக்கப் போவதானால், நல்ல விவசாயியாக இருக்க வேண்டும். பெரும்பாலான அவரது வாசகங்கள் இப்படி சிக்கலானவையாக இருக்கும். எனினும், அவர் ஒரு நல்ல விவசாயியாக இருந்ததில்லை. தன் ஆயுளின் கடைசியில் இதனை அவர் நையாண்டியுடன் ஒத்துக் கொள்வதுண்டு. இதில் அவர் பணம் சம்பாதிக்கவில்லை; தன்னை ஒரு விவசாயியாக கூறிக்கொண்டாலும், நான்காண்டுகள் கழித்து, அது ஒரு பொழுது போக்கு தவிர்த்து வேறொன்றுமில்லை என்றார். அதனின்றும் பல்வேறான கற்பித்தல் மூலம் குடும்பத்தின் வருமானத்தினைச் சம்பாதித்தார்; உள்ளூர் பள்ளிகளில் தொடங்கி, பின்னர் கல்லூரிகளில் கற்பித்தார். 50 வயதாகும் வரையிலும் தன் கவிதையில் ஜீவிக்க முடியாதவராக இருந்தார் - பின்னர் அவர் அரவணைக்கப்பட்டது, புனைவியல் தன்மையிலான பண்ணை விவசயாத்தால் அல்ல, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் நல்லுணர்வு கொண்ட புரவலர் தன்மையினால்தான்.

... ஃப்ராஸ்டின் குடும்பத்ினரது மரபணுக்களில் ஏதோ குறைபாடிருந்தது. அவரது தந்தை முப்பதாவது வயதில் காசநோயினால் இறந்தார். அவரது சகோதரியின் சித்தம் பேதலித்தது. அவரது இளமையில் தனக்கும் காசநோய் இருந்ததாகக் கருதினார். இரு பையன்களும் நான்கு பெண்களுமாக ஆறு குழந்தைகள் அவருக்கு. மூத்தப் பையன் குழந்தைமையிலேயே மடிந்து போனான், அப்படியே இளைய பெண்ணும். அவரது அபிமானமிக்க பெண்ணுக்குக் காசநோய் உள்ளிட்ட பல நோய்கள்; அவற்றிலிருந்து குணமடைந்தாலும் பிள்ளைப் பேற்றின்போது இறந்துவிட்டாள். இன்னொரு பெண், சந்தோஷமற்ற திருமணத்திற்குப் பின், நரம்பியல் சிக்கலுக்கு ஆளானாள். இரண்டாவது மகன் விவசாயம் மற்றும் கவிதை இரண்டிலும் தோற்றுப்போய், மனச்சிதைவுக்கு உட்பட்டு, தன்னையே சுட்டுக்கொண்டான். மூத்தப் பெண் மட்டுமே செயலூக்கத்துடன் விளங்கினாள்.

தனது மகனின் தற்கொலைக்கு முன்பே, ஃப்ராஸ்டின் மனைவி இறந்தவிட்டாள் - அவர் குடும்பத்தின் இறுதி இழப்பு அது. பிரியமான மகளின் இறப்பு சகித்துக் கொள்ள முடியாத இழப்பு அவளுக்கு; அவளால் சமாதானமடைய இயலாத ஒன்று அது. 'இவ்வுலகிலே அவளது வருத்தத்தை அநேகமாக அதிகப்படியாகவே பெற்றுள்ளேன்' என்று குறிப்பிட்டார் ஃப்ராஸ்ட். தன் மனைவி இறந்தபோது தவிர, உணர்வுபாவம் காட்டாத இறுகிய ஆளுமை கொண்டவராக நடந்து கொண்டார். பல ஆண்டுகளுக்கு முன்னர் தன்னைக் குறித்த தீர்க்கதரிசனத்தை முன்வைத்திருந்தார்: தம் உணர்வு நுட்பங்களை அதிகம் பயன்படுத்திவிடுவதால் கவிஞர்கள் குறைந்த உணர்வோட்டமிக்கவர்களாக உள்ளனர். ஜீவிதத்திற்காக உணர்வோட்டம்



கொள்ள வேண்டியுள்ளவர்கள், தவிர்க்க முடியாதவகையில், தொழில் ரீதியிலான நிலமைகள் தவிர்த்து, ஒட்டுமொத்தமாக உணர்வுபாவமற்றவர்கள் ஆகிவிடுகின்றனர்.' அவரது சில குழந்தைகளின் சோகமுடிவுகளை அவர், பலரை விடவும் நிதானத்துடன் தாங்கிக்கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. எனினும், அவரது மனைவி இறந்தபோது - அவர்களிருவரும் அப்போது தம் அறுபதுகளின் மத்தியில் இருந்தனர் - சமநிலை இழந்தவர் போலானார். பேசிக்கொண்டிருப்பதும், குடிப்பதும் (அவரது வாழ்வில் அப்போது மட்டும்) வேளைகளிலிருந்து விலகுவதும் என்றிருந்தார். ஓராண்டு கழிவதற்கு முன்பே, 'உருக்குறுதி கொண்ட வயதானவனிடம் அளவாக வருத்தம் கொள்ளுங்கள். என் விருப்பப்படி நடக்கவேண்டும் என்றும் வலுவான எனது முடிவு தவிர்த்து வேறெந்த விதத்திலும் நான் செயல்படுவதுமில்லை (அ) சொல்வதுமில்லை. நோயாளியாக நான் தோன்றலாம், அது நடைமுறைக் காரணங்களுக்காகவே. என்னுடையது போன்ற இயல்புக்கு உரித்தானது எதுவென்று எனக்குத் தெரியவில்லை. நான் பீற்றிக் கொண்டிருந்தேன் ... என் இயல்பை வெல்லுமளவுக்கு நான் புத்திசாலி' என்று ஆகிவிட்டார்.

பேரும் புகழும் பாதுகாப்பும் சிறிது பணமும் பெற்றிருந்தபோது, இந்த விநாசங்களெல்லாம் நேர்ந்தன. அப்போது அவருக்கு நாற்பது வயது. அதுவரையிலும் அவர் எழுதின கவிதைகள் பத்திரிகைகளில் வெளியாகிக்கொண்டிருந்தன; நியூ ஹாம்ப்ஷையர் பள்ளிகளில் கற்பித்துக் கொண்டிருந்தார்; அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது குறித்து யாரும் கவலைப்படவில்லை. எந்த விமர்சகனும் அவர் கவிதை பற்றிப்பேசவில்லை.

அப்போதுதான் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று அவருக்குத் தோன்றிற்று. சிறு தவணைகளில் அவருக்குப்பணம் கிடைக்கும் வகையில் உயில் எழுதி வைத்துவிட்டு, அவரது தாத்தா இறந்து போனார். இங்கிலாந்து சென்ற சில மாதங்களுக்குள்ளாகவே அவரது முதல் கவிதைத் தொகுப்பு வெளியானது, எஸ்ரா பவுண்டின் கவனத்தை ஈர்த்தது, விமர்சன

ரீதியிலான வெற்றி கண்டது.

இது எளிதானதாகப்படும். இது இங்கிலாந்தில் நிகழ்ந்தது என்று கேள்விப்படும் ஆங்கிலேயனுக்குச் சந்தோஷமானது. ஆங்கிலேய இலக்கிய வட்டாரங்கள் பொருத்தமற்ற மதிப்பை அளித்துவிடுவதில்லை. இத்தருணத்தில் அவர் சில நல்ல கவிதைகள் எழுதியிருந்தார், அவை தொகுக்கப்பட்டதும், திறமையைக் கண்டுகொள்ள நேரமாகவில்லை. மேலும் மேலோட்டமானவகையில், ஜார்ஜிய கவிதைத் தொனியில் அவர் எழுதிக்கொண்டிருந்தார்; ஜார்ஜியக் கவிஞர்களுடையதை விடவும் மேலானதாக இருந்தன. எஸ்ரா பவுண்டைப் பொறுத்தமட்டில், திறமையைக் கண்டறிவதில் தாராளமானவராக காணப்பட்டார். அவரும் ஃப்ராஸ்ட்டும் சீக்கிரமே சண்டையிட்டுக் கொண்டனர். பவுண்டின் விதிகளுக்கேற்ப ஃப்ராஸ்ட் எழுதவேண்டும் என்று பவுண்ட் விரும்ப, அப்படி எழுதக்கூடிய இறுதி நபராக ஃப்ராஸ்ட் இருந்தார். தன் விதி தவிர்த்து, வேறெந்த விதிகளின் படியும் எழுதுவதோ வேறெதுவும் செய்வதோ ஃப்ராஸ்டால் ஆகாதது. தம் எஞ்சிய ஆயுளில் அவர்கள் இலக்கிய எதிரிகள் ஆயினர். ஆனால் அட்லாண்டிக்கின் இரு புறங்களிலும் ஃப்ராஸ்டின் செல்வாக்குக்கு பவுண்ட் காரணமாயிருந்தார். இரண்டாண்டுகள் கழிதது, பெதெஸ்டா நல்வாழ்வு இல்லத்திலிருந்து பவுண்டை விடுவிக்கச் செய்வதில் பொறுப்பேற்றுக்கொண்டு, அக்கடனைத் திருப்பிச் செலுத்தினார். தனது கடமையைச் செய்துள்ள பிரக்ஞை மற்றும் கவிதையின் ஆதரவாளராக இருப்பது குறித்த பெருமிதம் கொண்டு, 'நான் அந்த மனிதரைக்கூட விரும்பவில்லை' என்று குறிப்பிட்டாராம்.

இரண்டாவது தொகுதி **North of Boston** வெளிவந்ததும், இன்னொரு பெரிய வெற்றி கிட்டிற்று. இங்கிலாந்தில் அவர் பெயர் பெற்றார். (ஓராண்டு கழித்தே அவரது முதல் தொகுதி நியூயார்க்கில் பிரசுரமாயிற்று) அவருக்கு 40 வயது. ஏப்ரல் 1914.

அடுத்த ஆண்டு நாடு திரும்பினார். இங்கிலாந்திலிருந்த காலகட்டம் அவரைக் கவிஞராக நிலை நிறுத்திற்று. அத்துடன் எட்வர்ட் தாமஸுடனான அழகிய நட்பினை அளித்தது; ஃப்ராஸ்டின் செல்வாக்கு இல்லாது போயிருந்தால் தாமஸின் கவிதை எழுதப்பட்டிருக்காது. எனினும் இங்கிலாந்தையோ ஆங்கிலேயர்களையோ ஃப்ர்ராஸ்ட் விரும்பவில்லை. அவரது முதுமையில்தான் அவரின் அணுகுமுறை சற்று மாற்றம் கண்டது. 1957இல் இங்கிலாந்தில் அவருக்குக் கிடைத்த வெற்றிகரமான வரவேற்பு, அந்நாடு பற்றிச் சிறிது குறிப்பிட வேண்டும் என்று அவரை உணரவைத்தது (ரஷ்யாவில் வெற்றி பெற்ற பிறகு அதனையே ரஷ்யா குறித்தும் உணர்ந்தார்) ஆனால் அநேகமாக அவரது ஆயுள் முழுக்க நிஜமாக அவர் எங்களை விரும்பவில்லை.

இது ஆச்சரியமளிப்பதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆங்கிலேய - அமெரிக்க உறவுகள் குறித்து சமநிலை இழந்த தன்மை எப்போதும் இருந்து

வருகிறது. அமெரிக்காவின் பெரும்பகுதி நாளைக் கழித்திருக்கும் ஆங்கிலேயனைப் பொறுத்தமட்டில் இது உண்மையே – அங்கே அந்நியனைக் காண்பது சாத்தியமற்றது என்றே காண்கிறேன். இவ்வேறுபாடுகளை நன்கறிவேன், அமெரிக்காவின் சில பகுதிகளில் வாழ்ந்திருக்கிறேன் – பெரும்பாலான அமெரிக்கருக்கு அது பரிச்சயமற்றதாகத் தோன்றும். எனினும் நான் அந்நியனாக உணரவில்லை. சொந்த நாட்டில் எடுத்துக் கொள்வது போன்ற உரிமைகளை ஒருவர் எடுத்துக் கொள்ளத்தலைப்படுகிறார் என்பதே இதன் பொருள்; தனது விமர்சனத்தில் ஒருவர் சுதந்திரம் கொண்டுள்ளார் – நம் சமூகக் கட்டமைப்பில் இங்கிலாந்தைப் போன்றே உள்ள ஹாலந்து, ஸ்வீடனை விடவும்.

இத்தகு உரிமைகள் எடுத்துக் கொள்வது சரியல்ல என்று ஃப்ராஸ்ட் எண்ணியிருப்பார்; ஆங்கிலேயர்கள் தம்மை அமெரிக்காவில் அந்நியராக உணர்ந்திருக்க மாட்டார்கள்; ஆனால் அவரோ இங்கிலாந்தில் அந்நியராக உணர்ந்தார். இது சற்று விசித்திரமாகத் தோன்றும். பெயரில், தோற்றத்தில், மதத்தில் அவரது மூதாதையர், அவரது ஆங்கிலேய சகாக்களிடமிருந்து பிரித்துப்பார்க்கப்பட இயலாதவர்கள். எனினும் இச்சூழ்நிலைக்குறைவு அவரைப் பொறுத்த அளவிலே நிஜமானது. இப்போது அது பலவீனமடைந்து கொண்டிருக்கலாம். ஆங்கிலோ – சாக்ஸன்களிடம் இது வலுவாயிருந்தது எனச் சிலவேளைகளில் சந்தேகம் கொள்கிறேன். இங்கிலாந்தினை மிக இலகுவாகப் புரிந்துள்ள அமெரிக்கர் சிலர், எம்மை நாங்கள் ஏற்றுக்கொள்வது போலவே ஏற்றுக்கொண்டனர் மற்றும் அமெரிக்காவில் நாங்கள் எடுத்துக் கொள்ளும் உரிமைகளை எடுத்துக் கொண்டனர் – மற்றும் ஃப்ராஸ்ட்டிடமிருந்து வேறான தோற்றுவாய்கள் கொண்டிருக்கின்றனர்.

அவரது நாற்பது வயதில் இங்கிலாந்து அவரை நிலைநிறுத்திற்று; வாழ்வதற்கு இன்னும் அவருக்கு நீண்ட ஆயுள் இருந்தது. மிகவும் வயதாகும் மட்டும் (அவரைப் போன்ற கவிஞருக்கு அது அரிதானது) அவர் கவிதை எழுதிக் கொண்டிருந்தார்; அவருக்கு அது ஒரு நியாயப்பாடு, அவரது இருப்பின் அத்தாட்சியாய் அது இருந்தது. தலை முறையில், தன்னைக் கவனித்துக் கொள்வதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். இன்றும் அவர் தன்னை விவசாயி என்று அழைத்துக்கொண்டார்; அத்தகைய நியூ இங்கிலாந்து பண்ணைகள் மூன்றினைப் பெற்றிருந்தார்; ஆனால் அவற்றிலே அதிகப்படியான நேரத்தைச் செலவிடவில்லை. பெரும்பாலான நல்ல எழுத்தாளர்கள் போலவே, குறிப்பாகத் தம் எழுத்து குறித்து புனைவியலான கருத்தாக்கம் கொண்டுள்ளவர்கள் போலவே, அவர் ஓர் அருமையான வியாபாரி, விவசாயியல்லவெனினும் மேலான வியாபாரி (குறிப்பாக வெல்ஸ், அர்னால்ட் பென்னெட்டை விடவும் – அப்படி இருப்பதில் பெருமிதம் கொண்டவர்கள் – மேலான வியாபாரி) தொண்ணூறாவது வயது வரையிலும் தனது வெளியீட்டாளர்களிடமிருந்து ஆண்டு உதவித்தொகை பெற்றார் – ஆக.

அவரது கவிதையிலிருந்து பணம் பாயத் தொடங்கிற்று - அது அதிகத் தொகை இல்லையென்னும், எலியட் தவிர்த்த நவீன ஆங்கிலக் கவிஞன் யாரும் பெற்றதைவிடவும் அதிகமானதே. கடுமையான பேரங்களில் அவர் ஈடுபடினும், அவர் முற்றிலும், நேர்மையானவராக இருந்தார். ஆனால் அவருக்கு உண்மையான ஆறுதல் ஆதாரமாக இருந்தது அமெரிக்க பல்கலைக்கழக உலகமே.

கல்லூரி-பல்கலைக்கழகங்களிலுள்ள எழுத்தாளர்களுக்கெல்லாம் அவர் ஒரு தந்தையைப் போன்றிருந்தார். மிசிகன் மற்றும் அம்ஹெர்ஸ்ட் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக விளங்கினார். தனது எண்பதுகள் வரையிலும் கல்லூரி வட்டாரங்களில் உரைநிகழ்த்தினார். ஒருவகையில் அமெரிக்க தேசிய கவிஞராக காணப்பட்டார். எந்தவொரு எழுத்தாளரையும்விட அதிகமான கௌரவ பட்டங்கள் பெற்றார்.

பல எழுத்தாளர்களுக்கு இது நாசகரமாக இருந்திருக்கும். அவருக்கு அப்படி இல்லை. அவரைப் பொறுத்தவரை வசதியோ, பணமோ ஒரு பொருட்டில்லை; இதில் அவர் ஜி.எச். ஹார்டியினை விடவும் அதிகமாகக் கோரவில்லை. அது ஒரு ஆறுதலாயிருந்தது அவருக்கு. அதனை கல்லூரிகளிலிருந்தும் மாணவர்களிடமிருந்தும் சுவாசித்துக் கொண்டார்; இல்லாது போனால் அவ்விடங்களுக்குப் போயிருக்கமாட்டார் ... கல்வி வளாக இலக்கியச் சிந்தனை அவருக்கு இணக்கமாக இருந்ததில்லை (விஞ்ஞானிகளிடம் அதிக இணக்கமாயிருந்தார்) அவர் பாவனை செய்ததை விரும்பியதை விடவும் மேலதிகமான வகையில் கல்வி வளாக சார்புடையவராகவே இருந்தார். அவரது இலக்கிய அசல்தன்மை, அவரது காலத்து கல்வி வளாகத்திலொருடையதின்றும் வேறுபட்டது. அவர் ஏங்கிய அங்கீகாரத்தை அவர்கள் வழங்கவில்லை - ஒன்றிரண்டு விதிவிலக்குகள் தவிர்த்து.

அவரது சிக்கலான இயல்புகளில் ஓர் எளியதன்மை இருந்தது. அவர் மாபெரும் கவிதைகள் எழுத விரும்பினார். கலைஞன் என்ற வகையில் அவர்டம் முழுமையான நாணயம் இருந்தது. மோசமானது என்று அவர் அறிந்த கவிதையை எழுதுமாறு, எதுவும் அவரை தூண்டிவிட இயலாது. நிறைவடையாத கவிதையை அச்சிடுமாறு எதுவும் அவரை அனுமதித்துவிடாது. கூடே, தாமஸ் ஹார்டியை விடவும் நீண்ட ஆயுள் கொண்டிருந்த அவர், தன் இலக்கியத்தரங்களைக் காப்பாற்றினார். அதிலே அவர் எளிமையாயும் உன்னதமாயும் இருந்தார். நகர்கின்ற மணல் திட்டின் கீழ்மட்டத்தில் எங்கோ ஓரிடத்தில் திடமான பாறை காணப்பட்டது.

அவர் மடியும் மட்டும் அது நீடித்தது; அதுபோலவே, ஒருபோதும் திருப்தியுறாத அதீத வேட்கையும் இருந்தது. மாபெரும் கவிதைகள் எழுத விரும்பினார். மாபெரும் கவிதைகள் எழுதியுள்ளார் என்று பேசப்படவும் விரும்பினார். இந்த விஷயத்தில் அவர்பிற எழுத்தாளர்களிடமிருந்து

வித்தியாசப்படவில்லை; உறுதிப்படுத்தப்படவேண்டிய அவசியத்தால், இந்த ஆசை வழக்கத்திற்கு மாறான விதத்தில், வலுவாக இருந்தது. அவர் விரும்பிய வண்ணமே அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். இவை வரையறுக்கப்படக் கூடியவையே. இவை பணத்தையோ பார்வையாளர்களையோ, மாணவர்களையோ, விருதுகளையோ குறிக்கவில்லை. இவை உறுதிப்படுத்தப்படல்களே, ஆனால் உண்மையில் இவை நிஜமானதின் விளிம்பு மட்டுமே. அவரது நிபந்தனைகள்: டி.எஸ். எலியட் பெற்றிருந்த அங்கீகாரம் தனக்கு வேண்டுமென்றார். கர்வமிக்கவர், பொறாமை கொண்டவர். எலியட் மீதான பொறாமையை அவர் தணித்துக்கொள்ளவில்லை. வரலாற்றில் யாருக்கும் கிடைக்காத அறுதி அங்கீகாரம் எலியட்டுக்கு கிடைத்திருந்தது. அவருக்கு கிடைக்கவில்லை. முதுமையில் குலத்தந்தை போன்ற உருவில், இளைஞனின் பேராசையினை, இளைஞனின் ஆத்திரத்தை, நிறைவேறாத ஆசைகளினால் இளைஞன் கொண்டிருக்கும் வேட்கையினை அவர் தக்க வைத்திருந்தார்.

இதன் காரணமாகவே நோபல் பரிசு, அவருக்குப் பொருத்தமற்ற விதத்தில் பெரிதாகப்பட்டது. நிறையப் பரிசுகள் பெற்றிருந்த அவருக்கு இது ஒரு குறியீடாக இருந்தது. எலியட் அதனை வென்றிருந்தார். அவர் வெல்லவேண்டியவர். நோபல் பரிசு கிடைத்திருந்தால், அவர் பெற்றிருந்த அங்கீகாரத்தின் தன்மையை அதுமாற்றியிருக்காது; கல்வி நிறுவனங்கள் எலியட் குறித்து எழுதியது போன்று, அவரைப்பற்றி எழுதி இருக்காது.

... அவரது அணுகுமுறைகள் வெறுமனே அணுகுமுறைகளாக இல்லை, கடுமையாக உணரப்பட்டன - அதீத எதிர்வினையாக இருந்தன. அண்டர்மேயருடனான கடிதப் போக்குவரத்தில், தாராள மனங்கொண்ட அண்டர்மேயர் அவருடன் விவாதித்தது மட்டுமல்லாது, மன்றாடவும் செய்திருக்கிறார் - ஹிட்லர் நெருக்கடியின்போது ஃப்ராஸ்டின் பதில்கள் பிடிவாதமானவையாகவும் விஷய ஞானம் நிறைந்தனவாகவும் இருக்கும் - குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சில்லறை கடைக்காரருடையது போன்று. நல்ல எழுத்தாளர்கள் பிற்போக்குப் பழமைவாதிகளாக இருக்க முடியாது என்று நான் கூறவில்லை. மிகச்சிறந்த சிலர் அப்படி இருந்துள்ளனர். பின்வரும் குறிப்பைப் புரிந்து கொள்வது சிரமம்:

"நீங்கள் ஏழைகள் பக்கமாக நிற்கவேண்டும். உங்கள் கவிதைகள் ஏழைகளைக் குறித்தவை' என்கின்றனர் நண்பர்கள். அவர்தம் வறுமை குறித்து ஏதேனும் செய்யப்பட இருந்ததாக நான் எண்ணியிருந்திருந்தால், அவர்களைப் பற்றி எழுதியிருக்க மாட்டேன் என்பதுதான் எனது பதில். ஏழைகளிடமிருந்து விடுபடுவதற்காக நான் அதனைச் செய்யவில்லை. என் விவகாரத்தில் அவர்கள் எனக்குத் தேவை. எப்படியாயினும் அவர்களைக் குறித்து நான் எழுதியபோது, அவர்களை விடவும் வறியவனாக இருந்தேன்."

அரசியல் எதிர்வினையின் மையத்தை நோக்கி லாரன்ஸ், யீட்ஸ், எலியட்,



பவுண்ட், லீவிஸ் ஆகியோர் எழுதியுள்ள எதனைவிடவும் இது ஒரு நிஜமான அகப்பார்வை (இங்கேயும் அவர் தனக்குத்தானே நேர்மையாக இருப்பதால்) மற்றும் மிகவும் மிருகத்தனமானது. அவர்கள் எங்கே நின்றுள்ளனர் என்று இப்போது தெரிகிறது. தம் நோக்கங்களை அவர்கள் அழகுபடுத்தினர் (அ) அற்புதமாக்கினர் (அ) காவியத்தன்மை கொண்டதாக்கினர். ஃப்ராஸ்ட் அதனைச் செய்யவில்லை, அந்த மட்டுக்கும் அவர் மதிக்கத்தக்கவர். **Action Francaise** இன் வெறி (அ) லாரன்ஸின் **"Fuhrer"** வகை உணர்ச்சி மேலிட்ட வெளிப்பாடுகளைவிடவும், செனட்டர் ராபர்ட் டாஃப்டின் வலதுசாரித்தனமான அவரது அதீதப் பிற்போக்குவாதம் மதிக்கத்தக்கதே. ஃப்ராஸ்ட் எழுதியவற்றில் யூதருக்கு எதிரானது எதுவுமில்லை. எனினும் அவரின் ரஷ்ய அபிமானிகள் அவரது கடிதங்களைப் படித்தால், அதிர்ச்சி அடைந்திருப்பார்கள்.

... அடுத்து நான் அவரைப் பார்த்தது பெர்க்லியில் மூன்று வருடங்கள் கழித்து, நவம்பர் 1960இல். நோபல் பரிசு கிடைக்காததால் வருத்தப்பட்டிருந்தார். நிலை குலைந்து போயிருந்தார் ... தொலைபேசி அடிக்கும் என்று காத்துக்கொண்டிருந்தார். நீண்டநேரக் காத்திருத்தல். ஒரு வழியாக அடித்தது. பரிசு அவருக்கு இல்லை என்று ... வென்றவரின் பெயர் அறிவிக்கப்பட்டது. அது சாத்தியமற்றது என்று கத்தினார். அது சாத்தியமற்றது. அது சாத்தியமற்றது. **Schadenfreude*** என்று தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டு, தன்னால் எண்ணிப்பார்க்க முடிவது அவ்வளவுதான் என்றார் ஃப்ராஸ்ட். ஆனால் அது நிகழ்ந்திருந்தது.

பிற்பாடு அவர் கலகலப்பாகி விட்டார். இங்கிலாந்து பற்றிப் பேசினார். ஆயுள் முழுவதும் ஆங்கிலேயரை நேசித்தார் என்னும்படியாக இருந்தது எனது மனப்பதிவு. பொதுமொழி குறித்து உற்சாகம் கொண்டிருந்தார் - அதுதான் சாராம்சமானது. அப்புறம் கலையில் **'the locative'** என்பது குறித்துப் பேசினார். ஓரிடத்தின் தனித்தன்மைகளில் வேர்கொண்டதாக இருப்பதுதான் **locative** என்று அவர் குறிப்பிட்டார்.

அது குறித்து ஒரு விவாதம் நிகழ்ந்தது. உணர்வு மட்டத்தில் நான் அவர் பக்கம் என்று கூறினேன். ஆனால் **locative art** டினைப் புரிந்து கொள்ள விஷயஞானமும் பொறுமையும் அவசியம்; எனவேதான் **cosmopolitian art, abstract art** என்பன துரிதமாக, தொலைதூரமாக சென்று விடுகின்றன. காஃப்காவையோ, ஹெமிங்வேயினையோ வாசிக்க எதனையும் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஜேன் ஆஸ்டினோ ஃப்ராஸ்டோ செய்யாத அளவுக்கு அவர்கள் உலகத்தைச் சுற்றி வந்திருந்தனர். மிகப்பெரும் **locative art** அனைத்தையும் தாண்டி நிற்பது. அது ஒன்றியைந்து உயிரோட்டமாயிருப்பது; வேறெந்தக் கலையும் அப்படி இருக்க இயலாது.

இது நிகழ்ந்து இருமாதங்களுக்குப் பின்னர்தான், அமெரிக்காவின் தேசிய கவிஞராக மாபெரும் காட்சியளித்தார். ஜனாதிபதி கென்னடி முன்னிலையில் அது நிகழ்ந்தது. இங்கிலாந்திலிருந்து நாங்கள் அதனைத் தொலைக்காட்சியில் கண்ணுற்றோம். நெகிழச் செய்வதாக இருந்தது. ஜனாதிபதியருகே வயதானவர் நின்று கொண்டிருந்தார். அவரது திறன்கள் இன்னும் ஆற்றல் கொண்டிருக்கும், தணியாத வேகம் இன்னும் படிந்திருக்கும் வயதானவர் அவர். அந்நிகழ்வுக்கென எழுதப்பட்ட கவிதையை வாசிக்க இருந்தார். ஜனவரி மாத சூரிய ஒளியில், அடிக்கும் காற்றில் அவரால் எழுத்தைப் பார்க்க இயலவில்லை. சமயோஜிதமாக அவரது தேசபக்திப் பாடலான **The Gift outright** டினை சொல்லத் தொடங்கிவிட்டார். தனக்கு மனப்பாடமாகியிருந்த அச்சொற்களைக் கென்னடியின் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருந்தன.

அதன் பின்னர் மேலும் கௌரவங்கள்; அவரது எண்பத்தெட்டாவது பிறந்தநாளில் நாடாளுமன்றத்தின் தங்கப் பதக்கம்; ரஷ்யாவிற்கு வெற்றிப் பயணம். ஆனால் நோபல் பரிசு இன்னும் வந்தபாடில்லை. 1962இல் அதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரது எண்பத்தொன்பதாவது பிறந்த தினத்திற்கு சற்று முன்னதாக, 1963 ஜனவரியில் அவரது பழைய நண்பர் அண்டர்மேயர், அவரது மரணப்படுக்கையில் அவரைக் காணச் சென்றார். சமீபத்தைய வெற்றிகள் மற்றும் இன்னும் அவர் என்ன விரும்புகிறார் என்பன குறித்து அவர்கள் பேசினர். அந்த ஆண்டுக்கான நோபல் பரிசை அவருக்காக ராபர்ட் க்ரேவ்ஸ் முன்மொழிந்திருந்த கடிதத்தை அண்டர் மேயர் வாசித்துக்காட்டினார். ஃப்ராஸ்ட் திருப்தியுற்றார். வசந்தத்தின்போது இங்கிலாந்தில் இன்னொரு பெரிய விருதைப்பெறபோவதாகத் தெரிவித்தார். மறந்துவிட வேண்டாமென்று அண்டர் மேயரிடம் கூறினார். 'அந்நம்பிக்கையுடன் கிளம்பினேன்' என்று குறிப்பிட்டார் அண்டர் மேயர். ஒருவாரம் கழித்து ஃப்ராஸ்ட் இறந்து போனார்.

* ஜெர்மானியச் சொல் : 'வேறொருவரின் துயரங்களால் ஒருவர் அடையும் துயரம்'

-Varaity of Men / C.P. Snow / Macmillen, 1967 - நூலிலிருந்து

ராபர்ட் ஃப்ராஸ்ட் கவிதைகள்

தமிழில் : சா. தேவதாஸ்.



பூரண அன்பளிப்பு

இந்த நிலம் எங்களுடையதாய் இருந்தது
நாங்கள் அதனுடையதாய் ஆவதற்கும் முன்.
அது எங்களுடையதாய் இருந்தது நாங்களதன்
மக்களாவதற்கு நூறாண்டு காலத்திற்கும் முன்.
அது எங்களுடையதாயிருந்தது மசாசூசட்ஸில் வர்ஜீனியாவில்
ஆனால் நாங்களோ இங்கிலாந்தின் காலனிவாசிகளாய்
இன்னும் குடியேற்றக்காரர்களாய் இருந்தோம்.
அது எங்களுக்கு உடைமையான பின்னும் உரிமையாக்கப்படாததாய்
இப்போது பூரண உரிமையோடு உடைமையாக்கிக் கொண்டோம்
ஏதோ ஒன்று நாங்கள் விலக்கியதே எங்களைப் பலவீனமாக்கியது
நாங்கள்தான் அஃதென்று நாங்களே கண்டறியும் வரையில்
எங்களின் ஜீவித நிலத்திலிருந்து விலக்கி வைத்தோம் எங்களை
சட்டென சரணாகதியில் மீட்சி கண்டோம்
இவ்விதமாய் எங்களுக்கே அளித்துக் கொண்டோம்
நேரிடையாக அப்படியே முழுமையாக
(பரிசின் உடன்பாடோ பல சண்டைகளின் உடன்பாடுகளால் ஆனது)
நம் நிலம் மேற்கு வரையிலும் தெளிவற்றதாய்
ஆனால் இன்றும் இருக்கும் சொல்லப்படாததாய்
வடிவுடன் வளர்த்தெடுக்கப்படாததாய்
அப்படித்தான் இருந்தது அது அப்படித்தான் ஆகுமென்று.

போகாத பாதை

மஞ்சள் வனமொன்றில் இருபாதைகள் பிரிகின்றன
இரண்டிலும் போக முடியாதது வருந்த வைக்கிறது
ஒரு பயணியான நான் நீண்டநேரம் நின்று
என்னால் முடிந்தமட்டும் ஒன்றையொன்று உற்று நோக்கினேன்.
ஒன்று புதரில் எங்கே வளைந்து திரும்புகிறதென்று
மற்றொன்று சீரியதாய் இருந்தது இன்னும்
தடங்கள் படியாது புல் நிறைந்ததாயும்
அக்காலையில் இரண்டும் சமமாகக் கிடந்தன.
எந்தக் காலடியும் பதிந்திராத இவைகளில்
முதல் பாதையை இன்னொரு தினத்துக்கு ஒதுக்கினேன்!
ஒருபாதை இன்னொன்றாகக் கிளைத்துச் செல்வதறிந்தும்
திரும்பி வருவேனா என்று சந்தேகித்தேன்.
இதனைப் பெருமூச்செறிய கூறிக்கொண்டிருப்பேன்
பல யுகங்கள் கழித்தும்
வனமொன்றில் இருபாதைகள் பிரிந்தன, நான்
இதுவரை போகாத பாதையைத் தெரிவு செய்தேன்.
அதுதான் உண்டாக்கியது எல்லா வித்தியாசங்களையும்.

தொலைவாகவும் இயலாது ஆழமாகவும் இயலாது

கடற்கரை ஓரமாய் உள்ளவர்கள்
திரும்பி ஒரே திசையில் நோக்குகின்றனர் எல்லோருமாக.
தம் முதுகைத் திருப்புகின்றனர் நிலத்திற்கு
நாளெல்லாம் நோக்குகின்றனர் கடலினை.
கப்பலொன்று தன் உடற்பாகத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறது
எவ்வளவு முடியுமோ அவ்வளவு
ஈரத்தரை பிரதிபலிக்கிறது புல்போல
நிற்கும் கடற்காகத்தை.

நிலம் வேறுபடக்கூடும் மேலும்
ஆனால் நிஜம் எதுவாயினும்

நீர் வந்து சேர்கிறது கரைக்கு
மக்கள் பார்க்கின்றனர் கடலினை

அவர்களால் தொலைவாகப் பார்க்க முடியாது
அவர்களால் ஆழமாகப் பார்க்க முடியாது
ஆனாலும் எப்போதேனும் தடையிருந்ததா
அவர்களின் கவனிப்புக்கு



பனி விழும் மாலையில் வனத்தருகே நிற்றல்

எனக்குத் தெரியுமென்று நான் கருதும் இவ்வனம் யாருடையது?
அவனது வீடு கிராமத்திலிருக்கிறது எனினும்
பனி நிறைந்துள்ள தனது வனத்தில்
நானிப்படி இங்கு நிற்பதைக் காண முடியாது அவனால்.

இது ஒரு விநோதம் என்றுகூட என் சின்னக்குதிரை கருதும்
அருகாமையில் பண்ணை வீடு ஏதுமில்லாது
காட்டருகே உறைந்து போன ஏரியிடையில்
ஆண்டின் மிக இருண்ட மாலையில் நானிப்படி நிற்பதை.

தன் சேணத்து மணிகளை அசைக்கிறது
தவறேதேனும் உள்ளதா என்று விசாரிக்க.
இருக்கும் இன்னுமொரு சப்தம்
மெல்லிய காற்றுடன் கொட்டும் பனி வீச்சு.

வனம் இனியது இருள் ஆழ்ந்து அடர்ந்தது
ஆனால் நிறைவேற்ற கடமைகள் அநேகம் என்னிடம்
மற்றும் தூங்கும் முன் பல மைல்கள் போக வேண்டும் நான்
தூங்கும் முன் பல மைல்கள் போகவேண்டும் நான்.

பனிப்பாலைப் பகுதிகள்

பனி வீழ்வும் இரவு கவிழ்தலும் விரைவாக
கடந்த காலத்துள் போய்க்கொண்டிருந்ததாக நான் கண்ட வயலில்
தரை அநேகமாய் பனியால் மூடுண்டது மிருதுவாய்
ஆனாலும் தலைகாட்டும் சில புல்பூண்டுகள்
அதனைச் சூழ்ந்திருந்த வனங்கள்
கொண்டிருந்தன அவற்றினுடையவைகளை
விலங்குகளெல்லாம் அடைந்து கிடக்கும் தம் குகைகளில்
எண்ணிப்பார்க்க மறந்தவனாய் இருக்கின்றேன்
நானறியாதபடி என்னை உள்ளடக்கிக் கொள்ளும் தனிமை.

தனித்திருக்கும் அத்தனிமை
தான் தணிவதற்குள் மேலும் தனிமை கொள்ளும்
இருளார்ந்த பனியின் வெண்விரிப்பாக
உணர்வுப் பாவமற்று, வெளிக்காட்ட ஏதுமின்றி.

வெற்று வெளிகளில் அவை கலவரப்படுத்த இயலாது என்னை
மானுட இனம் இல்லாத நட்சத்திரங்களுக்கிடையே
என் வீட்டருகே கொண்டிருக்கிறேன் அதனை
இப்பாலைவனப் பகுதிகளாலேயே என்னைக் கலவரப்படுத்த.

சூது

பருத்த வெண்சிலந்தி ஒன்றைக் கண்டேன்
வெள்ளை மூலிகைச் செடிமேல் பூச்சியொன்றை கவ்வியபடி
கெட்டியான வெண்பட்டுத் துணிபோல
மரணம் மற்றும் நோயின் பாத்திரங்கள்
ஆயத்தமாயுள்ளன காலை நாடகத்தை ஆரம்பிக்க
சூனியக்காரியின் கஷாயத்தில் சேர்ந்திருப்பவைபோல
ஒரு பனித்துளிச் சிலந்தி, மலர் நீர்க் குமிழியாக
மற்றும் காகிதப் பருந்தென தூக்கிச் செல்லப்படும் உயிரற்ற சிறகுகள்.

வெண்மையாய் இருப்பதற்கும்
பாதையோரத்து நீலத்திற்கும் மற்றும் மாசற்ற மூலிகைக்கும்
அம்மலருக்கும் என்ன சம்மந்தம்?
உச்சியில் சிலந்தியை நிறுத்தி
அப்புறம் இரவில் வெண்பூச்சியை அங்கு செல்ல வைத்தது எது?
திகைப்புறச் செய்யும் இருளின் சூதன்றி வேறென்ன?
எவ்வளவு அற்பமானதெனினும் கட்டுப்படுத்தும் சூது.

புறப்பாடு

எப்போதும் ஒன்று போலவே, விதிவசமான இரவொன்றில்
குவிந்திருந்த பனிக்கட்டி வெண்மையாய் ஓடுகின்றது ஒரு வழியாக
அடர்வனத்தில் பாடிச் செல்வதுபோல
மீண்டுமது குளிர்காலத்தை நீண்டதாய் ஆக்காது
மேலேயும் சுற்றுமுற்றும் பார்த்தவாறு தடுமாறுகிறேன்
முடிவினால் நிலைகுலைந்து
தன் பணியைக் கைவிடுபவனாக, சாவினை
தானிருக்கும் இடத்தில் கவியவிட்டு
தீவினைக்கேதும் செய்யாதபடி
முக்கிய வெற்றி எதுவும் வெல்லப்படவில்லை
வாழ்க்கை ஒருபோதும் தொடங்கப்படவில்லை என்பதற்கும் அதிகமாக
எனினும் எல்லா முன்னுதாரணமும் என்பக்கம்
குளிர்கால மரணம் ஒரு போதும்
பூமியைத் தொட்டதில்லை, அது தோற்றிருக்கிறது என்றறிவேன்;
பனி குவியலாம் நான்கடி ஆழத்திற்கு
மேபிள், பிர்ச், நூக் மரங்களும் போட்டிப் போட்டு
தவளையின் வெள்ளிக் கத்தலை தடுத்திட முடியாது அதனால்
பனியெலாம் ஓடுவதைக் காண்பேன் குன்றுகளின் வழியாய்
மெல்லிய ஏப்ரல் நீரோடைத் தண்ணீரில்
போன வருடம் கருகிய புதரினூடாய்
வால் துலங்க வதங்கிய புல்பூண்டுகளூடாய்
கரந்து செல்லும் சர்ப்பமாக
இங்கேயொரு பிர்ச், அங்கே தேவாலயத்தோடு
வீடுகளின் ஊரிருக்கை
தவிர்த்து வேறெதுவும் இருக்கவிடாது வெண்மையாய்.



ஆப்பிள் பறிப்புக்கு பிறகு

மரத்தினூடே துருத்தி நிற்கிறது எனது நீண்ட ஏணி
விண்ணகத்தை நோக்கி இன்னும்
நான் நிரப்பிடாத பீப்பாய் அங்குள்ளது
அதனருகே கிளையொன்றில்
நான் பறித்திடாத ஆப்பிள்கள் இரண்டோ மூன்றோ
ஆனால் இப்போது ஆப்பிள் பறித்தல்
போதும் போதுமென்றாகிவிட்டது
குளிர்காலத் தூக்கத்தின் சாரம் இரவில்
ஆப்பிள்களின் வாசம்
தூங்கி விழுந்து கொண்டிருக்கிறேன்
என் பார்வையிலிருந்து புதிர்த்தன்மையை விலக்க முடியவில்லை
கண்ணாடிப் படலத்தினூடாகக் கிடைத்ததெனக்கு
குடிநீர்த் தொட்டியில் இன்று காலை பார்த்த பொழுது
பழமையான புல்லின் உலகிற்கெதிராய் நிறுத்தினேன்
அது உருகிற்று, ஓடிச் சிதறுமாறு விட்டேனதனை
அது வீழ்வதற்குள் நான் தூங்குமுன்பாக
நன்றாக ஆகிவிட்டேன்
என்னால் கூறமுடியும்
என்ன ரூபங் கொள்ளவிருந்தது என் கனவு என
பெரிதாக்கப்பட்ட ஆப்பிள்கள் தோன்றுகின்றன, மறைகின்றன.
கிளையின் நுனியிலும் குலையின் நுனியிலும்
ஒவ்வொரு செம்பழுப்புப் புள்ளியும் துலக்கமாக
கிளைகள் வளைகையில் உணர்கிறேன் ஏணி அசைந்தாடுவதை
கேட்டுக் கொண்டிருக்கிறேன்
நிலவறையில் குவியல் மீது குவியலாக
ஆப்பிள் கொட்டப்படும் சப்தத்தை
களைத்திருக்கிறேன் அபரிமித ஆப்பிள் பறிப்பால்
நானே ஆசைப்பட்ட பெரும் அறுவடை அது.
ஆயிரக்கணக்கிலுள்ளன ஆப்பிள்கள் தொடுவதற்கு
கையில் வைத்துக் கொள்ள, இறக்கி வைக்க
ஆனால் கீழே போட அல்ல
தரையில் விழுவன எல்லாம் நசியவில்லை அடிபடவில்லை
ஆனாலும் மதுதயாரிப்புக்குப் போய்விடும் நிச்சயமாக
பயனேதுமில்லாததாக
எனது இத்தூக்கம், அது எதுவாயினும்
ஒருவர் கண்டுகொள்ளக்கூடும்
எது சிரமப்படுத்தக்கூடுமென்பதை
நான் விவரிப்பதுபோல அது கவிந்திருப்பதை
தன்னுடைய நீள்துயிலா
அன்றி வெறும் தூக்கமா என
கூறமுடியும் அணிலால்
அது போகாதிருந்தால்.

ஒசிப் மெண்டல்ஷ்டம்

அகதி

சையத் ஷீராஸி

தமிழில் அசதா



புராதன தலைநகரங்களின் பெயர்கள் ஒரு கணம் நம்
காதுகளைத் தழுவட்டும் நித்தியமான அந்நகரம் ரோமாபுரி
அல்ல மனிதர் வாழுமிடம்.
பேரரசுகள் உம்மை ஆளமுயல்கின்றன. போதகர்கள் போர்
வேண்டி இறைஞ்சுகிறார்கள். அந்த இடம்
வெறுமையடையும் அந்நாளில் வீடும் பலிபீடமும்
எதற்காக?

–ஒஸிப் மெண்டல்ஷ்டாம்.

ஒசிப் மெண்டல்ஷ்டம்

அகதி



I

*1934*ஆம் வருடம் மே மாதம் மாலைப் பொழுதொன்றில் மாஸ்கோவின் பிரசித்தி பெற்ற கவிஞரான M ன் வீட்டுக்கதவு தட்டப்படும் ஓசை. அவர் மனைவி நாடியா சென்று கதவைத் திறந்தார். வந்திருந்தவர் ஒரு மொழிபெயர்ப்பாளர். அவர்களுக்குப் பரிச்சயமானவர் என்ற போதும் அவ்வளவு நெருக்கமானவர் அல்ல. சாதாரணமாகவே அவரைச் சந்திப்பது Mக்கு அத்தனை ஆர்வமான விஷயமில்லை. அதோடு அவர் வந்த சமயம் தனது நெருங்கிய நண்பரான பெண்கவி அக்மதோவாவுடன் M உரையாடிக் கொண்டிருந்தார்.

இருந்தும் வந்தவரை உள்ளே அழைத்தனர். அந்தச் சூழ்நிலையின் முக்கியத்துவம் உணராத மொழிபெயர்ப்பாளர் தனது நினைவிலிருந்து ஏராளம் கவிதைகளை மேற்கோள் காட்டி சுயரசிப்புடன் மணிக்கணக்காக நேரத்தை வீணடித்துப் பேசிக் கொண்டிருந்தார். அங்கு உரையாடல் அர்த்தமிழந்து போனது வெளிப்படையாகத் தெரிந்த பிறகும் அவர் விடவில்லை. நாடியாவும் அக்மதோவாவும் நாசூக்காக சமையலறைக்கு நழுவினர். மௌனமும் பிற மறைமுகக் குறிப்புணர்த்துதலும்கூட வேண்டாத அந்த விருந்தாளியை வெளியேற்ற உதவவில்லை. கடைசியாக, அக்மதோவாவிற்கு விருந்தளிக்க ஏதாவதும் தரும்படி அண்டை வீட்டுக்காரர்களிடம் கேட்டுவரச் செல்வதாகக் கூறி M எழுந்தார். சாப்பிட, வீட்டில் எதுவும் இருக்கவில்லை. அக்மதோவா வெகு தொலைவிலிருந்து அவர்களைப் பார்க்க வந்திருந்தார். அப்போதும்கூட மொழிப்பெயர்ப்பாளர் விடாமல் ஒரு வேட்டை நாயைப் போல அவர் பின்னாலேயே சென்றார்.

ஒரு நாள் காலை ஓசையுடன் கதவு தட்டப்பட்டது. ஐந்து முறை. "அவரைத் தேடி வந்துவிட்டார்கள்" என்று உறக்கக் கத்திய நாடியா, பிறகு தன்னையும், அப்படிப்பட்ட நேரங்களில் வழமையாகத் தனக்குள் ஏற்படுவதான பயங்களையும் அமைதிப்படுத்திக் கொண்டார். அவரது அச்சங்கள் உண்மையானவை. வேகமாக உள்ளே நுழைந்த அவர்கள் ஆயுதங்கள் ஏதேனும் உள்ளனவா என அவர்களைச் சோதித்துப் பார்த்தனர்.

அவர்கள் ஐந்து பேர். மூவர் உணவுப்படை ஏஜெண்டுகள். இருவர் சட்டபூர்வமாக தேவைப்படுவதான சாட்சிகள். ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் இது போன்ற, நியமிக்கப்பட்ட சாட்சிகள் இருப்பர். எப்போதும் சேர்ந்தே காணப்படும் இருவர். வழக்கமாக அவர்கள் அங்கிருக்கும் பெரிய கட்டடங்களில் ஒன்றின் கீழ்த்தளத்தில் இருக்கும் மேற்பார்வையாளர்கள். கூடத்துக்குப் போகும் வழியிலிருந்த நாற்காலியில் அமர்ந்த அவர்கள் உடலை நெளித்தும் தோள்களைக் குலுக்கியும் விட்ட இடத்திலிருந்து திரும்பவும் தூக்கத்துள் நுழைய முயன்றனர்.

புழங்கும் அறையிலிருந்து வெளியே வந்தார் M. "என்னைத் தேடியா வந்தீர்கள்?" மூத்த ஏஜெண்ட் அவரது அடையாள ஆவணங்களைக் கோரினான். அவற்றைச் சோதித்துவிட்டு வாரண்ட் ஒன்றை அவரிடம் தந்தான். குறிப்பிட்ட எந்தக் குற்றமும் அதில் சொல்லப்பட்டிருக்கவில்லை. இதற்குள்ளாக மற்ற இரண்டு ஏஜெண்டுகளும் ரகசிய ஆவணங்களுக்கான தேடலைத் தொடங்கியிருந்தனர். புத்தக அடுக்கிலிருந்து ஒவ்வொரு புத்தகமாக எடுத்து உலுக்கிப் பார்த்தனர். மேலட்டைகளை விலக்கி புத்தகங்களின் முதுகுப் பகுதிக்குள் பார்த்தனர். பிளேடைக் கொண்டு பைண்டிங்கைக் கிழித்தனர். பிடித்தமான பகுதிகளை அடையாளப்படுத்தும் விதமாக செருகப்பட்டிருந்த தாள்கள் மெதுவே பறந்து வந்து தரையில் விழுந்தன. பக்கங்களின் மூலையை மடக்கி வைப்பதை விரும்பாதவர் M. "மிக நேர்த்தியான புத்தகங்கள்" மாறாத அசட்டுப் புன்னகையை முகத்தில் கொண்டிருந்த கட்டை குட்டையான இளைய ஏஜெண்ட் சொன்னான். இது போன்று அவ்வப்போது தனது எண்ணங்களைத் தெரிவித்தபடி வேலையைத் தொடர்ந்தான். "புகைப்பது மிகவும் தீங்கானது" நாடியாவைப் பார்த்து அவன் சொன்னான். எல்லாப் புத்தகங்களிலும் புகையிலையின் மணம் தொற்றிக் கொண்டிருந்தது. அவனது சகா, எழுதும் மேசையில் ரகசிய அறைகள் ஏதேனும் உள்ளதா என தேடிக் கொண்டிருக்கையில், தனது உடைக்குள்ளிருந்து மிட்டாய்ப் பெட்டியொன்றை எடுத்தவன் ஒன்றை எடுத்து வாய்க்குள் போட்டுக் கொள்ளும் முன், கொஞ்சம் எடுத்துக்கொள்ளும்படி பண்பு கலந்த மரியாதையுடன் நாடியாவிடம் நீட்டினான்.

தரையில் மண்டியிட்டு பெரிய பெட்டியொன்றிலிருந்த காகிதங்களை அலசத் தொடங்கினான் மூத்த ஏஜெண்ட். ஒவ்வொரு காகிதத்தையும் கையிலெடுத்து கவனமாகப் பரிசோதித்தப் பின் தனக்கு தேவைப்படுமென்ற பட்சத்தில் அதை அருகே கிடந்த நாற்காலி மீது வைத்தான். மற்றவற்றை ஓர் ஒழுங்குடன் வலது புறத்தில் அடுக்கி வைத்தான். 1938இல் M மீண்டும் கைது செய்யப்பட்டபோது அனைத்தையும் மொத்தமாக ஒரு பையில் போட்டுக் கொண்டு அவரை அவர்கள் அழைத்துச் சென்றனர். தரைவிரிப்புகளுக்கு அடியில் சோதிக்க மட்டுமே அவர்கள் அவகாசம் எடுத்துக் கொண்டனர். ஆனால் இம்முறை சோதனை பலமணி நேரம் நீடித்தது.

தேடுவது என்னவென்று திட்டமாகத் தெரிந்தால்தான் அவனுக்கு உதவ

முடியும் என நாடியா சொன்னார். அவற்றில் குறிக்கப்பட்ட தேதியை வைத்து சமீபத்தில் எழுதப்பட்ட கவிதைகளை மட்டுமே அவன் தேடி எடுப்பதாகத் தெரிந்தது. முகத்தைச் சுளித்தபடியே ஒரு முழுக்கவிதையையும் உரக்க அவன் வாசித்தான். பிறகு அடுத்ததை வாசித்தான். "இது எதைப் பற்றியது?" குழம்பிப் போனவனாகக் கேட்டவன் நாற்காலி மீது அதை எறிந்தான்.

என்ன இருந்தது அதில்? எதைப் பற்றியது? M கேட்டார்.

அருகேயிருந்த மிகப்பெரிய சூட்கேஸை எடுத்து அதை நிரப்ப ஆரம்பித்தார் நாடியா. "எதற்கு இத்தனைப் பொருள்கள்?" மென்மையாகக் கடிந்து கொண்டான் அசட்டுப் புன்னகைக்காரன். 'எதற்காக, அவர் எங்களோடு நீண்ட காலம் இருக்கப் போகிறார் என நினைத்தீர்களா, அவரோடு சற்றுப் பேசிவிட்டு உடன் அனுப்பிவிடுவார்கள்" அவன் சொன்னது எதையும் காதில் வாங்காமல் M ன் உடமைகளை அடுக்கிக் கொண்டிருந்தார் நாடியா.

இவ்வளவு நேரமும் முழங்கைகளை முட்டியின் மீது வைத்தபடி குனிந்து அமர்ந்திருந்தார் மொழிபெயர்ப்பாளர். எழுந்து மேலேயிருந்து M க்கு பிற்பாடு தேவைப்படுகின்ற புத்தகங்கள் சிலவற்றை எடுத்துத் தருமாறு நாடியா கேட்டதற்குத் தலையை உயர்த்தாமலேயே கடுமையாகச் சொன்னார். "அவற்றை அவரே எடுத்துக் கொள்ளட்டும்." அவர் பேசிய இந்த வார்த்தைகள் மயக்கத்திலிருந்து அவரை விடுவித்திருக்க வேண்டும். ஒரு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல கையை உயர்த்தி தான் கழிப்பறை செல்லலாமா என ஒரு ஏஜெண்டிடம் கேட்டார். அங்கு அவரது வேலை முடிந்துவிட்டதாகவும் அவர் வீட்டுக்குப் போகலாமென்றும் கடுகடுப்புடன் அவருக்குச் சொல்லப்பட்டது. கையெழுத்துப் பிரதிகள் ஏதும் தன்னால் மறைத்து வைக்கப்படவோ அல்லது கிழிக்கப்படவோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு பிறகு செல்ல வேண்டுமென சொல்லப்பட்டது. யாரிடமும் ஒரு வார்த்தையும் சொல்லிக் கொள்ளாமல், திரை விழுந்து பல மணி நேரத்துக்குப்பின் மேடையின் குறுக்காக நடந்து செல்லும் அரங்க காப்பாளனைப் போல அவர் வெளியேறினார்.

தங்களது இரண்டாம் கால் பங்கு தேவையைப் பூர்த்தி செய்ய மே மாதத்தில் அவர்கள் அதிகம் கைதுகளைச் செய்ய வேண்டியிருந்தது. கடந்த மே மாதம் அவர்கள் தியாஸப்பிஸ்ட்டுகள் அனைவரையும் பிடித்து வெளியேற்றினர். மெய்யுணர்வாளர்கள், கொள்கைவாதிகள், நகைச்சுவையாளர்கள் ஆகியோரை வெளியேற்றி நீண்ட காலமாகிறது. உளறல்காரர்கள், பிதற்றல்காரர்கள், மிகுந்த சோகத்துடனும் சந்தேகப்படும்படி அமைதியாகவும் காணப்படுவோர் இவர்களையும் அகற்றியாயிற்று.

கடைசியாக சோதனை ஒரு முடிவை நோக்கி வந்தது. சோதனையிலிருந்து தப்பியிருந்த நன்கு வேகவைத்த அந்த முட்டை சமையலறை மேசை மீது கிடந்தது. "கிளம்புவதற்கு முன் நீங்கள் கொஞ்சம் சாப்பிட வேண்டும்" முட்டையை எடுத்து நீட்டியபடி அக்மதோவா சொன்னார். ஒரு வார்த்தையும்

போசாது M அதை வேகமாக உரித்தார். மேலே கொஞ்சம் உப்பைத் தூவி சாப்பிட்டார். அவர் எழுந்தார். அவர்கள் அவரை அழைத்துச் சென்றனர். நாடியாவும், அக்மதோவாவும் காலை வரை கிட்டத்தட்ட பேச்சேயின்றி அமர்ந்திருந்தனர். சற்று தெளிவுபெற்றதும் அப்போதைய நிலையில் தேவைப்படுவதான, ஆட்களைச் சந்தித்து தகவல் சொல்லும் வேலைகளைத் தொடங்கினர்.

அடுத்த நாள் இரவு மறுபடியும் கதவு தட்டப்பட்டது. கையெழுத்துப் பிரதிக் குவியல்களை மறுபடியும் சோதனையிட மூத்த ஏஜெண்ட் வந்திருந்தான். எதைக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்டிருந்தானோ அதை இன்னும் அவன் கண்டுபிடித்திருக்கவில்லை. திண்டுகள், தட்டுகள், ஷூக்கள் இங்கெல்லாம் மறைத்து வைக்கப்பட்டிருந்த கவிதைகளைக் கண்டெடுத்தப்பிறகும் அவன் தேடிவந்தது கிடைக்கவில்லை. அவன் தேடும் அந்தக் கவிதை ஒருபோதும் எழுதப்பட்டிருக்கவில்லை.

மூன்றாவது தடவை அவர்கள் வந்தார்களேயானால் உன்னையும் அவர்கள் அழைத்துச் செல்லக்கூடும். ஏஜெண்ட் சென்றபின் நாடியாவின் சகோதரர் சொன்னார்.

ஆனால் மூன்றாவது இரவு அமைதியாகவே கழிந்தது. நான்காவது, ஐந்தாவது இரவுகளும் அப்படியே. ஒவ்வொன்றும் முந்தைய இரவைக்காட்டிலும் கூடுதலான நிசப்தத்தில் கழிந்தன. அவரும் M ம் பகிர்ந்து கொண்ட அந்த அறைகளின் நிசப்தத்தில் நாடியா தனியே அமர்ந்திருந்தார்.

அவர்களுக்கு உதவ நண்பர்கள் நிதி சேர்த்தனர். பேபெலைச் சந்தித்து விஷயத்தைச் சொல்ல ஒருவர் அனுப்பப்பட்டார். அவரிடமிருந்து எந்தத் தகவலுமில்லை. ஆனால் பல்கோவ்கள் விரைந்து வந்து அவ்விடத்திலேயே தங்கள் பர்ஸிலும் சட்டைப் பைகளிலும் ஏதும் மீதமில்லாதபடிக்குத் தங்களிடமிருந்தவற்றையெல்லாம் தந்தனர்.

புகாரினை சந்திக்க அவரது அலுவலகத்துக்குச் சென்றார் நாடியா. M ன் கைதைப்பற்றிக் கேள்விப்பட்டு அவர் கொதித்துப் போனார். விவரங்களைக் கேட்டபடியே அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக வேகமான நடந்தார். உயர் பதவியிலுள்ளவராக இருந்தபோதும், அப்போது கைதிகளை உறவினர்கள் சந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. உங்கள் கணவர் மோசமாக எதையும் எழுதவில்லை. இல்லையா, ஒருவேளை அவர் எழுதியிருக்கிறாரா?" எனக் கேட்டார். இல்லையென்று உறுதியாகச் சொன்னார் நாடியா. அவர் இப்படிச் சொல்லக் காரணம் புகாரினின் உதவி அவருக்கு மிக அவசியமாகத் தேவைப்பட்டதுதான்.

தனது மேசையிலமர்ந்து செயலர் அவர்களுக்குக் கடிதமொன்றை எழுதத்துவங்கினார் புகாரின். அவருக்கு ஒரு பெயர் தேவைப்பட்டது.

எல்லாரது கருத்தையும் பிரதிபலிப்பதான ஒரு பெயர். இந்தக் கைதைப் பற்றித் தனது கவலையைத் தெரிவித்த மரியாதைக்குரிய ஒரு நபராக இருக்க வேண்டும். அவரது கருத்து தன் கவனத்துக்கு வந்து, தானும் அதை ஆதரிப்பதாகவும் அதனாலேயே அக்கருத்தை செயலர் அவர்களிடம் தெரிவிப்பதாகவும் இருக்க வேண்டும். கார்க்கியின் பெயர் சரிப்படாது.

M ஐ அவர் தீவிரமாக எதிர்த்தார். அலெக்ஸி டால்ஸ்டாயும் அப்படித்தான். நாடியாவைப் பற்றி அவர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்காக M அவரை பொது இடத்தில் வைத்து அறைந்துள்ளார். புகாரின் கடைசியில் பாஸ்டர்நாக்கில் வந்து நின்றார். பாஸ்டர்நாக்கும் இந்த வழக்குத் தொடர்பாக உயரதிகாரி ஒருவரை சென்றுப் பார்த்திருந்தார். துரதிருஷ்டவசமாக அந்த அதிகாரியும் உதவி தேவைப்படுகிற நிலையில் பெரிய பிரச்சினையொன்றில் சிக்கியிருந்தார்.

அவரது டைரியிலிருந்த குறிப்பு ஒன்றை பேரார்வம்மிக்க அவரது இளம் உதவியாளர் கண்டுவிட்டான். அதில் அதிகாரி செயலர் அவர்களுக்குப் புத்தகங்களை இரவல் தருவதை ஏன் வெறுத்தார் என எழுதப்பட்டிருந்தது. செயலர் அவர்களின் அழுக்கு விரல்கள் பட்டு புத்தங்கள் சீர்க்கெட்டுப் போவதாக அவர் எழுதியிருந்தார். குறிப்பு போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டிருந்தது.

அடுத்து நாடியா வினாவெரை சந்திக்கச் சென்றார். அவர் செஞ்சிலுவை சங்கத்தில் அதிகாரியாக இருந்தார். அவ்வளவு செல்வாக்கு இல்லையென்றபோதும் நாடியாவை நன்கு அறிந்தவர். சிறையில் நிலைமை நன்றாகவே இருந்தது என்றார் வினாவெர். அந்தக் காலத்தில் வெளியில் காட்டிலும் சிறையில் அவர்கள் நல்ல உணவை உண்டார்கள். அடுத்து அவர் சொன்ன அறிவுரை அறிவார்ந்ததும், உண்மையானதும், சரியான ஒன்றாகவும் இருந்தது மட்டுமில்லாமல் கடைபிடிக்க இயலாததாகவும் இருந்தது. முதலில் இருந்த புரட்சி அதிகாரிகள் விவாதம் செய்வதை விரும்பும், மோசமான பழக்க வழக்கங்களை உடைய முரட்டு ஆசாமிகள். பிறகு தாமே புனைந்து கொண்ட மகிழ்வுப் பேச்சும், பூத்தையல் வேலை செய்யப்பட்ட விவசாயிகள் சட்டையுமாய்க் காணப்படும் நாசூக்கற்றவர்களும் மனதிலிருப்பதைப் பேசிவிடுபவர்களுமான அதிகாரிகள் இருந்தனர். M கைது செய்யப்பட்ட காலத்தில் இந்த அதிகாரிகளெல்லாம் போய் கெடுநோக்கு கொண்ட மேட்டுக்குடி அதிகாரிகள் வந்துவிட்டிருந்தனர். ஒரு வார்த்தையும் பேசாது எச்சரிக்கையுடன் சொல்வதை மௌனமாகக் கேட்பர். பிறகு தலையை அசைத்து வெளியேறுமாறு சைகை செய்வர். வினாவெர் ஒரு மனிதாபிமான விதிவிலக்கு.

அவரது அறிவுரை, வழக்கு அதிகம் பேரின் கவனத்துக்குள்ளாகதபடிக்கு செய்ய வேண்டியவற்றை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாகச் செய்யுங்கள் என்பதுதான்.

கேள்வி : ஏன் நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள் தெரியுமா?

பதில் : எனக்குத் தெரியாது.

கேள்வி : உங்கள் கவிதைகளில் எது உங்கள் கைதுக்குக் காரணமாக இருந்திருக்க முடியும்?

M தனது மூன்று கவிதைகளை முழுவதுமாகச் சொன்னார். ஆனால் அவற்றில் ஒன்றின் அபாயகரமானதான எட்டு வரிகளை சொல்லாமல் விட்டார். அக்கவிதை மூன்று வெவ்வேறு வடிவங்களில் புழங்கி வந்தது. அவற்றில், விசாரிப்பவர் கையில் உள்ளது எந்த வடிவம் என்று யாருக்குத் தெரியும்?

மற்ற இரண்டு கவிதைகளைப் பற்றி விசாரணையாளர் அதற்கு முன் கேள்விப்பட்டிருக்கவில்லை. எனவே பதிவுக்காக வேண்டி அவற்றை அவர் எழுதிக் கொண்டார். பிறகு தன் கோப்பைத் திறந்து அதிலிருந்தொரு தாளை எடுத்தார். செயலர் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட வஞ்சப் புகழ்ச்சியான கவிதையொன்றினைப் பற்றிய விளக்கத்தை அவர் வாசித்தார். மறுப்பதில் அர்த்தமில்லையென்பதை அறிந்தவராய் அதை எழுதியது நான்தான் என ஒப்புக் கொண்டார் M. பிறகு அந்தக் கவிதையை முழுவதுமாகச் சொல்லும்படி கேட்டுக் கொண்ட விசாரணையாளர் அதைத் தன் கைப்பட நகலெடுத்துக் கோப்பில் சேர்த்துக் கொண்டார். அக்கவிதையைப் பதினோரு பேர் வாசிக்கக் கேட்டிருப்பதாகச் சொன்ன M அவர்களது பெயர்களையும் தந்தார்.

நாடியா அல்லது அக்மதோவாவும்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என குரூரமாகக் குறிப்புணர்த்திய விசாரணையாளர் பிறகு அவ்வாறு தான் ஏதும் சொல்லவில்லையே என மறுத்தார். M க்கு பரிச்சயமானவர்களது பட்டப் பெயர்கள், 'பலதாரத்தவன்' போன்ற அடைமொழிப் பெயர்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு M க்கு நெருக்கமான பேச்சுத் தோழர்களைத் தனக்கு நன்றாகத் தெரியும் என நிறுவ முயற்சித்தார்.

ரகசிய போலீசின் ஆராய்ச்சித்துறை, எதிர்ப்பாளர்களது உரையாடல்களின்போது வழமையாக வெளிப்படுத்தும் கருத்துக்களை ஒரு பட்டியலாக தயாரித்தது. பொதுப் பெயர்களோடு இவற்றையும் கொஞ்சம் கலந்து விசாரணையாளர் பேசுவார். 'நீங்கள் கின்ஸ்பர்கிடம் சொல்லியிருக்கிறீர்கள், மாஸ்கோவைக் காட்டிலும் பாரீஸில் வாழ்வதையே நான் விரும்புவேன் என்று; இதற்கு விளக்கம் தேவை. புரட்சிக்கு முன்பு உங்கள் ராயல்ட்டிகள் மேலானவையாக இருந்தன என ராபினோவிச்சிடம் சொல்லியிருக்கிறீர்கள், இல்லையா? நேடியான தாக்குதல் அல்ல. குழப்பம் உண்டாக்குவதே அவர்கள் நோக்கம்.

சிறைக்கைதிகள் தங்கள் மனைவியரின் குரல் அடுத்த அறையிலிருந்து ஒலிப்பதைக் கேட்பது வாடிக்கை. ரகசிய போலீசார் தேம்பியழும் பெண்ணின்

குரலொன்றைப் பதிவு செய்து இரவு முழுவதும் அதை ஒலிக்கச் செய்தார்கள் என நம்பப்பட்டது. அக்குரலை உறுதி செய்ய வேண்டி அனேகமாக M உறங்குவதேயில்லை. இரவில் விசாரணைக்கென அழைக்கப்பட்ட அவர் காவலுக்கிடையே ஒரு பெஞ்ச்சின் மீது பல மணி நேரம் அமர வைக்கப்பட்டார். விசாரணையாளர் சென்றப் பிறகு அக்கட்டடத்தின் இன்னொரு பகுதியில் இருக்கும் பெண்மணி ஒருவரின் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரைத் தவிர அங்கு யாரும் இல்லை. சில மணிநேரங்கள் கழித்து அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டார். சிறையைப் பற்றி புகார்கள் ஏதேனும் உண்டா என ஒருவித சம்பிரதாய தொனியில் அப்பெண்மணி கேட்டார். எதுவும் இல்லை என்றார் M.

முதலில் அவருக்கு இரண்டு கைதிகள் தங்குவதற்கான பெரிய அறையொன்றை ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் விரைவிலேயே அங்கு இன்னொரு கைதி அனுப்பப்பட்டான். பரிவாகப் பேசுதல், அறிவுரை கூறுதல் என்ற போர்வையில் அவரைப் போன்ற மற்றவர்களுக்கு எற்பட்ட கோர முடிவுகள் பற்றி திரும்பத் திரும்பச் சொல்லி அவரது பயத்தை அதிகரிக்க முற்பட்டான். "உன் விரல் நகங்கள் எப்படி இவ்வளவு சுத்தமாக இருக்கின்றன?" என M கேட்டார். "இப்போதுதான் வெங்காயத்தை சாப்பிட்டுவிட்டு வந்ததுபோல் உன் மேல் வாசமடிக்கிறதே?" காலையில் அந்த சிறைக் கூட்டாளி அங்கிருந்து அகற்றப்பட்டான்.

கேள்வி : உம்முடைய அடாவடிப் போக்கினால்தான் அவரை அங்கிருந்து மாற்ற வேண்டியதாயிற்று.

பதில் : நீங்கள் ஒன்றும் அத்தனை அன்புடையவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

கேள்வி : நீங்கள் இந்தக் கவிதையை எழுதியது ஏன்?

பதில் : வேறெதை விடவும் நான் பாசிசத்தை எதிர்க்கிறேன்.

கேள்வி : பாசிஸம்? அவமானகரமான சொல்! சொல்லுங்கள் நமது சமுதாயத்தில் எங்கே இருக்கிறது பாசிஸம்?

அதிகாரிகள் எப்போதும் இப்படி கோபப்படுவர்களாக நடிக்க வேண்டியிருந்தது. அது அவர்களது தட்டிக் கழிக்கும் வழிமுறை. வேறெந்த இடத்திலும் காணப்படும் பொய்யானதொரு நடுநிலைமைத் தோற்றம் போல, நெறிமுறையாகக் கட்டுப்படுத்துவதான ஒரு வழிமுறை.

M ன் முட்டாள்தனத்தைக் கண்டு விசாரணையாளர் பெரிதும் குழப்பமுற்றார். தான் எங்கேயிருக்கிறோம், எந்நேரத்திலும் தனக்கு ஏற்படக்கூடியதான மோசமான நிகழ்வுகள் என்ன என்பது பற்றி அவர் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. தன் கருத்தைத் தெரிவிக்க இந்தக் கைதிக்கு எந்த உரிமையும் இல்லை. தான் விசாரணை செய்யப்படுகிறோம்

என்றில்லாமல் பேட்டி காணப்படுகிறோம் என்ற நினைவில் அவர் பல கருத்துக்களையும் தெரிவித்தபடியிருந்தார். விசாரணை முடிந்தப் பின் அந்தப் பதிவைப் புரட்டிக்கூடப் பார்க்காமல் அப்படியே கையொப்பமிட்டார் M. இது அவர்களை மிகவும் கோபத்துக்குள்ளாக்கியது. என்னவொரு உதவாக்கரை கவிஞன் இவன், விசாரணையாளர் நினைத்தார். இவனது மடமை இவனது குளறுபடிகளைச் சரி செய்ய வேண்டியவர்களுக்குப் பளுவான வேலையை ஏற்படுத்திவிட்டது.

அவரது நண்பர்களில் பதினோரு பேர் அக்கவிதையை வாசிக்கக் கேட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். ஒருமுறை நண்பரொருவர் நல்ல செய்தியொன்றைக் கொண்டு வந்தார். அலுவலகத் தரையில், அவரது விரோதிகளில் ஒருவர் எழுதிய கடிதம் ஒன்று கிடந்ததாகவும் அதில் மற்ற விஷயங்களோடு சேர்த்த "கடவுளுக்கு நன்றி" என்ற சொற்றொடரும் இருப்பதாகத் தெரிவித்தார். எதிர்ப்பாளர்களது ஆத்திகச் சிந்தனைக்குச் சான்றான இதைக் கொண்டு தமது விரோதியை அவர் ஒழித்துக் கட்டுவதோடு ஒரு பதவி உயர்வும் பெறலாம் என்றார். இதைக் கேட்ட மாத்திரத்தில் M அந்தக் கடிதத்தைப் பிடுங்கி அடுப்பில் போட்டார். பிற்பாடு அவரைக் காட்டிக் கொடுத்தது இந்த நண்பராய்த்தான் இருக்க வேண்டும் அல்லது அது வேறு யாராகவும் இருக்கக்கூடும். ஹோமர்தான் 'இலியட்'டை எழுதினாரா என்ற கேள்விக்கான பதிலைப்போல இந்தக் கேள்விக்கும் திட்டவட்டமானதொரு பதிலைத் தர அவரால் இயலவில்லை. அது குறிப்பிட்ட அந்த நபராக இல்லாத பட்சத்தில், மேலே சொன்ன இரண்டு விஷயங்களிலும், அது வேறொருவராகத்தான் இருக்க முடியும் என்றார் M. தனக்கு நிகழவிருப்பதற்கு தன்னைத் தவிர வேறு யாரையும் குறை சொல்ல மறுத்தார். அது அவரது கௌரவத்துக்குக் கீழானதாக இருக்கும் எனக் கருதினார்.

செயலர் அவர்கள் அழைத்த அன்று இரவு பாஸ்டர்நாக்கின் அலுவலகத்தில் ஒரு டசனுக்கும் மேலானவர்கள் கூடியிருந்தனர். வழமையாக வேறு யாருடனும் பேசத் துவங்குவது போல, தனது இடம் ஒரே சத்தமாக இருக்கிறது, உரையாடுவதற்கென்று தனியாக இடம் அமையவில்லையே என்பதிலிருந்து ஆரம்பித்தார் பாஸ்டர்நாக். இதைக் கண்டுகொள்ளாத செயலர் அவர்கள் M நல்லபடியாக இருப்பார் என்றார். இந்த விஷயம் பற்றித் தன்னிடம் நேரில் வந்து பேசாததற்காக அவரைக் கடிந்து கொண்டார். "நானொரு கவிஞனாக இருந்து சக கவிஞனொருவனுக்கு உதவி தேவைப்படுவதாக இருந்தால்", அவர் சொன்னார். "என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருப்பேன்," சில வினாடிகளிலேயே பழியை அவர் லாவகமாக பாஸ்டர்நாக்கின் தோள்களில் ஏற்றிவிட்டார். மனக்காழ்ப்பின் காரணமாக அல்லாமல் துல்லியத்தின் பாற்பட்ட தீது விளைவிக்கக்கூடாதென்ற எண்ணத்தின் காரணமாகவே தாங்கள் இருவரும் நண்பர்கள் இல்லை என விளக்க முற்பட்டார் பாஸ்டர்நாக்.

“ஆனால் அவரொரு மேதை, இல்லையா?” இந்த விஷயத்தில் தனிப்பட்ட ஆர்வமுடையவராகக் கேட்டார் செயலர் அவர்கள். ஒருவர் ஏன் அத்தனை முட்டாள்தனமான காரியத்தை செய்ய வேண்டுமென்பதற்கு அவர் கண்டறிந்த ஒரே நியாயம் அதுதான்.

இந்தச் சூழ்நிலையிலும் தனது விரோதி ஒருவர் மீது புகழாரம் சூட்டுவதற்குப் பாஸ்டர்நாக்கின் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. ‘நாம் ஏன் மெண்டல்ஸ்டாமைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க வேண்டும்?” அவர் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். “உங்களிடம் முக்கியமான விஷயங்கள் குறித்து உரையாட விரும்பினேன். வாழ்வு மற்றும் மரணம் தொடர்பான பெரும் கேள்விகள் குறித்துப் பேச விரும்பினேன்.” இந்த யுக்தி வேலை செய்தது. செயலர் அவர்கள் அத்துடன் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர்கள் உரையாடல் முடிந்தது.

செயலர் அவர்களைச் சந்திக்க விரும்புவதாகப் பலமுறை தொலைபேசி செய்தார் பாஸ்டர்நாக். ஆனால் அவரது அழைப்பு ஒன்று கூட செயலர் அவர்களிடம் தரப்படவில்லை. தனது உதடுகளை வரலாற்றின் காதுகளுக்கு வெகு அருகில் வைத்திருக்க வேண்டி வந்ததை நினைத்தும், தனது ஞானமனத்தையும் கொட்டித் தீர்க்க வேண்டிய தேவையின் விளிம்பில் நிற்பதை நினைத்ததும், தனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பைக் கை நழுவ விட்டதை நினைத்தும் அவர் மருகினார். அதன் பிறகு பல வருடங்கள் இந்தத் தோல்வியை நினைத்து மருகிக்கிடந்த அவரால் கவிதையென ஒற்றை வரி கூட எழுத முடியாமல் போனது.

இரண்டு வாரங்கள் கழித்து M ஐ சந்திக்க நாடியா சிறைக்கு அழைக்கப்பட்டிருந்தார். M வெளியே அழைத்து வரப்பட்டார். உடல் எடை குறைந்ததால் மட்டுமல்ல, தற்கொலைக்கு முயலக்கூடும் என எண்ணி அவரது இடுப்பு பெல்ட்டை அவர்கள் நீக்கிவிட்டிருந்தமையாலும் இடுப்பிலிருந்து பேண்ட் கீழே இறங்க அதைத் தூக்கிப்பிடித்தபடி நடந்து வந்தார். தன் ஷூவில் மறைத்து வைத்திருந்த பிளேடால் மணிக்கட்டுகளை கீறிக் கொண்ட இடங்களில் கட்டுப் போடப்பட்டிருந்தது. பாதி முடிக்கப்பட்ட கம்பியிழை உருவமாதிரியைப் போலவும், சதுக்கத்தில் எரிப்பதற்கென்று செய்யப்பட்ட கொடும்பாவி போலவும் காணப்பட்டார். இவ்வளவு நாளும், தன்னைப் போலவே தன் மனைவியும் சிறையில் அவதிப்படுகிறாள் என நினைத்திருந்த அவர் நாடியாவை நேரில் கண்டபோது சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தார்.

செயலர் அவர்களைப் பற்றிய கவிதை அவர்களிடம் இருப்பதாக அவர் நாடியாவிடம் சொன்னார். விசாரணையாளர் குறுக்கிட்டார். பதினாறு வரிகள் கொண்ட அக்கவிதை ஒரு தீவிரவாத சதிச் செயல், புரட்சிக்கு எதிராக இதுவரை கண்டிராத ஒரு ஆவணம். பிறகு அவர் தனது ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிய “தனித்து வை ஆனால் காப்பாற்றி வை” என்ற

ஏற்பில்லாத கட்டளைக்கிணங்க M ன் தண்டனை குறைக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார். அந்தக் கட்டளைக்கான அர்த்தம் 'நாடு கடத்து' என்பதாகும். ஒரு சலுகையாக விரும்பினால் அவர் மனைவியும் உடன் செல்ல அனுமதிக்கப்படுவார் என்றார். M உடன் செல்வதாகச் சொன்னார் நாடியா, சற்றும் தயங்காமல்.

இந்த உத்தரவின் மூலம் செயலர் அவர்கள் M ன் நெற்றியில் காயீனின் முத்திரையொன்றை பதித்தார். தனக்கென ஒரு இருப்பிடமின்றி அவர் சபிக்கப்பட்டார். அதே நேரம் அம்முத்திரை கொல்லப்படுவதனின்று அவரைக் காப்பாற்றவும் செய்தது.



II

இவ்வுலகில் நாம் காணமுடியாத ஒருவர் அல்ல என்றால், M எளிதில் இணங்காத ஒருவர். அவர் இவ்வுலகில் காணமுடியாத ஒரு நபராக இல்லாதபட்சத்தில் அவரொரு சீக்கிரத்தில் இணங்காத மனிதர். அவரது தோற்றம், நடை, உடை, பாவனையாவும் பீடுடன் அமைந்திருந்தன. எனவேதான் மத்தியக் கிழக்கில் பயணம் மேற்கொண்ட அவரது நண்பரொருவர் முதல் தடவையாக ஓர் ஒட்டகத்தைப் பார்த்தபோது உடன் அவருக்கு M ன் நினைவுதான் வந்தது. காரணம் எப்போதும் அவர் தன் தலையை நிமிர்த்தி வைத்திருக்கும் விதம். வெளியே செல்லும்போது குழந்தைகள் அவரை முறைத்துப் பார்த்தனர். பெருமையும் கம்பீரமும் மிக்க அவரது தோற்றத்தைக் கண்டு அவர் ஒரு ஜெனரலா அல்லது பாதிரியாரா என அவர்கள் கேட்பதுண்டு. அவர் சொல்வார் "இரண்டிலும் கொஞ்சம்."

அவரது சிந்தனைகள் பல பைத்தியக்காரத்தனமானவை. உதாரணமாக கடவுளது திரித்துவ நிலை அதிகாரத்தை ஒரே நபர் கொண்டிருப்பதைத் தடுக்க உண்டாக்கப்பட்ட ஓர் ஏற்பாடு என்ற வாதம். தன் வாழ்வில் மிக முக்கியமாகக் கருதிய மூன்று விஷயங்களைப் பற்றி ஒருபோதும் அவர் நாடியாவிடம் பேசியதில்லை. அவை அவரது கவிதை, அவருடைய அம்மா மற்றும் புஷ்கின் இறையியல் காரணங்களுக்காகவோ அல்லது கிட்டதட்ட துல்லியமாக அவராலேயே நேரத்தை ஊகித்துக்கொள்ள இயலும் என்ற திறமையாலோ அவர் கையில் கடிகாரம் அணிய மறுத்து வந்தார். நொடிகள்

தங்கள் பல்சக்கரங்களை அரைக்கும் ஓசையையும், ஒவ்வொரு நிமிடமும் அடுத்த நிமிடத்துள் பாய்ந்தோடும் ஓசையையும், டைம்-பாம் உலகின் சீரான 'டிக்-டிக்' ஓசையையும் இயல்பாகவே அவரால் உணர முடிந்தது.

அவரது முதல் புத்தகம் 'கல்' என்ற பெயரில் வெளிவந்தது. ஹோமர், யூரிப்டீஸ் இவர்களுடன் அப்பேராடைட்டையும் அந்நூல் ஆதரித்தது. அந்நூலில் காணப்பட்ட கவிதைகளில் இரண்டு, கிறித்தவப் பேராலயங்கள் பற்றியது. கடைசியாகச் சொன்ன இக்கவிதை நாட்டர்டாமைப் போலவே கனமாக, சாஸ்வதமானதாகக் கவிதை எழுதப்படவும், கவனமாக சமன்படுத்தி வைக்கப்பட்டக் கற்களின் கவிதைகளை எழுதவுமான ஓர் உறுதியுடன் முடிகிறது.

கவிதை ஆர்வலர்கள் என்ற போர்வையில் அவருடைய மாஸ்கோ விட்டுக்கு ரகசிய ஏஜெண்டுகள் அனுப்பிவைக்கப்பட்டனர். "இந்த ஆள் வேலை செய்கிறான், அவனுக்குக் கொஞ்சம் டீ கொடுப்போம்" எனத் தன் மனைவியிடம் சொல்வாள் ரகசியமாக. போலீஸ் அவர்களை அழைத்து ஒரு அறிக்கை கேட்ட பிறகு, அவரது உண்மையான அபிமானிகள் நிர்ப்பந்தத்தின் பேரில் உளவறிந்து சொல்ல மனமின்றி அவரது வீட்டுக்குச் செல்வதையே நிறுத்திவிடுவர். படைப்புகளை அரசாங்கப் பதிவுகளில் வெளியிடுதல் போன்ற கவர்ச்சிகரமான பேரங்களுக்கும் அவர்கள் பணிவதில்லை.

அப்படியொன்று இருக்கும் பட்சத்தில், முழுக்க முழுக்க இலக்கியமாக அமைந்த ஒரு விஷயத்தைக்கூட விவாதிப்பது என்பது அபாயகரமானதாகிவிடுகிறது. ஏனென்றால் எந்த ஆழமான கருத்து வேறுபாடும், பிறகு, பாதிக்கப்பட்டவரிடமிருந்து மோசமானதொரு கண்டனம் எழக் காரணமாகி விடுகிறது. படைப்புகளை வெளியிடுவது மிகச் சிரமமாக இருக்கிறது என்ற புகாரோடு இளம் கவிஞர் அவரிடம் வந்தார். அறையிலிருந்து அவரை வெளியே துரத்திய M, "அவர்கள் ஆந்தே செனியரை, ஸாம்போவை, ஏசு கிறிஸ்துவை வெளியிட்டார்களா, என்ன" என்று உரக்கக் கத்தியபடியே படிக்கட்டுகள்வரை சென்று விரட்டிவிட்டு வந்தார்.

ஒருநாள், தண்டனை அனுபவித்த குற்றவாளி ஒருவன் தனது சொற்ப உடைமைகள் அடங்கிய சாக்குப் பையுடன் தனது பள்ளிக்கூடத் தோழனாகிய M ன் சகோதரரைத் தேடிவந்தான். அவன் பெயர் பப்ளிக். குழந்தையாக இருக்கும்போதிருந்தே அவனை அறிந்திருந்ததால் வீட்டுக்குள் அவனை அனுமதிக்க வேண்டுமென M ன் தந்தை வற்புறுத்தினார். அவன் பல வாரங்களுக்கு அங்கு தங்கியிருந்தான். வீட்டினருக்குப் பல வகையிலும் உதவிகரமாக இருந்தான். அவனது லத்தீன் அறிவு அபாரமாக இருந்தது. அவனும் M ம் சேர்ந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் ஓவிட் எழுதிய 'ட்ரிஸ்ட்டியா' கவிதைகளை வாசிப்பர். (M ம் ட்ரிஸ்ட்டியா என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினார்) கடைசியில் அதுவே அவரது இரண்டாவது தொகுப்புக்குத் தலைப்பாக அமைந்தது. தான் நாடுகடத்தப்படுவதற்கு

வெகுகாலம் முன்பே தான் நாடு கடத்தப்பட்டால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்திருந்தார். புரட்சிக்குப் பிறகு, அவரது கன்சர்வேடிவ் ரசனைகள் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஒர் அந்நியராக்கியது. திடீரென கைது செய்யப்பட்டுவிட்டால் சிறையில் படிக்கவென எப்போதும் தன்னுடன் அவர் கையடக்க 'தாந்தே'யை வைத்திருந்தார். சில காரணங்களுக்காக, தானே இவ்வுலகின் கடைசி செவ்வியல் கவிஞனாக இருக்கக்கூடுமெனவும் அவர் நினைத்தார்.

1919ஆம் ஆண்டு அடிக்கடி 'Poet cafe' வுக்கு வந்து அங்குள்ளவர்களோடு சினேகம் செய்து கொள்ள முயன்ற அதிகாரி ஒருவனோடு அவர் சண்டை பிடித்தார். வாழவைக்கவும் சாகடிக்கவுமான அதிகாரம் தன் கையில் இருப்பதாக உரக்கப் பேசி ஜம்பமடித்த அந்த அதிகாரி, தற்போது தன் கேடுகெட்ட ஒரு அறிவுஜீவியை அதாவது ஒரு போலந்து கலை வரலாற்றாசிரியனை சுட்டுக் கொல்ல உத்தரவு பெற்றிருப்பதாகவும் அதை நிறைவேற்ற உறுதி கொண்டிருப்பதாகவும் சொன்னான். சுவரோரம் அவனை நிற்க வைத்து சுடுவேன் என அங்கிருந்தவர்களிடம் தெரிவித்தான் அதிகாரி. எந்தச் சூழ்நிலையிலும் இப்படிப்பட்டவொன்றைத் தன்னால் சகித்துக் கொண்டிருக்கமுடியாது என்றார் M. அதைத் தொடர்ந்த வாக்குவாதத்தில் M ஐ அச்சுறுத்தும் வகையில் தனது துப்பாக்கியை எடுத்து நீட்டினான் அதிகாரி. M நேரே தான் நன்கறிந்த ஒரு அழகியின் வீட்டுக்குச் சென்றார். அவள் கணவன் கப்பற்படையில் உயர்ந்த பதவியில் இருந்தான். அவளை மிகவும் வற்புறுத்தி ரகசிய போலீசின் தலைமை அதிகாரியைச் சந்திக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். M ன் தொடர் முயற்சியால் அந்தக் கலை வரலாற்றாசிரியன் விடுவிக்கப்பட்டான். பிறகு M ம் மூக்கு உடைப்பட்ட அந்த அதிகாரியும் சந்திக்க நேரும் போதெல்லாம் அதிகாரி துப்பாக்கியை எடுத்துக்காட்டி அவரை மிரட்டப் பார்ப்பான். அடிக்கடி இப்படி நடந்ததால் கடைசியில் அது ஒரு விளையாட்டாகிப் போனது. பின்னாட்களில் அந்த அதிகாரி அவருக்கு குடிக்க ஏதேனும் வாங்கித் தருமளவுக்கு அது சென்றது.

மரண தண்டனையை M எதிர்த்து நின்றது இந்தவொரு தடவை மட்டுமன்று. 1928-இல் முந்தைய ஆட்சியின்போது வங்கியாளர்களாக இருநத ஐவர் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல்வேறு குற்றங்களுக்காக சுட்டுக் கொல்லப்பட இருப்பதாகக் கேள்விப்பட்டார். பலரும் ஆச்சரியப்படும் வகையில் நகரம் முழுவதும் திரிந்து அவர்களுக்காகப் பரிந்து பேசி மரணதண்டனையிலிருந்தும் அவர்களைத் தப்புவித்தார். அவரது உணர்ச்சிபூர்வமான வாதங்களினால் மனமிரங்கி தண்டனையை ரத்து செய்த அதிகாரிகள் பிற்பாடு அவருக்கும் அந்த ஐந்து பேருக்கும் எந்த வகையிலும் சம்பந்தம் இல்லையென்பதை அறிந்து அதிர்ந்து போனார்கள்.

"கதையே அது வலியுறுத்தும் நீதியின் கோட்டை" கைது செய்யப்படுவதில் தொடங்கிவிட்டு, அதற்கு காரணமான கவிதையைப் பற்றி பிறகு பேசுவதன் மூலம் யாரைக் கொன்றதனால் அவன் அத்தண்டனைக்கு ஆளானான் எனச்

சொல்லாமல் மரணதண்டனைக்குள்ளான ஒருவனைக் காட்டும் ஆவணப் படத்தைப் போல, நானும் இக்கதையின் நாயகன் மீது பரிவுணர்வு தோன்றச் செய்கிறேன். எந்தக் குற்றமும் செய்யாமல் அவர் தண்டிக்கப்படுகிறார் என்ற முடிவுக்கு நீங்கள் வருகிறீர்கள். விஷயத்தை இன்னமும் விளக்கமாக அறிவதற்கு முன்பே மாற்ற இயலாத வகையில் மனதளவில் அவருக்கான சார்பு நிலையை எடுத்து விடுகிறீர்கள். செயலர் அவர்களைப் பற்றிய கவிதையிலிருந்து நான் தொடங்கியிருந்தால் இந்தக் கைது அர்த்தமற்றதல்ல. தவிர்க்க முடியாத ஒன்று என எண்ணத் தோன்றும் முடிவை அறிந்து கொள்ள நீங்கள் பொறுமையின்றி காத்திருப்பீர்கள். ஏனென்றால் எப்போதும் போலவே காரணியின் கால்தடங்களைப் பின்பற்றித்தான் விளைவுகள் போக வேண்டியிருக்கிறது. இரண்டாவது ஏற்பாடுதான் சம்பவங்கள் நடைபெற்ற உண்மையான வரிசைக்கிரமப்படி அமைவதற்கான அனுகூலத்தைப் பெற்றது. முதலாவது ஏற்பாடு மிகவும் நாடகத்தன்மையுள்ளது.

அதனின்றும் தனது சிந்தனை விடுபட முடியாததான ஒரு இனிய இசையிலிருந்து அவரது கவிதைகள் ஆரம்பித்தன. பிறகே வார்த்தைகள் வந்தன. கவிதை முடிக்கப்படும் வரை, தீராத உள்மன அவஸ்தையாக அமையும் நினைவைப் பீடித்து வெளிப்பாட்டைக் கோரும் அந்த இசை லயத்திலிருந்து அவர் விடுபடுவதென்பது நடக்காது. வெளிப்படையான அலட்சியத்திற்கு முன் தன் முட்டாள்தனமான காதலைத் தெரிவிக்க வேண்டியிருக்கும் ஓர் இளைஞனைப் போல, அந்த அவஸ்தையினின்றும் விடுபடுவதற்காக வேண்டி வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டியிருந்தது.

ஆனால் செயலர் அவர்களைப் பற்றிய கவிதை, மற்ற கவிதைகள் அவரை வந்தடைந்தது போல வந்தடையவில்லை. முதல் முறையாக எல்லாராலும் புரிந்து கொள்ளத்தக்கதான எளிய ஒரு கவிதையை எழுத அவர் மேற்கொண்ட மிகத் தனித்துவமானதும் அதே நேரம் அபாயகரமானதுமான முயற்சி அது. அதற்கு முன்பு தான் எழுதிய கவிதை காரணமாக தனது நாட்கள் எண்ணப்பட்டுவிட்டதாக நம்பிய M , தன் மனதில் இருப்பதை வெளிப்படுத்தாமல் மறைந்து போய்விடக்கூடாது என உறுதிபூண்டார். சற்றுப் பொறுமையிழந்த அவர் தனது மரணத்தை விரைவுபடுத்திக் கொள்ள விரும்பினார். நிலைமை மோசமடைந்தாலும் பரவாயில்லை தன் விதியை நிர்ணயித்துக் கொள்வது தானாகவே இருக்கவேண்டுமெனக் கருதினார்.

கட்டை குட்டையான விரல்கள், அசிங்கமான மீசை இவற்றைக் கவிதையில் சேர்த்தார். செயலர் அவர்களை M நேரில் பார்த்ததில்லை. பார்த்திருந்தால் அந்த முகத்திலிருந்து அம்மைத் தழும்புகளைப்பற்றியும் குறிப்பிட்டிருப்பார். செயலர் அவர்களின் உருவப்படங்களில் அத்தழும்புகள் சாமர்த்தியமாக மறைக்கப்பட்டிருக்கும். குழந்தைகள் ராஸ்ப்பெரி பழத்தின் சுவையை விரும்புவது போல செயலர் அவர்கள் கொல்லுவதை விரும்பினார் எனக் கவிதையை முடித்திருந்தார் M.

அதிர்ச்சியடைந்த அவரது நண்பர்கள் எழுதியதை மறந்துவிடுமாறு கேட்டுக்கொண்டனர். அவர் சொல்லியிருந்த விஷயங்கள் வெளிப்படையாக எல்லாருக்கும் தெரிந்தவைதாம். அவையொன்றும் புதிய விஷயங்கள் அல்ல. அக்கவிதையை வாசித்தது மிக அஞ்சத்தக்கதும் ஆழ்ந்த ஊறு விளைவிக்கக்கூடியதுமான ஒரு கருத்தை வெளியிட்டதற்குச் சமம் என்று ஆனது. அக்கவிதை பிரசுரிக்கப்படவோ ஏன் எழுதிவைக்கப்படவோகூட இல்லை. அதை ஒரு கவிதையாக வழங்கியதே அதன் குற்றத்தை ஆயிரம் மடங்கு தீவிரமாக்கியது. அவை வெறும் கருத்துக்கள் மட்டுமே. ஆனால் அவற்றை உயர்ந்த ஓர் அதிகார மையத்தின் மீது வைக்கவும் தனது ஆட்ட யுக்தியை கவிதையின் வலிமைக்கு ஈடாக உயர்த்தவும் அவர் உறுதி பூண்டார். பல்வேறு கற்பனைகளின் படையெடுப்பை, தன்னை நோக்கி ஈர்த்த கொம்பிசைக் கருவியில் ஊதப்பட்ட ஒற்றை இசைக் குறிப்பு அது.



III

மாஸ்கோவிலிருந்து செர்தின் போகும் ரயிலில் M ம் நாடியாவும் காவலுக்கிடையே பயணித்தனர். ''அவரை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்'' காவல் படைத்தலைவன் நாடியாவிடம் வேண்டினான். ''கவிதையைக் காரணமாக வைத்து நாங்கள் யாரையும் கொல்வதில்லை. ஒற்றறிவது, சதி செய்வதற்குத்தான் அந்தத் தண்டனை. முதலாளித்துவ நாடுகளில் செய்வது போல மனிதரை அவரது வார்த்தைகளுக்காக நாங்கள் தூக்கிலிடுவதில்லை.'' புஷ்கினின் கையடக்கப் பதிப்பை உடன் கொண்டு வந்திருந்தார் நாடியா. அமைதியாக அதை அவர் படித்தபடி வந்ததைக் கண்ட காவலர்த் தலைவர் கடைசியில் அதை வாங்கி மற்ற காவலர்களிடம் தானே உரக்க வாசித்துக்காட்டினார். "ஜிப்ஸிகள்" கவிதையைப் படிப்பது பொருத்தமானதாயிருக்கும் என்றார் நாடியா. ஏனென்றால் அது நாடுகடத்தப்பட்ட நிலையில் எழுதப்பட்ட கவிதை. அதை வாசித்த ஒரு இளம் வீரன் நெகிழ்ச்சியுற்றவனாய் ''அப்படியானால் அவரது கவிதைகளுக்காகத்தான் அவரை வெளியேற்றுகிறார்களா?" என்றான் விஷயங்களைப் புரிந்து கொண்டவனாக. பிறகு தன்னிலையை அடைந்தவனாகச் சொன்னான். "உங்களுக்கு அது அவ்வளவு மோசமாக இருக்காது. நீங்கள் செர்தியானுக்குச் செல்கிறீர்கள்.

சித்தோஷ்ண நிலை அங்கு நன்றாகவே இருக்கும்.

பயணத்தின்போது M உறங்கவேயில்லை. போகும் வழியிலேயே தன்னை சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என்று அவர் பயந்தார். கோடாரியுடன் வந்த மரம்வெட்டி ஒருவனைக் கண்டபோது இன்னும் சற்று நேரத்தில் தான் தலைவெட்டப்பட்டு இறக்கப் போகிறோம் என்று கலவரமுற்ற அவரை யாராலும் அமைதிப்படுத்த முடியவில்லை. அவருக்குள் குரல்கள் கேட்டன. கொலை செய்துவிடப்போவதாக மிரட்டும் சிறைக்காவலரின் குரல்கள் அந்தக் குரல்கள் உண்மையாகத்தானிருக்க வேண்டும் என்றார் நாடியாவிடம். காரணம் அக்குரல்களில் கேட்கும் ஆபாச வார்த்தைகளைத் தன்னால் திரும்பக் கூற முடியவில்லையே என்றார். உன் கவிதைகளைக் கேட்டவர்கள் அனைவருக்கும் மரணதண்டனை. சாமர்த்தியமாக உன் மனைவியையும், நண்பர்களையும் நீ கொன்றுவிட்டாய். உன்னையே நீ ஆத்மபரிசோதனை செய்து கொள் என அக்குரல்கள் கூறின. M தான் போகுமிடங்களெல்லாம் சாலையோரங்களில் அக்மதோவாவின் சடலம் கிடக்கிறதா என தேடத் தொடங்கினார்.

அவர்கள் இன்னொரு ரயிலுக்கு மாற வேண்டி காத்திருந்த ரயில் நிலையத்தில் காவலர்கள் முறைவைத்து காவல் புரிய, நாளெல்லாம் ஒரு மர பெஞ்ச்சில் எழுந்திருக்கவோ கை, கால்களை நீட்டவோ இப்படி அப்படி அசையவோ முடியாமல் அமர்ந்திருக்க வேண்டியிருந்தது. பெஞ்ச் ரயில் நிலைய நுழைவாயிலிலேயே இருந்ததால் வருவோர் போவோர் அனைவரும் அவர்களைக் கடந்தே சென்றனர். ஆனால் எல்லாருமே, சின்னக் குழந்தைகள் கூட, அவர்களைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றனர்.

செர்தியனில் எப்படியோ ஒரு மருத்துவமனைத் தங்களை அனுமதித்துக்கொள்ளும்படி செய்தார் நாடியா. அங்கு முதல் நாள் இரவு ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்த நாடியா ஏதேச்சையாக கண் திறந்து பார்த்தபோது M ஜன்னல் வழியே வெளியேற முயன்று கொண்டிருந்தார். தோள்களைப் பற்றி உள்ளே இழுக்க முயன்றபோது சட்டையை நாடியாவின் கைகளில் நழுவவிட்டுவிட்டு வெளியே குதித்துவிட்டார். மூன்றாவது மாடியிலிருந்து குதித்த போதும் தோள்பட்டை நழுவியதைத் தவிர வேறு காயம் இல்லை.

இந்தக் குதித்தலுக்குப் பிறகு அவர் சற்று அமைதியடைந்தவரானார். அவரைப் பீடித்திருந்த பேய்களால் அந்த அடியைத் தாங்க முடியவில்லை போலும். பரிவுணர்வு மிக்க மருத்துவர் ஒருவர் M ஐ மருத்துவமனையின் மனநலப் பிரிவைச் சுற்றி அழைத்துச் சென்றார். மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களது பரிதாப நிலையை நேரிடையாக உணர்வது தனது நிலையிலிருந்து விடுபட அவருக்கு உதவக்கூடும் என அவர் நினைத்தார். நிஜமான பைத்திய நிலையில் கிஞ்சிற்றும் தெய்வீகத்தன்மையோ, பேரொளியோ உருவகத்துக்கான கருப்பொருளோ எதுவும் கிடையாது,

வெறும் பீதிதான்.

மருத்துவமனையில் இரண்டுவார காலம் இருந்தபின் குறிப்பிடும்படியாகத் தேறியிருந்த M வெளியே வந்து நகரத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துத் தங்கினார். மூன்று நாட்களுக்கு ஒருமுறை போலீஸிடம் சென்றுவந்தபடி தனது வழக்கைப் பற்றி ஏதேனும் செய்தி வருமா எனக் காத்திருந்தார். கடைசியில் அது வந்தது. நாடுகடத்தப்பட்டிருந்த M ன் தண்டனை மைனஸ் பன்னிரண்டு என இன்னும் ஒருபடி கடுமையாக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்நாட்டின் பன்னிரண்டு பெரிய நகரங்களில் வாழ அவருக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அதில் செர்திறும் அடங்கும். உடனடியாக வேறு ஒரு வாழிடத்தைத் தேர்வு செய்துகொள்ளும்படி உயரதிகாரி கேட்டுக் கொண்டார். அந்நாட்டின் மாகாணங்கள் நகரங்கள் பற்றி அவருக்கோ, நாடியாவுக்கோ எதுவும் தெரியாது. ஒரு சமயம் நண்பரொருவர் தான் பிறந்த நகரத்தைப் பற்றிப் பாசத்துடன் பேசியது நினைவுக்கு வந்தது. அது வோரோநெஸ்ச். அந்த இடத்திலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. உடைமைகள் சகிதம் அரசாங்க வாகனத்தில் அவர்களைக் கொண்டு கப்பல் தளம் வரை சென்று விட்டனர்.

கப்பலுக்குப் போகும் பாதையைச் சுற்றிலும் டிக்கெட் வாங்க வாரக்கணக்கில் காத்திருக்கும் விவசாய குடும்பங்கள், அடுத்து எங்கே போவதென்று தெரியாமல், அமர்ந்தபடி சாக்குப் பைகளில் கொண்டு வந்திருந்த கெட்டுப் போன ரொட்டிகளை மென்று கொண்டிருந்த, கூட்டு விவசாய முறையினால் அகதிகளான விவசாயிகள், M ஐயும் அவர் மனைவியையும் விரோதத்துடன் பார்த்தனர். மிடுக்காக வண்டியில் அழைத்து வரப்பட்ட அவர்கள் நேராக முதல் வரிசைக்கு அனுப்பப்பட்டது அவர்களுக்கு எரிச்சலூட்டியது. உடன் வந்த அதிகாரிகளது மிடுக்கு M க்கு இன்னும் அதிக விரோதிகளைத்தான் பெற்றுத் தந்தது.

கப்பலில் M ன் மனப்பிறழ்வு நிலை முற்றிலும் நீங்கி அமைதியாகப் பேச ஆரம்பித்தார். நாடியாவுக்கோ டைஃபாய்டு ஜுரம் கண்டது. அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். வோரோநெஸ் சென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது இன்னது என்று சொல்லாமல் ஆறாம் எண் நோய் என்று மட்டும் சொன்னார்கள். சோஷலிஸத்தின் எதிரிகளுக்கு ரஷ்ய மக்களைத் தாக்கும் நோய்களும் கூட தெரியக்கூடாதென்று அவை அரசாங்க ரகசியமாகக் கருதி மறைக்கப்பட்டன.

பேன்களை ஒழிக்கவென்று நாடியாவின் தலை மொட்டையடிக்கப்பட்டது. இப்போது உண்மையிலேயே ஒரு கைதியைப் போலிருக்கிறாய் என்றார் M நகைச்சுவையுடன். நாடியாவுக்கு இது வருத்தத்தை ஏற்படுத்தியபோதும் M மீண்டும் நகைச்சுவையுடன் பேசுவது கண்டு அவர் மகிழ்ச்சியடையவே செய்தார். நாளுக்கு நாள் M ன் உடல் நலம் நன்கு தேறிவந்தது.

வோரோஜெஸ்ச்சில் மாதம் ஒரு முறை காவல் நிலையம் சென்று

குடியிருப்பு அனுமதியைப் புதுப்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் எப்போதும் அது மூன்று பயணங்களை உள்ளடக்கியிருந்தது. முதல் பயணம் விண்ணப்பம் செய்ய, இரண்டாவது அனுமதியைப் பெற்று வர. மூன்றாவது பயணம், இரண்டாவது பயணத்தின் போது முடியாத வேலையை முடித்துக் கொண்டு வர. கடைசியாக அவருக்கு மூன்று மாதங்கள் வரை செல்லத்தக்கதான அனுமதிகளை வழங்கத் தொடங்கினர்.

கோடையில் தங்கிக் கொள்ள கண்ணாடியால் தடுக்கப்பட்ட ஒரு வீட்டின் தாழ்வாரத்தை அவர்கள் வாடகைக்கு எடுத்தனர். குளிர் காலத்தில் தங்க உள்ளூர் மண்வள அதிகாரி வீட்டிலொரு அறை கிடைத்தது. தேவைப்படும்போது அவர்களை விரட்டி விடுவது எளிது என்பதால் வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டை வாடகைக்கு விடுவதில் நாடுகடத்தப்பட்டு வந்தவர்களுக்கு முன்னுரிமை தந்தனர். சட்டபூர்வமாக வாடகைக்கு குடியிருப்பவர்கள் ஏதாவது சாக்கு சொல்லி வாடகையை ஏய்த்துவிடுவார்கள். அதிகாரிகளும் அவர்களுக்கு ஆதரவாகவே இருப்பார்கள். குடித்தனக்காரர்களை விரட்ட ஒரே வழி அவர்களை உளவாளிகள் எனக்கூறி மாட்டிவிடுவதுதான். பிறகு அதிக வாடகை அல்லது குறைவான பிரச்சினை தருகிற ஒரு நபரைத் தேடுவது. கெடுபிடியானதாக இருந்த ரியல் எஸ்டேட் சந்தை ஏராளமான திருமணங்களை நடத்தி வைத்தது. சொந்தமாக வீடு வைத்திருந்தப் பெண்களுக்குத் திருமண வாய்ப்பு மிகப் பிரகாசமாக இருந்தது. கைது செய்யப்படுவது நிச்சயம் என்ற நிலையில் தமது வீட்டின் மீது அளவில்லாத பாசம் வைத்திருந்த சிலர் அதை விட்டுப்பிரிய மனமில்லாமல் உயிரையே விட்டனர்.

சில காலம் Mம் நாடியாவும் மொழிபெயர்ப்புகள் செய்வதன்மூலம் குறையில்லை எனச் சொல்லும் அளவுக்கு சம்பாதித்தனர். ஆனால் நிலைமை மோசமடையத் தொடங்கியது. பத்திரிகை ஆசிரியர்கள் நாடுகடத்தப்பட்டவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதில் அதிக எச்சரிக்கை காட்டத் தொடங்கியபோது வருமானம் சுத்தமாக நின்றது. Mன் அரசாங்க ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. கண்டனம் தெரிவித்துக்கூட அவர் பெயரை வெளியிட பத்திரிகைகள் அனுமதிக்கப்படவில்லை. அதிகாரிகளுடன் சண்டையிட்டு உள்ளூர் நாடகக்குழு ஒன்றுக்கு ஆலோசகராக இருக்கும் வேலையைப் பெற்றார் M. பேருக்கு ஏதோ சம்பளம் கிடைத்தது. குடிப்பது, நடிகர்களோடு சண்டையில் ஈடுபடுவது தவிர்த்து அவருக்கு வேறு எந்த வேலையும் இருக்கவில்லை.

வழக்கு எந்த நிலையில் உள்ளது என அறிய எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். அவரது கவிதைகள் ஏதேனும் பிரசுரிக்கப்படுமா? தலைநகருக்குப் போய்வர அனுமதிக்கப்படுவாரா? விரும்பினால் இதைவிட்டு வேறொரு நகருக்குச் செல்ல அனுமதி கிடைக்குமா? ஒருவிதத்தில் இந்த நாடு கடத்தல் அவர்களுக்கு மேலான ஒன்றாகவே இருந்தது. சிறைவாசம், சைபீரியா, உழைப்பு முகாம், மரணதண்டனை போன்ற மோசமான

விஷயங்கள் அவர்களுக்கு நிகழவில்லை.

சில சமயம் M நல்ல மனநிலையில் இருப்பார். சிலநேரம் எரிந்து விழுவார். அறைக்குள்ளேயே வேகமாக நடப்பார். நாடியாவிடமிருந்து தப்பிப்பதற்காக சிலநேரம் தெருவுக்கு ஓடியும் விடுவார். மறுபடி கவிதை இயற்றத் தொடங்கியுள்ளார் என்பதே இதற்கு அர்த்தம் என நாடியா புரிந்து கொண்டார். அவர் தனிமையாக இயல்பாக உணரவேண்டும் என்பதற்காக மிகக் குளிராக இருக்கும் நேரங்களில் வெளியே செல்லாமல் உறங்குவதுபோல் அசையாது படுத்திருப்பார் நாடியா. மேசையிலிமர்ந்து பேனா சகிதம் இவற்றை வைத்துக் கொண்டு அவர் எழுதவில்லை. முழுக்கவிதையும் மனதிற்குள் எழுதிப்பார்த்து திருத்தம் செய்து கடைசியில் திருப்தி ஏற்பட்ட பிறகே அவர் அதைச் சொல்ல நாடியா எழுதுவார்.

'நியூ வேர்ல்ட்'ஐத் திறந்து அது ஏதோ பெரிய கரண்டிகளில் காய்கறிக் கூட்டைப் பரிமாறும் உணவு விடுதி என்பது போல "இன்றைக்கு கிளாட்கோவைப் பரிமாறியிருக்கிறார்கள்" என்பார். உண்மையான கவிஞர்கள் எல்லோருமே 1920களில் மிகவும் கூனிக்கிப் போனவர்களாக, எழுதுவதைக் கைவிட்டிருந்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளாக M எதையும் எழுதியிருக்கவில்லை. அக்மதோவாவும் பாஸ்டர்நாக்கும் எழுதிப் பத்து வருடங்களாகின்றன. பிரசுரம் ஆகாமலேயே ஒருவர் எழுதமுடியும். ஆனால் அது நாம் நினைப்பதைவிடக் கடினமானது. கவிதை சாதாரண விஷயமில்லை. கவிதை எழுதுவதற்கு உள்ளுக்குள் இருக்கும் தீ அணையாது எரிந்தபடி இருக்க வேண்டும். அது அணைந்துவிடும்போது ஒருவருக்குள் ஒலிக்கும் கவிதையின் குரலைக் கேட்கக் கூடாமல் போய்விடுகிறது. விட்டில்பூச்சி சொற்கள் ஆத்மாவைச் சுற்றி வட்டமிடுவது நின்றுவிடுகிறது. கவிதை எழுதுவது வாசகர்களைக் கொண்டிருக்கும் விஷயம் மட்டுமல்ல. அந்தக் காலத்தில் மற்றவர்களைப்போல தங்கள் உலகம் அதைப் பற்றிய எதையும் சொல்வதற்கேற்ற வகையில் மாறியிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. உலகின் மாற்றங்களுக்குள் அவர்கள் தொலைந்து போயிருந்தார்கள்.

உங்கள் கவிதைகளை நீங்கள் காப்பாற்றி வைக்க வேண்டுமெனில் அவற்றைப் பிரதியெடுத்துப் பலருக்கும் விநியோகிக்க வேண்டும். அப்போதுதான், நீங்கள் கைது செய்யப்படும் பட்சத்தில் அவை அனைத்துமே கைப்பற்றப்பட்டு அழிக்கப்படாமல் தப்பும். ஆனால் கவிதையை விநியோகிப்பதன் மூலம் நீங்கள் கைது செய்யப்படுவதற்கான சாத்தியங்களையும் அதிகப்படுத்திக் கொள்கிறீர்கள்.

அவர்கள் குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரரது வீட்டின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். சிறுவனான அவர்களது மகன் எப்போதும் வீட்டுக்கும் வாசலுக்கும் ஓடியபடி இருப்பான். வாரம் ஒரு தடவையாவது முன் அறிவிப்பின்றி உளவாளி ஒருவன் M ன் வாசலில் வந்து நிற்பான்.

சமையலறை மேசையெங்கும் பரவிக்கிடக்கும் கையெழுத்துப் பிரதிகளை தனது கோட்டைக்கூட கழற்றாமல் உள்ளே வந்து அமர்ந்து படித்துப் பார்ப்பான். நாடியாவின் கையெழுத்து படிக்க சுலபமாக இருக்கிறதென்பான். சில நேரம் மிகுந்த ஆத்திரத்துக்குள்ளாகிவிடும் M, அவன் கையிலிருக்கும் காகிதங்களைப் பறித்து, தன்னிடம் இருக்கும் ஒரே பிரதி அது என்றாலும் கூட, சுக்கல் சுக்கலாக கிழித்து எறிந்து விடுவார்.

தான் தொழிற்சாலையொன்றில் பணிபுரிபவன் என்பதாக அவன் காட்டிக் கொள்ள முயன்றான். ஆனால் தன் வேடத்தை அவர்கள் நம்ப வேண்டும் என்பதற்கான சிரத்தை எதுவும் அவனிடம் இருக்காது.

"ஏன் இன்று நீ வேலைக்குப் போகவில்லை" என M கேட்பார். இரவு ஷிப்டில் வேலை செய்வது பற்றி பொருத்தமற்ற வகையில் எதையாவது முணுமுணுப்பான்.

M சென்று காவல்துறை உயர் அதிகாரியைப் பார்த்து, அவர்களது பொன்னான நேரம் வீணாகாதபடிக்கு எழுதிய உடனே கவிதைகளைத் தானே அவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கத் தயாராய் இருப்பதாகச் சொன்னார்.

மனம்விட்டு சிரித்த அதிகாரி M தான் கண்காணிக்கப்படுவதாக நினைப்பது அபத்தமானது என்றார். எப்படியோ அதற்குப் பிறகு M வீட்டுக்கு உளவாளிகள் வருவது நின்றது.

மற்றொரு சமயம் தனக்கு வேலை தரப்படவில்லையென்றால் தான் எப்படி உயிர் வாழ்வது என அதிகாரியிடம் கேட்டார் M. அவருக்கு வேலைதரத் தடை எதுவும் இல்லை என்ற அதே நேரம் அவர் உடல் உழைப்பு சார்ந்த வேலைகளுக்குத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்கள். அப்போது அவர் வயது முதிர்ந்தும் மோசமான உடல்நலத்தோடும் இருந்தார். அது மட்டுமல்லாது தேசத் துரோகம் இழைத்த குற்றத்துக்காகத் தண்டனை பெற்றவர் என்பதால் தரையைக் கூட்டும் வேலையைக் கூட யாரும் அவருக்குத் தரமாட்டார்கள். என் தொழிலை நான் மாற்றிக்கொண்டுவிட்டேன். அன்று மாலை வீடு திரும்பியபோது M சொன்னார். இனிமேல் நான் கவிஞனில்லை. நானொரு பிச்சைக்காரன்.

கிரோவ் நீதி விசாரணைகள் பற்றி வானொலியில் கேட்டறிந்த M மிகவும் கவலைக்குள்ளானவர். நிலைமை மிகவும் மோசமாகி வந்தது. தனிநபரது உயிர் அரசாங்கத்துக்கு எந்த வகையிலும் முக்கியமானதல்ல. குற்றமின்மையை நிரூபிக்கப் போதுமான ஆதாரம் கிடைக்காத வழக்குகள் எல்லாமே மரண தண்டனையில் முடிந்தன. அக்மதோவாவும் ஏனையோரும் செய்யவிருப்பது போல செயலர் அவர்களைப் புகழ்ந்து சிறு கவிதையொன்று எழுத முடிவு செய்தார் M. தன்னையே கழித்துக் கொள்ளும் செயல் அது என அவர் உணர்ந்தபோதும் தன் மனைவியையேனும் அது காப்பாற்றும் என நம்பினார்.

காகிதம் பென்சில் சகிதம் சமையலறை மேசையில் அமர்ந்தார். தினசரி

காலை வேளையில், எழுத்தாளர்கள் செல்வதுபோல, மேசையிலமர்ந்து கையில் பென்சிலை எடுத்துக் கொள்வார். அரை மணி நேரம் பயனற்று எரிச்சலில் குமிந்தபின் தன்னையே சபித்துக் கொண்டு படுக்கையில் சென்று படுத்துக்கொள்வார்.

பயங்காவாதம் ஒன்றும் நற்பண்புகள் அறியாதது அல்ல. அதற்குச் சிரிக்க அனுமதியில்லை என்றபோதும் புன்னகைக்க அவசியமிருந்தது. நாள் முழுக்க ஒரே வரிசையில் காத்திருந்த போதும் மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவதில்லை. குமாஸ்தா எவனுக்கும், காவலர்களை அழைக்க வேண்டியிருந்ததில்லை. ஏனென்றால் கவுண்ட்டரில் நீங்கள் ஏதாவது பிச்சினை செய்தால் அடுத்த நொடியே வரிசையில் இருக்கும் மற்றவர்கள் உங்கள் மீது பாய்வார்கள். மாறுவேடத்தில் வந்த கடவுளர்களாக இருக்கக்கூடும் என எண்ணிய கிரேக்கர்கள் அந்நியர்களிடம் மிகுந்த அன்பு பாராட்டுவதுபோல எதிர்ப்பாராமல் வரும் விருந்தினர்கள், போலீஸ் ஏஜெண்டுகளாக இருக்கக் கூடுமென்று அவர்களிடம் பதவிசாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. வசிப்பிடம் மிகக் குறுகலாக இருந்தது. தன் மனைவியை விலக்கிவிட்ட ஒருவன் வீட்டை அவளே வைத்துக் கொள்ள அனுமதித்துவிட்டான் எனில் அவன் ஒரு கலவானாக நடந்து கொண்டுவிட்டதாகக் கருதப்பட்டான். மூத்த அதிகாரிகளைப் பற்றி போலீஸிடம் தகவல் தெரிவித்துப் பதவி உயர்வு பெறுவர் சிலர். அண்டை வீட்டுக்காரர்களைப் பற்றித் தகவல் கொடுத்து வீட்டை விஸ்தரித்துக் கொள்வர் சிலர்.

தான் நினைத்ததை சாதிப்பதில் மட்டுமல்ல, குற்றத்துக்கு உடந்தையாய் இருக்கும் நிலையை உருவாக்குவதிலும் அரசாங்கம் சாதுர்யத்துடன் செயல்பட்டது. ஏதேனும் காகிதத்தில் கையெழுத்திடச் சொல்லும்போது நீங்கள் கையெழுத்திடுகிறீர்கள். மிகச்சிறிய எதிர்ப்பும் மிகப் பெரிய தண்டனைக்கு இட்டுச் சென்றுவிடும். விசாரணைக்கு அழைக்கும்போது, காலையில் செய்தித்தாளில் நீங்கள் பார்த்த எல்லோருக்கும் தெரிந்ததான அந்தக் குற்றச்சாட்டுகளை நீங்கள் அறிந்த நபர்கள் மீது சாட்டுவதன் மூலம் உங்களை நீங்களே விடுவித்துக் கொள்ள முடியும்.

மெத்தனமான, சோம்பல்மிக்க, திருப்திதராத ஒரு ஆர்வத்தை தவிர உங்கள் மீது அவர்களுக்கு வேறெந்த ஆர்வமும் கிடையாது. ஆனால் அவர்கள் பேரார்வத்துடன் கவனிப்பது நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள், எதைப் பேசுகிறீர்கள், எதைப் படிக்கிறீர்கள், எதை எழுதுகிறீர்கள் என்பதைத்தான். இவையெல்லாம் எதை அர்த்தப்படுத்துகின்றன என அவர்கள் பார்ப்பதில்லை. அவர்கள் நோக்கமெல்லாம் அவற்றுக்கு எந்த அர்த்தமும் இல்லை என உறுதி செய்துகொள்வதுதான். அவையெல்லாம் அவர்களுக்கு ஒன்றுமேயில்லை. வெளிப்படையாகவே, உங்களால் அவர்களுக்கு எந்த ஆபத்துமில்லை சிறு சங்கடம் கூட உண்டாவதில்லை. நீங்கள் அமைதியாகும்வரை அல்லது தொலைந்து மறையும்வரை அல்லது மரணமடையும்வரை உங்களைச் சீண்டி

பார்த்து விளையாடவே, தொடரும் உங்களது இருப்பு அவர்களுக்கு ஒரு தூண்டுதலாக இருக்கிறது. பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டது அரசாங்கத்துக்கு அவர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்பதற்காக அல்ல, பல லட்சக்கணக்கானவர்களைப் பயந்து வாழச் செய்வதற்காக.

1937ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி M ம் நாடியாவும் கடந்த மூன்று வருடங்களாகச் சென்றுவரும் அதே காவல்நிலைய ஜன்னலை நோக்கிச் சென்றார்கள். அரசு பயங்கரவாதம் அதிகரித்திருந்ததன் காரணமாக காத்திருப்போர் வரிசை குறைந்திருந்தது. நாடு கடத்தல் போன்ற மிதமான தண்டனைகள் அப்போது அரிதாகவே அளிக்கப்பட்டன. தங்கள் தந்தையருக்காக பழிவாங்கப் புறப்படக்கூடும் என்ற ஒரே காரணத்துக்காக மகன்கள் உழைப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். ஒன்று அவர்களுக்கு ஞானம் கிடைக்கும் அல்லது பழிஉணர்வு மறந்து போகும். காவல் நிலையத்திலிருந்த ஊழியர்கள் அனைவருக்கும் M ஐ நன்கு பரிச்சயமாகியிருந்தது. அங்கு வந்து போவது ஒரு சம்பிரதாயமாக மாறிவிட்டிருந்தது. வரிசையில் அவர் மூன்றாவது ஆளாக இருந்தார். பிறகு இரண்டாவது ஆளாக. அடுத்து அவர்தான். அவர் குமாஸ்தாவின் முன் நின்றார். குமாஸ்தா சொன்னான். அவரது தண்டனை முடிந்துவிட்டது. இனி அவர் சுதந்திர மனிதன்.



IV

மாஸ்கோவில் தங்கள் வீட்டுக்குத் திரும்பியபோது நாடுகடத்தப்பட்டதென்ற ஒரு நிகழ்வு நடக்கவேயில்லை என்பதாக அவர்களுக்குத் தோன்றியது. அவர்கள் வருவதற்கு முன்பே வாடகைக்குக் குடியிருந்தவர் வெளியேறிவிட்டிருந்தார். புழங்கும் அறையின் நடுவே M ம் நாடியாவும் தங்கள் பைகளை வைத்தனர். தேநீர் தயாரித்து அருந்திவிட்டு பிரெஞ்சு ஓவியங்களைக் காண காலரிக்குச் சென்றனர். மாலையில் அக்மதோவா வந்தபோது சமீபத்தில் தான் எழுதிய கவிதைகளை அவருக்கு வாசித்துக் காட்டினார் M. அக்மதோவாவும், அவர்கள் பரஸ்பரம் தம் கவிதைகளுக்கு அளித்துக் கொள்ளும்

உயர்ந்தபட்ச மரியாதையை அவற்றுக்கு வழங்கினார். அவர் வாசித்ததை அப்படியே திரும்பச் சொன்னார்.

அவர்கள் இருவரும் நண்பர்கள், வாழ்நாள் கூட்டாளிகள் என்றபோதும் வேறுபட்ட ஆளுமைகளை உடையவர்கள். அக்மதோவாவுக்கு கவிஞர்களின் தனிப்பட்ட வாழ்க்கைமீது பெரும் ஆர்வமிருந்தது. தன் முன்னிலையில் கவிஞர்களின் தனிப்பட்ட வாழ்வைப் பற்றிப் பேசக்கூடாதென்பார் M. கவிதையை உருவாக்கும்போது M ன் உதடுகள் அசையும். அக்மதோவாவோ தன் உதடுகளை இறுக்கிக் கொள்வார். தனிப்பட்ட வகையில் தன்னைப் பற்றிய மிக உயர்வானதும் பெருமையானதுமான சுய அபிப்ராயத்தைக் கொண்டிருந்தார் அக்மதோவா. ஆனால் கர்வம் மிக்க அலட்சியத்தினால் அவர் சொல்லாது விட்ட விஷயங்களாலேயே அவரது கவிதைகள் சொற்சிக்கனத்தையும், மௌன இடைவெளிகளையும் பெற்று மேம்பட்ட கவிதைகளாகின. தனது தனிப்பட்ட வாழ்வைப் பற்றி அந்நியர்களுடன் வெளிப்படையாகப் பேசுவதை அல்லது வேறெந்த விஷயத்தைப் பற்றியும் அடுத்தவருடன் பேசுவதைத் தனது தகுதிக்குக் குறைவான செயலாக அவர் கருதினார். தன்னைப் பற்றி அவர் எழுத வேண்டியிருந்தது. அதை அவர் ஒருவித இழிவான வகையிலும் அதே நேரம் எழுதப்பட்ட பக்கத்திற்கு ஒரு வினோதமான பெருமை கூடிவிட்டதுபோலத் தோன்றும் வகையிலும் எழுதினார். M ம் நாடியாவும் தங்களது பழைய இலக்கிய நண்பர்களைச் சந்தித்தனர். அவர்களில் பலரிடம் தற்போது பணம் சேர்ந்திருந்தது. அவர்கள் வாகனங்கள், உயர்வகை மரச்சாமான்கள் வாங்கினர். தையற்காரரிடம் சொல்லி பிரத்யோகமாக உடைகள் தைத்துக் கொண்டனர். விருந்து உபசாரம் தொடர்பான வேலைகளுக்கான சந்தை சூடுபிடித்தது. தூக்கியெறியப்பட்ட மேதை ஒவ்வொருவனுக்கும் ஒரு டஜன் உதவாக்கரைகள் பீடமேற்றப்பட்டிருந்தனர்.

இதையெல்லாம் கண்டபோது தங்களது வாழ்வு மாறும் என்ற சிறு நம்பிக்கை அவர்களுக்கு உண்டானது. இழுவைப் படிகள் அமைந்த வீடொன்றுக்கு மாற அவர்கள் விரும்பினர். ஆனால் உள்ளூர் காவல் நிலையத்துக்கென்று முறையாக குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முயன்றபோது அதற்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. நகரத் தலைமையகத்தினால் முயன்றபோது அங்கும் அதே கதைதான். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தபோது பன்னிரண்டு பெரிய நகரங்களில் வசிக்க M க்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அவர் தண்டனை அனுபவித்துவிட்டு வந்த குற்றவாளி என்பதால் எழுபதுக்கும் மேலான நகரங்களில் அவர் வசிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. “எங்கே போகப் போகிறீர்கள்?'' அவர்கள் அவரைக் கேட்டனர். திரும்பவும் வோரோநெஸ்க்க்கு என்றார் M சற்றே தயக்கத்துடன். “நல்லது” என்ற அதிகாரி கடமையுணர்வுடன் அத்தகவலைப் பதிந்து கொண்டபடியே சொன்னான். "ஆனால் அங்கும் நீங்கள் வாழ அனுமதியில்லை". M சொன்னதன் பேரில்

நாடியா சென்று வேறொரு காவல் நிலையத்தில் முயன்றார். அவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. குற்றவாளியின் மனைவி என்பதால் அவருக்கும் அந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும்.

மறுநாள் M எழுத்தாளர்கள் சங்கத் தலைவரைப் பார்க்கச் சென்றார். அவருக்கு ஏராளமான அலுவல்கள் இருந்ததனால் ஒரு வாரத்துக்கு அவரைப் பார்க்க முடியாது என்றார் அவருடைய செயலர். M நம்பிக்கையைக் கைவிட்டு விடவில்லை. தன்னைச்ள சந்திப்பதை ஒரு வாரத்துக்கு தள்ளிப்போகும் அளவுக்கு சங்கத் தலைவருக்கு வேலைகள் இருக்குமென்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒருநாள், அவர்கள் வீட்டில் முன்பு குடியிருந்தவர் வந்தார். நகரத்தில் பலநாட்களுக்கு தனக்கு வேலையிருப்பதாகச் சொன்னார். அவர் சென்று சிலமணி நேரம் கழித்து ஒரு எலக்ட்ரீஷியனுடன் திரும்பி வந்தார். வீட்டுக்குள் அவனை அழைத்து வந்து பல இடங்களில் மின் இணைப்பை சரிசெய்ய வேண்டுமெனக் காட்டினார். M நேராக அவனிடம் சென்று “நடிப்பதை நிறுத்து, என்னைத் தேடித்தானே வந்திருக்கிறாய்?” என்றார். உண்மையில் அவன் அதற்குத்தான் வந்திருந்தான். காவல் நிலையம் போகும் வழியில் M க்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. உடனே ஆம்புலன்சில் திரும்ப அவர் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். மேற்கொண்டு என்ன செய்வதென்று தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்ட ஏஜெண்ட் M அங்கேயே ஓய்வெடுக்கலாம் என்றான். தினமும் வந்து அவரைப் பார்த்துவிட்டுப் போனான் அவன்.

ஒருநாள் இரவு நாடியா விழித்துப் பார்த்தபோது M படுக்கையின் மீது நின்று கொண்டிருந்தார். நாகரீகமெனும் பீதிக்கனவிலிருந்து வெளியே நீண்டிருக்கும் ஒரு சந்து வழியைப் போல அவர் முன்னே ஜன்னல் விரியத் திறந்து கிடந்தது. அதன் வழியே வெளியேறி வானத்துக்கு தாவிவிட வேண்டும் போலத் தோன்றியது. “இதுதான் சரியான நேரம் இல்லையா?” அவர் நாடியாவிடம் கேட்டார். “நாம் இருவரும் ஒன்றாக இருக்கும் போதே.”

மறுநாள் காலை யாருக்கும் தெரியாமல் தங்கள் வீட்டிலிருந்து வெளியேறி நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றனர். ஒருசில பொருட்களை எடுத்துவர நாடியா திரும்பவும் வீட்டுக்கு வந்தபோது அந்தப் பழைய குடித்தனக்காரன் அவரைப் பிடித்து காவல் நிலையத்தில் கொண்டு விட்டான். இன்னும் இருபத்தி நான்கு மணி நேரத்தில் M நகரத்தை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவிடப்பட்டது. அவர்கள் ரயிலைப் பிடித்து அதன் பாதையிலிருந்த கடைசி நிறுத்தத்தில் இறங்கினர். சிறிய அந்த ஸேவ்லோவோ கிராமம் உழவர்கள் சந்தையையும் ஒரேயொரு உணவு விடுதியையும் கொண்டது. அங்கிருந்து மாஸ்கோவுக்குப் பகல் நேரப் பயணங்கள் மேற்கொள்வது சாத்தியமாயிருந்தது.

ரயில் பாதையையொட்டிய நகரங்கள் யாவும்

நாடுகடத்தப்பட்டவர்களாலும், தண்டனை அனுபவித்த குற்றவாளிகளாலும் நிறைந்திருந்தன. தேவை ஏற்படும்போது ரகசிய போலீசார் வந்து அனைவரையும் சுற்றி வளைத்துவிடுவர். பலருக்கு அது அதிர்ச்சியாய் இருந்தது. தங்கள் வழக்குகள் தனி நபர் சம்பந்தப்பட்ட சிறப்பு வழக்குகள் என அவர்கள் நம்பியிருந்தனர். அவர்கள் பட்டப் படிப்பு படித்தவர்கள். செய்தித்தாள் வாசிப்பவர்கள் யாரும் அதே தவறுக்காக சட்டத்தின் கீழ் இரண்டு முறை குற்றம் சாட்டப்பட்டதில்லை என்பதை அறிந்தவர்கள்.

ஒரு பசுவை வளர்த்து கொஞ்சம் பாலை விற்று, கொஞ்சம் பாலை தேவைக்கு வைத்துக் கொள்ளலாம் என நாடியா ஆசைப்பட்டார். ஆனால் அதற்கான முதலீட்டுக்கு வழியில்லை. தனக்கு மட்டும் ஒருமுறை மக்கள்முன் கவிதை வாசிக்க வாய்ப்புக் கிடைத்தால் தன் கவிதைகள் மூலம் மறுபடியும் மக்கள் ஆதரவை வென்றுவிட முடியும் என நம்பினார் M. பிறகு எல்லாமே சரியாகிவிடும். ஆனால் அவர் நகருக்குச் சென்ற ஒவ்வொரு முறையும் எழுத்தாளர்கள் சங்கத் தலைவரை சந்திக்கக் கூடாமல் போனது. ஆனால் அவருடைய உதவியாளரை ஒருமுறை சந்திக்க முடிந்தது. வெண்கடல் கால்வாய்க்குச் சென்று அதைக் கொண்டாடும்விதமாக ஒரு கவிதை எழுதச் சொன்னார் உதவியாளர். பாஸ்டர்நாக்கை அதிகாரபூர்வ எழுத்தாளர்கள் குடியிருப்பில் சந்தித்தனர் அவர் நட்போடு பழகியபோதும் அவர் மனைவி அவர்களோடு ஒரு வார்த்தையும் பேசவில்லை.

நீண்ட நாட்களாக எந்தத் தகவலுமில்லை. ஒரு நாள், மறுநாள் இரவு அவரது கவிதை வாசிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது. குறிப்பிட்ட தினத்தன்று மாலை எழுத்தாளர்கள் சங்கத்துக்குச் சென்றபோது, அந்த நேரத்திலும் செயலர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் கவிதை வாசிப்புப் பற்றி அங்கிருந்த யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

சுவரொட்டிகள் எதும் அங்கே ஒட்டப்பட்டிருக்கவில்லை. வாசிப்பு அரங்கம் பூட்டப்பட்டிருந்தது.

அவர்கள் தங்கியிருந்த ஊரில் சிலர் கைது செய்யப்பட்டதாக எழுந்த புரளியை அடுத்து வேறு நகருக்கு செல்வதே அறிவுள்ள செயல் என முடிவு செய்தனர். தங்களது பழைய நண்பரான பேபெலுடன் அவர்கள் ஆலோசித்தனர். சூழல் கற்றுத் தந்திருந்த தந்திர புத்தியையும் தாண்டி பேபெலுக்குள் இயல்பிலேயே அமைந்திருந்த இரக்க குணம் மேலெழும்பி நின்றது. பேபெல் அரசு அமைத்திருந்த எழுத்தாளர்கள் குடியிருப்பில் தங்கியிருக்காமல் புறநகரில் ஒரு பெரிய வீட்டில் அறையெடுத்து, வெளிநாட்டினருடன் சேர்ந்து தங்கியிருந்தார். இதனால் அவரைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமில்லை. ஒருவரைக் கைது செய்ய இது போதுமானது. அவர்களது நிலையை கவனமுடன் கேட்டார் பேபெல். ஒரே சமயத்தில் அவர்கள் சொல்வதைக் காதால் கேட்டபடியே தனது பார்வையால்

அவர்களை நோட்டம் விடவும் செய்தார். அதன் வழியே பார்க்கும்போது ஒருவர் ஒரு நபராக இருக்கும் அதே நேரம் ஒரு நிகழ்வாகவும் தோற்றம் தரக்கூடியதான இரட்டை லென்ஸ்கள் அமைந்த கண்ணாடியினை அணிந்தவராக அவர் இருந்தார்.

முன்பு ரகசியப் போலீசாருடன் சேர்ந்து குழப்பத்திலேயே தன் நேரமனைத்தையும் செலவழிப்பவராக இருந்தார் பேபெல். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள முயல்கிறார் என மற்றவர்கள் பேசிக்கொண்டனர். உண்மையில் பேபெலுக்குள் இருந்ததெல்லாம் தீராத ஆர்வம்தான். ரகசியப் போலீசாரது மனவோட்டம் அவரைப் பெரிதும் ஈர்த்தது. எங்கு செல்வது பாதுகாப்பாக இருக்கும் என M க்கு பேபெல் அறிவுரை வழங்கினார். அங்குப் போவதற்கு உதவியாகக் கொஞ்சம் பணமும் தந்தார்.

M ம் நாடியாவும் காலினின்னுக்குச் சென்றனர். அங்கிருந்தும் மாஸ்கோவுக்கு வந்து செல்வதை அவர்கள் தொடர்ந்தனர். கடைசியில் ஒருநாள் எழுத்தாளர்கள் சங்கத் தலைவரைச் சந்திக்க M க்கு அனுமதி கிடைத்தது. M சொன்னதைப் பொறுமையுடன் கேட்டத் தலைவர் சமத்திகாவில் உள்ள அரசு ஓய்வு விடுதியில் இரண்டு மாத காலம் தங்கியிருக்குமாறும் அதற்குள் கவிதை வாசிப்பு பற்றி ஒரு முடிவுக்கு வரலாம் என்றும் சொன்னார்.

ரயில் நிலையத்தில் அவர்களுக்காகப் பனிச்சறுக்கு வண்டியொன்று காத்திருந்தது. விடுதியில் அவர்களது அறை மிகவும் சத்தமாக இருக்கிறதென்று சொன்னபோது உடனே அவர்களுக்கு அமைதியான வேறு அறை தரப்பட்டது. மருத்துவர்கள் அவர்மீது மிகவும் பரிவும் அக்கறையும் காட்டினர். மிகச்சிறப்பான முறையில் அவரைக் கவனித்துக் கொண்டனர். ஒருவழியாக தனது துன்பங்கள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன என்ற திருப்தியுடன் அமைதியாக ஜன்னலோரம் அமர்ந்து தன்னுடன் வைத்திருந்த தாந்தேயையும் புஷ்கினையும் வாசிக்கத் தொடங்கினார்.

விடுதியிலிருந்த மற்ற விருந்தினர்களுக்குத் தங்களுக்கிருந்த ஏராளமான அலுவல்களுக்கிடையே இவர்களைப் பற்றி அக்கறை கொள்ள நேரம் இருக்கவில்லை. ஆனால் இவர்கள் வந்து சில நாட்கள் கழித்து அங்கு வந்த பொன்னிறக் கூந்தலையுடைய இளம்பெண் மட்டும் விதிவிலக்கு. அவள் M மிடம் வந்து பேசினாள். அவளுடனான உரையாடல்களின் போது தனக்கு பழக்கமான பலர் அவளுக்கும் பழக்கமானவர்களாக இருந்ததை அவர் அறிந்தார். உயர் பண்பாட்டின் அடையாளமென அவள் கருதுவதாகத் தோன்றிய உற்சாகமானதொரு மொழிநடையை வெகு வெளிப்படையாகப் பயன்படுத்தினாள். எப்போதும் அவள் 'மம்மி', 'டாடி'யைப் பற்றியே பேசினாள். தங்கள் பூனை எப்படித் தன் தந்தையின் மடியில் சுருண்டு படுத்துக் கொள்ளும், விடுதியின் அறைகள் எப்படி நவீனமாகவும் விரும்பத்

தகுந்த வகையிலும் உள்ளன என்பது பற்றியெல்லாம் பேசினாள். தானும் தண்டனைப் பெற்ற ஒரு குற்றவாளிதான் என்றாள். ஐந்து ஆண்டு அரசியல் தண்டனையை அனுபவித்ததாகச் சொன்னாள். விசாரணையின் போது, அவளது மேசையிலிருந்த தடை செய்யப்பட்ட கவிதைகளின் ஆசிரியர் யாரென்று கேட்டபோது அதைச் சொல்லாமல் மயங்கிவிழுவது போல நடித்துத் தப்பிவிட்டாளாம்.

M ன் கையெழுத்துப் பிரதிகள் எங்கிருக்கிறதென அறிவதில் பொன்னிறக் கூந்தல்காரிக்கு ஆர்வம். “அவற்றை யார் வைத்திருக்கிறார்கள்” என அவள் கேட்டாள். தந்திரமாக அவர் தனது, பரம வைரியான அலெக்ஸி டால்ஸ்டாயின் பெயரைச் சொன்னார். இருந்தும் ஒரு அந்நியரிடம் அதிகம் நம்பிக்கை பாராட்டியதற்காக M ஐக் கடிந்து கொண்டார் நாடியா. இந்த நேரத்தில்தான் நகைச்சுவைத் துணுக்குகளை ஒடுக்கத் தானொரு உபகரணம் கண்டுபிடிப்பதாகச் சொல்லத் தொடங்கினார் M. அமைதியாகத் தன் உதடுகளை அசைத்து தொண்டையைச் சுட்டிக் காட்டுவார். உத்தேசமாக வெட்டிவிடும் பொத்தான் இருந்தது. இதுவும் ஒரு நகைச்சுவைத் துணுக்குத்தான். ஆனால் மிக அபாயகரமான ஒன்று.

மே மாதம் ஒன்றாம் தேதி காலை கதவு தட்டப்படும் ஓசை. பின்னால் இரண்டு ஏஜெண்டுகள் வர M ன் டாக்டர் உள்ளே வந்தார். அப்போது புகாரின் விடுவிக்கப்பட்டிருந்தார். M ன் வழக்கில் அவர் முன்பு தலையீடு செய்திருந்தது இப்போது ஒரு கூடுதல் சுமையாக ஆகிவிட்டிருந்தது. கைது ஆணை ஒருவாரம் முன்பு கையெழுத்தாகியிருந்தது. விடுமுறையில் அவர்கள் மும்முரமாக இருந்துவிட்டிருந்தனர். தாமதத்திற்கு அவர்கள் மன்னிப்பு வேண்டினர். நாடியா M ன் பையில் பொருட்களை நிரப்ப ஆரம்பித்தார். "எதற்கு இவ்வளவு பொருட்கள், அவர் எங்களோடு நீண்டகாலம் இருக்கப் போகிறார் என நினைத்தீர்களா, அவரோடு சற்றுப் பேசிவிட்டு உடன் அனுப்பிவிடுவார்கள்." இந்த முறை சோதனைகள் எதுவுமில்லை. அவரது சூட்கேசுடன் அவரை அழைத்துச் சென்றனர். நாடியா M ன் மேல்சட்டையொன்றை கையில் வைத்துக் கொண்டு அப்படியே நின்றார். அவசரத்தில் M எடுத்துச் செல்ல மறந்துவிட்டிருந்த சட்டை அது.

அன்று தனியாக மாஸ்கோ திரும்பினார் நாடியா. M க்கு கொஞ்சம் உணவுப் பொருட்கள் வாங்கி அனுப்புவதற்காக வேண்டி சில புத்தகங்களை விற்றார். M மிடம் காட்டுலஸ், ஹொரேஸ், எதிர்ப்பக்கங்களில் ஜெர்மன் மொழிபெயர்ப்புள்ள ஒவிட் ஆகியவை இருந்தன. பெட்ராச், தாந்தே மூலத்திலும், ஜெர்மனிலும் இருந்தன. விலான், பாதெலெர், வெர்லேன் ஆகியன மூலமொழியில் இருந்தன. இவற்றையும் சிறுவயதிலிருந்து அவர் தன்னுடன் வைத்திருந்த, தனது சொத்துக்களாக அவர் கருதிய புஷ்கின், லெர்மன்தோவ் மற்றும் கோகோல் ஆகியவற்றையும் விற்க முடியாது. காரணம் விடுதலையாகி வரும்போது அவற்றை அவர் கேட்பார். புத்தகங்களை விற்று வாங்கி சிறைக்கு அனுப்பிய உணவுப் பொட்டலம்

திரும்பி வந்துவிட்டது. பொட்டலம் திருப்பப்பட்டதற்கான காரணம் அதன் மீது எழுதப்பட்டிருந்தது. "முகவரியில் இருந்தவர் இறந்துவிட்டதனால்" சில மாதங்கள் கழித்து நாடியாவுக்கு அதிகாரபூர்வ மரணச் சான்றிதழ் வந்தது. வழக்கத்துக்கு மாறான அக்கறையின் வெளிப்பாடு அது. மிகுந்த ஐயத்தை ஏற்படுத்திய அது, தான் விடையளித்ததைக் காட்டிலும் அதிகம் கேள்விகளை எழுப்பியது.

1919ம் ஆண்டு மே தினத்தன்று முதன் முறையாக M ஐ சந்தித்தார் நாடியா. ஆச்சரியப்படும் வகையில் 19 ஆண்டுகள் கழித்து 1938ம் ஆண்டு அதே மே தினத்தன்றுதான் அவர் கடைசியாக அவரைப் பார்த்ததும். எதிர்வந்த ஆண்டுகளில் அந்தக் கடைசி இருபது நிமிடங்களை பலநூறு தரம் திரும்பத் திரும்ப அவர் தனது நினைவில் வாழ்ந்துப் பார்த்தார். எதிர்ப்பு எதையும் காட்டாமல் மௌனமாக தன் மரணத்தை நோக்கி M சென்றது அவருக்கு ஆறவில்லை. அந்த ஏஜெண்டுகளை அவர்கள் மிருகவெறியுடன் எதிர்கொண்டிருக்க வேண்டும். அவர்களைப் பிறாண்டி கூச்சலிட்டிருக்க வேண்டும். அங்கே கொலையொன்று நிகழத் தொடங்கியுள்ளது என்ற உண்மையை அறியச் செய்திருக்க வேண்டும்.

அவர்களுக்கு முன்கூட்டியே தெரியவில்லை. அப்போது கொலைகள் மிகவும் நாசூக்காக செய்யப்பட்டன. இது முடிவா அல்லது உரிய நேரத்தில் நாம் தீர்த்துவிட்டு வரப்போகிற சிக்கலா என அவர்களுக்குத் தெரியவில்லை. கொலை எனும்போதும் அது நியாயமான ஒரு கொலையாகக்கூட இல்லை. அவ்வாறு அதை எடுத்துக் கொள்ளவும் முடியவில்லை. உங்களது கடைசி அபயக்குரலை எழுப்புவதினின்றும்கூட நீங்கள் ஏமாற்றப்பட்டீர்கள். அது, இனி தப்பிக்க வழியில்லை எனும் அளவுக்கு உயர்ந்த மலையின் விளிம்பு ஓரமாக ஒருவனைத் தள்ளி நிற்க வைப்பது போன்றது. சூளைக்குள் மனித நிலக்கரியை அள்ளிப் போட்டுக் கதவையும் மூடிவிட்டு பிறகு நடந்ததற்கு நெருப்பைக் குற்றம் சொல்வது போல.



V

உணவில் விஷம் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தால் அவர் சாப்பிட மறுத்தார். தன்னுடையதில் மட்டுமே விஷம் இருக்கும் என்று பயந்த அவர், சில நேரம் பிற கைதிகளது ரொட்டியை திருடித் தின்பார். இதற்காக அவர் கடுமையாக அடித்து உதைக்கப்பட்டார். தொடர்ந்து அவர் இப்படிச் செய்தபோது அவரது மனநிலை பாதிப்பே இதற்கு காரணம் என்பது தெரியவந்தது. பிறகு சிறையில் அவர்

பரிகாசம் செய்யப்பட்டார் அல்லது கண்டுகொள்ளாமல் விடப்பட்டார். ரேபிஸ் ஊசி போட்டு தன்னை பைத்தியமாக்கி அதை சாக்காக வைத்துத் தன்னை அவர்கள் சுட்டுக் கொன்றுவிடக்கூடும் என்றும் அவர் பயந்தார். அதைப் போன்ற சாக்குகள் அப்போது தேவையாயிருக்கவில்லை என்பதை உணர இயலாத அளவுக்கு அவர் பைத்தியமாக இருந்தார்.

சில நேரம் சிறைக்காவலரிடமிருந்து முழு ரொட்டியை வாங்கிப் பாதியை இன்னொரு கைதிக்குத் தருவார். அவனுக்கு எதுவும் ஆகவில்லையென உறுதி செய்து கொண்ட பிறகே தான் சாப்பிடுவார். சிறையில் அவர் ஒரேயொரு ஆளைத்தான் நம்பினார். அந்த ஆள் பீட்டர்ஸ்பர்க்கில் அவருக்குப் பழக்கமானவன். அவனிடமிருந்து சர்க்கரை வாங்கி சாப்பிடுமளவுக்கு அவனை நம்பினார். பிறகு மெல்ல மற்ற கைதிகளையும் நம்பத்தொடங்கினார். சிறைக்குள் கள்ளத்தனமாகத் தருவிக்கப்பட்ட உணவை அவர்கள் அவருக்குத் தருவார்கள். பிறகு அவரைச் சுற்றி அமர்ந்து, தனது கவிதைகளை அவர் சொல்ல கேட்பார்கள். பிரெஞ்சு கம்யூனிச ரோமென்ட் ரோலன்ந் தன் சார்பாக வாதாடுவார் எனக் கடைசி வரை நம்பினார். நோயாளிகள் அறையில் தனது கடைசி மூச்சை விடும் வரையிலும் ரோமென்ட் ரோலன்ந் என்ற பெயர் அவர் நினைவுகளில் சுழன்றபடியும் உதடுகளில் ஒலித்தபடியும் இருந்தது. உடைகள் களையப்பட்ட அவரது பூதவுடல் மற்ற உடல்களோடு சேர்த்து ஆழம் குறைவான ஒரு பள்ளத்தில் எறியப்பட்டது.

கடைசியில் மனிதன் இறந்துதான் ஆகவேண்டுமென்ற உண்மையை அறிந்த நாம், நமது கடைசித் தருணத்தில்கூட இதை அறியாமலேதான் அவர்கள் மரிக்கிறார்கள் என்ற உண்மையின் மீது நமது தார்மீக அனுதாபத்தை வைக்கிறோம். இது அனுதாபமோ, இரக்கமோ அல்ல. ஒரு அத்தியாவசியம். உண்மையில் மரணம்தான் அந்த இரக்கம். மரித்தவர்களைப் போலவே நாமும் இந்த எளிய உண்மையை அறிந்து கொள்வதில்லை.

அவ்வப்போது, சற்று நேரத்துக்குத் தெளிவான மனநிலையில் இருப்பார். லெஃபர்டோவோவில் சிறையொன்றில் அவரது கவிதை வரியொன்று கிறுக்கப்பட்டிருப்பதைக் கேட்ட அவர் மிகுந்த உற்சாகமடைந்தார். 'நான் நிஜமா? மரணம் என்னையும் தொடுமா?' தற்காலிக முகாம்களில் இருக்கும் போது சிலர் மன அமைதியின்மையைப் போக்கிக் கொள்ள வேண்டி அல்லது கொஞ்ச நேரமாவது திறந்த வெளி சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டி தாமே முன்வந்து வேலை ஏதாவது தரும்படி கேட்பர். ஒருமுறை சக கைதி ஒருவருடன் சேர்ந்து பாறைகளைப் புரட்டிக் கொண்டிருந்தபோது அவர் ஒரு கணம் நின்றார். பிறகு அந்தக் கைதியிடம் சொன்னார். நான் உழைத்து உருவாக்கிய முதல் படைப்பு 'கல்', என்னுடைய கடைசி உழைப்பும் கல்தான்".

●



இருமுறை உயிர்த்தெழுந்த கவிஞர்


முத்துச்செல்வம்

தமிழ்ச் சிறுபத்திரிகையாளர்களுக்கு ஸ்பானிஷில் எழுதுபவர்களைத் தெரியும். ஆனால் மராத்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதிய அருண் கொலாட்கரைத் தெரியாது (ஒரு சிலர் தவிர). பிப்ரவரி 16ம் தேதியன்று டி.டி.கே. சாலையின் 'டேக் சென்டரில் (Tag Centre) மாலை 6 மணிக்கு அருண் கொலாட்கரைப் பற்றிய ஆங்கில நாடகம் இரண்டாவது முறையாக நிகழ்த்தப்பட்டது. ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பினால் தீபாவளிக்கு மறுநாள் ஏற்கனவே ஒருமுறை நிகழ்த்தப்பட்ட நாடகம் மீண்டும் ஒருமுறை.

நாடகம் தொடங்குவதற்கான சூழல். அருண் கொலாட்கரின் ஆங்கிலக் கவிதைகளை வாசித்தனர். ஒரு பத்திரிகையாளர் அருண் கொலாட்கரைச் சந்திக்கும் நேர்காணல் வடிவில் நாடகம் அமைக்கப்பட்டிருந்தது. நாடகாசிரியர் கௌரி ராம்நாராயண் சில மாதங்களுக்கு முன் கவிஞரை கண்ட நேர்காணல் 'இந்து' நாளிதழில் ஒரு ஞாயிறன்று வெளியானது. அந்த வகையில் இது ஒரு சுயஅனுபவம்தான். உரையாடல்களின் வழியே அருண் கொலாட்கர் என்னும் கவி ஆளுமையைக் கொண்டுவர முடிந்திருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விஷயம். சந்திப்புகளுக்கிடையே அவரின் ஆங்கில, மராத்தியக் கவிதைகளின் வாசிப்பும் நிகழ்ந்தது. யஷ்வந்தராவ், பட்டர்பிளை போன்ற அருணின் முதல் தொகுப்பான ஜெஜூரியிலிருந்தும், காலா கௌட், சர்ப்ப சாஸ்திர ஆகிய சமீபத்தைய தொகுப்புகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை பாத்திரங்கள் நடித்தன. சாந்த் துக்காராமின் கவிதைகளையும் அருண் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். அவற்றிலிருந்து சிலவும் அரங்கில் வாசிக்கப்பட்டன. அவரின் மராத்திய கவிதைகளும் விடுபடவில்லை.

கவிதை வாசிப்பின் போது கர்நாடக இசை கலக்கப்பட்டிருந்தது, சூழலை உற்சாகமாக்கி ரசிக்கும்படியாக அமைந்தது. நாடகத்தன்மையை உறுத்தாத அதே சமயம் மேன்மை படுத்திய வகையில் அது இருந்தது. நாடக இசையும் இயக்கமும் முதல்தரம்.

தலைநகரில் மேட்டிமையான சூழலில் ஒரு மக்கள் கவிஞன் ஒரு அந்நிய மொழியில் அன்று இரண்டாம் முறை மீண்டும் உயிர்த்தெழுந்ததை ஒரு சிலர் மட்டுமே அறிய நேர்ந்தது கொஞ்சம் உறுத்தல்தான். நாடகம் முடிந்து வெளிவருகையில் இந்திரா பார்த்தசாரதி, மங்கை ... என தெரிந்த நாடகக்காரர்களின் வருகை ஆறுதல் அளித்தது. முகத்தில் திருப்தி தெரிய நாடகம் நன்றாக இருந்தது என்று இந்திரா பார்த்தசாரதி கூறியது வெறும் பாராட்டல்ல, நிஜம்!





புது எழுத்து 11 தனிச்சுற்றுக்கு மட்டும்